தமிழ்

# இலக்கண சிந்தாமணி.

AN EXPLANATORY

# TAMIL GRAMMAR

WITH

NOTES, EXERCISES & AN APPENDIX
CONTAINING MANY USEFUL FACTS,

FOR USE IN THE

*LOWER SECONDARY FORMS,*

BY

**C. GNANAMANI,**
*C. M. S. Divinity School,*
*Royapettah. Madras.*

**MADRAS**

NTED AT THE PRINCE OF WALES PRESS

*High Road, Choolay.*

**1896.**

ICE 5 ANNAS. —— விலை அணா ௫.

Registered Copy right.

# PREFACE.

The present work has been written under the conviction that Tamil Grammar may be taught in an easier and more interesting style. It is a fact that students of the present day neglect the study of Tamil Grammar and do not give it as much attention as is necessary.

Beginners in Tamil Grammar find the study of it comparatively difficult and uninteresting, for as a rule books in Tamil, unlike those in English, are written in a high style. And this, not unnaturally, leads our young pupils to divert their attention from the subject.

In the following pages an attempt has been made to obviate this difficulty and to present to the student the principles of Tamil Grammar in an easier and more attractive form.

No pains have been spared to simplify the rules to the comprehension of the pupil and to show their application by means of *various* and familiar examples.

It is hoped that a thorough study of the book will enable students to answer all the questions that may be given for the Lower Secondary Examination and make them fit to peruse with ease more difficult books written on the subject.

# TESTIMONIALS.

*From M. R. Ry, D. Perianayakam Pillai,* B. A., *Head Master, St. John's High School for Girls, Nazareth.*

*"I have glanced through the pages of Mr. C. Gnanamani's "Explanatory Tamil Grammar" This book is a useful publication well adapted for the purpose for which it is intended.*

*The subject of Tamil Grammar is simplified so as to suit the comprehension of the pupil who is not far advanced in the study of Tamil Grammar and who generally takes little or no interest in the subject.*

*The plan of the work is simple enough for the purpose in view. A rule is first laid down in the form of Question and Answer followed by well-chosen Examples. The exercises illustratives of the different rules seem sufficiently varied and full, thus adding to the usefulness of the work. The Notes given here and there in the body of the book, and the Miscellaneous points given at the end are such as will afford interest to the beginners.*

*I hope the book will be largely used in all the Lower Secondary Schools and meet with the encouragement it deserves."*

*From the Rev. Ambrose V. Thomas* B. A. *Head Master, Boys' High School, Megnanapuram.*

*"Mr. Gnanamani's Tamil Grammar is in my opinion, second to no work that has been written on the subject. * * * * *"*

---

*From the Rev. W. Lutze, manager of B. G. M. Schools, Kaity.*

*"Mr. C. Gnanamani Asst. Master in the Basel German Mission Training School, Kaity has written a Tamil Grammar with many useful exercises for Lower Secondary Students He has used the manuscript in teaching Tamil Grammar in the above mentioned School.*

*It would be a very useful class-book as far as Iam able to judge, and I wish him every success in his purpose. * * * * *"*

---

இலக்கண சிந்தாமணி.

This book is approved by the Director of Public Instruction, as a Text-book for the first three forms.

*See Page 504. Fort St. George Gazette 5th November 1895.*

*First Form Pages 52 to 65 Nouns.*
*Second „ „ 66 to 89 Verbs.*
*Third „ The whole Book.*

கடவுள் துணை.

# இலக்கண சிந்தாமணி.

## முகவுரை.

1. தமிழ்ப்பாஷை எத்தனை வகைப்படும்?

செந்தமிழ், கொடுந்தமிழென இருவகைப்படும்.

செந்தமிழ்=சுத்தத்தமிழ், கொடுந்தமிழ்=இலக்கணமீறியதமிழ்.

2. தமிழ்ப்பாஷையைப் பிழையறப் பிரயோகிக்கக் கற்பிக்கும் நூலெது?

தமிழிலக்கணம்.

3. அது எத்தனை பங்குகளுள்ளது?

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சொற்றொடரதிகாரம், யாப்பதிகாரமென நான்கு பங்குகளுள்ளது.

முதல் மூன்றுபாகங்களை மாத்திரம்
இப்புத்தகத்தில் கூறினோம்.

# 1. எழுத்ததிகாரம்.

4. எழுத்ததிகாரமாவதென்ன?

எழுத்துகளின் தொகை வகை விகாரமிவற்றைக் கூறும்பாகமே எழுத்ததிகாரமாம்.

## 1. எழுத்தியல்.

5. எழுத்தாவதென்ன?

யாதொரு சப்தத்தைக்காட்டப் பிரயோகிக்கும் வரிவடிவமாம்.

6. **தமிழ் எழுத்துகள் எத்தனை விதப்படும் ?**
உயிர், மெய், உயிர்மெய், ஆய்தமென நான்கு விதப்படும்.

7. **உயிரெழுத்தெவை ? அப்பெயர்வந்ததெப்படி ?**
**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ,** இப்பன்னிரண்டும் உயிரெழுத்துகளாம். இவை ஒவ்வொன்றும் தானாய் உச்சரிக்கக்கூடியதாயும், தொனியற்ற மெய்க்குத் தொனி கொடுப்பதாயு மிருக்கிறது.

8. **உயிரெழுத்துகள் எத்தனை விதப்படும் ?**
குறில், நெடில், சுட்டு, வினாவென நான்கு விதப்படும்.

9. **குறில் அல்லது குற்றெழுத்தெவை ?**
குறுகிய ஓசையுடைய **அ, இ, உ, எ, ஒ,** இவ்வைந்துமாம்.

10. **நெடில் அல்லது நெட்டெழுத்து எவை ?**
நெடிய வோசையுள்ள **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ,** இவ்வேழுமாம்.

11. **சுட்டெழுத்தெவை ?**
**அ, இ, உ,** இவை யாதொரு சொல்லின் முதலெழுத்தாய்நின்று சுட்டுபொருளைத்தருமாயின் சுட்டெனப்படும்.

(அவை அகசசுட்டாயும் புறசசுட்டாயும் வரும்.)

12. **அகச்சுட்டு புறச்சுட்டாவதென்ன ?**
சுட்டெழுத்துஞ் சேர்ந்தே தனிமொழியாயின் அகச்சுட்டாம்.
சுட்டெழுத்துசேரத் தொடர்மொழியாயின் புறசசுட்டாம்.

☞ தனிமொழி தொடர்மொழி என்பவை எவையென்று 77-ம் சூத்திரத்திற்காண்க.

(உதாரணம்.) 1. அவன், இது, உன்—அகச்சுட்டு.

*Note*.—1. இவைகளில் சுட்டெழுத்துகளாகிய அ, இ, உ, இம்மூன்றையும் நீக்கப் பொருள்கெடுவது காண்க.

2. அம்மரம், இந்நாள், உவ்வீடு—புறச்சுட்டு.

*Note*.—2. இவைகளில் சுட்டெழுத்துகளை நீக்கினும் வருமொழியின் பொருள்கெடாது.

*Note*.—3. அகரம் தூரத்திலுள்ளதையும், இகரம் சமீபத்திலுள்ளதையும், உகரம் இடையிலுள்ளதையுங் காட்டும்.

### 1. அப்பியாசம்.

அது, அண்ணன், இவை, இன்று, அவள், அத்தருணம், இடி, அருமை, உவன், இங்ஙனம், உங்கள், உதயம், உக்கொற்றன், இப்பலகை, அங்ஙனம், உமக்கு, அகலம், அச்சோலை.—இவைகளில்வரும் அ, இ, உ க்களில் சுட்டெழுத்துகளெவை? என்னசுட்டு?

---

13. வினாவெழுத்தெவை?

சொல்லின் முதலிலாவது கடையிலாவது அகத்துறுப்பா யல்லது புறத்துறுப்பாய் நின்று வினாப்பொருளைத்தரும் ஆ, எ, ஏ, ஓ, என்னும் உயிரெழுத்துகளும் யா என்னும் உயிர்மெய்யுமேயாம.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | வந்தானா | இதில் ஆ ஈற்றில் புறத்துறுப்பு. |
| | போனானோ | இதில் ஓ ஈற்றில் | ,, |
| | கொற்றனே | இதில் ஏ ஈற்றில் | ,, |
| | எவன் | இதில் எ முதலில் அகத்துறுப்பு. |
| | எது | இதில் எ முதலில் | ,, |
| | | இதில் யா முதலில் | |

எக்காலம் இதில் எ முதலில் புறத்துறுப்பு.
யாங்ஙனம் இதில் யா முதலில் ,,

2. அப்பியாசம்.

யாவன், அண்ணனு, மாமா, எந்த, எருது, மீனே, மன்னனே, என், எப்பொழுது, யானே, அவனு, எடு, என்ன, எங்ஙனம்.—இவைகளில் வினவெழுத்துகளை எடுத்துக் காட்டி ஒவ்வொன்றும் அகத்துறுப்பாய் நிற்கின்றதோ புறத்துறுப்பாய் நிற்கின்றதோவென்றுங் கூறுக.

---

14. மெய்யெழுத்தெவை ?

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்கிற பதினெட்டுமேயாம்.

(இவை ஒற்று உடல் எனவும் படும்.)

15. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும் ?

*a*. வல்லினம்=க், ச், ட், த், ப், ற்
*b*. மெல்லினம்=ங், ஞ், ண், ந், ம், ன்
*c*. இடையினம்=ய், ர், ல், வ், ழ், ள்—என மூவ்வகைப்படும்.

*Note*.—உயிரினம், வல்லினம், மெல்லினம், இடையினம் இந்நான்கும் நாற்கணமெனப்படும்.

16. ஆய்தமாவதென்ன ?

ஃ இந்த வடிவமுள்ளதாய்க் குற்றெழுத்துக்குப் பின்னும், உயிரோறிய வல்லெழுத்துக்கு முன்னும் வருமோரொழுத்தாம்.

(உ-ம்.) இஃது, எஃகு, மஃகான்.

17. உயிர்மெய்யெழுத்தெவை ? எத்தனை ?

18 மெய்யின்மேலும் 12 உயிர்களுங் கூடுவதாலாகிய 216 எழுத்துகளும் உயிர்மெய்யெழுத்

(உ-ம்.) க்+அ=க, ச்+ஆ=சா, ட்+இ=டி.

18. முதலெழுத்து சார்பெழுத்து என்பவை எவை ?

உயிர் 12, மெய் 18 ஆகிய முப்பதும் முதலெழுத்துகள். அவைகளைச்சார்ந்துவந்த மற்றவையெல்லாம் சார்பெழுத்துகளாம்.

19. அளபெடையென்பதியாது ? எத்தனைவகைப்படும் ?

பாட்டில் ஓசைகுறைந்த எழுத்தை நீட்டிச்சொல்வது அளபெடையாம், அதுஉயிரளபெடை ஒற்றளபெடையென இருவகைத்தது.

20. உயிரெழுத்துகள் அளபெடுப்பது எப்போது ?

பாட்டில் ஓசை குறைந்த மொழியின் முதல் இடை கடையிலுள்ள நெட்டெழுத்து தன் மாத்திரையில் மிகும்.

(உ-ம்.) 1. "ஓ ஓதல் வேண்டும்"

2. "உரன்நசை இ உள்ளம்"

3. "படாஅ விடுபோக்கறிந்து"

(இஃதன்றி இன்னிசை சொல்லிசைகளாகவும் அளபெடுக்கும்.)

21. மெய்யெழுத்துகள் அளபெடுப்பதெப்போது ?

பாட்டில் ஓசைகுறைந்தவிடத்திலுள்ள ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், இவைகளிலொன்று அளபெடுப்பதுமுண்டு.

(உ-ம்.) "நங்ங்களங்கறுப்பாம்."

22. எழுத்துகள் தத்தம் மாத்திரையிற் குறுகுவதுமுண்டோ? அவை எவை ?

(a.) தனிக்குறி லணையாத வல்லெழுத்தின்மேலேறிய உகரங்குறுகும். அதுகுற்றுகரமென்னப்படும்.

*Note.*—1. தனிக்குறிலணையாத = ஒரு குற்றெழுத்தைச் சேராத (ஒரு குற்றெழுத்தைச் சேராத என்றதனால் இரண்டு அல்லது அதிகமான குற்றெழுத்துகளைச் சேர்ந்ததும், நெட்டெழுத்துகளைச் சேர்ந்ததும், குறில் நெடில் கலந்து சேர்ந்ததுமான—என்பது தெளிவாகிறது.)

*Note.*—2. குற்றுகரமொழியின் கடையெழுத்திற்கு முந்தின வெழுத்தைக் கொண்டு அது இன்னதொடர்க் குற்றுகரமென்றறியலாம்.

(உ-ம்.)

1. வீடு—நெடிற்றொடர்க் குற்றுகரம்.
2. சுக்கு—வன்றொடர்க் குற்றுகரம்.
3. வண்டு—மென்றொடர்க் குற்றுகரம்.
4. சால்பு—இடைத்தொடர்க் குற்றுகரம்.
5. அழகு—உயிர்த்தொடர்க் குற்றுகரம்.
6. கஃசு—ஆய்தத்தொடர்க் குற்றுகரம்.

*Note.*—3. இரண்டெழுத்தே யுள்ள குற்றுகர மொழியில் முதலெழுத்து நெட்டெழுத்தாயிருக்கும்; அவ்வுகரம் நெடிற்றொடர்க் குற்றுகரம். இரண்டிற்கதிகமான வெழுத்துகளுள்ள குற்றுகரமொழியில் கடையெழுத்திற்கு முந்தினது நெட்டெழுத்தாயிருப்பினும் உயிர்த்தொடர்க் குற்றுகரமே.

(உ-ம்.) நாடு—நெடிற்றொடர்க் குற்றுகரம்.
தராசு—உயிர்த்தொடர்க் குற்றுகரம்.

*Note.*—4. தனிக்குறிலணைந்த வல்லினத்தையும், தனிவல்லினத்தையும், மெல்லின இடையினங்களையுஞ் சேர்ந்துவரும் உகரம் முற்றுகரமென்னப்படும்.

(உ-ம்.) புது, சு, மனு, சவ்வு.

(*b*) குற்றுகரத்தின் பின் யகரம்வரில் உகரங்கெட்டு இகரந்தோன்றும். அது குற்றியலிகரமென்னப்படும்

(உ-ம்.) முரட்டு+யானை=முரட்டியானை.

(*c*) சிலவிடத்து ஐகாரமும் ஔகாரமும் தத்தம் மாத்திரையில் குறுகும்.

(உ-ம்.) மலைவு=மலவு; ஔவியம்=அவ்வியம்.

(*d*) ணகர னகரவொற்றுகளின் பின்னும, வகரவொற்றின் முன்னும் வருகிற மகரங் குறுகும்.

(உ-ம்.) மருண்ம்; போன்ம்; வையகமும் வானகமும்.

(*e*) லகர ளகர வொற்றுகளின் பின் தகரம்வரில் அவ்வொற்றுகள் ஆய்தங்களாம்; அவ்வாய் தங்கள் தம்மாத்திரையில் குறுகும்.

(உ-ம்.) கல்+தீது=கஃறீது.
முள்+தீமை=முஃடீமை.

ஆகக் குறுக்கங்கள் ஆறு.— குற்றுகரம், குற்றிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பவையே.

23. மாத்திரைக்கு அளவு என்ன ?

கண்ணிமைக்கச் செல்லும் பொழுதே மாத்திரைக் களவு.

3- மாத்திரை உயிரளபெடைக்கு.
2- ,, நெட்டெழுத்துக்கு.
1- மாத்திரை குற்றெழுத்து, ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ஒற்றளபெடை இவைகட்கு.
$\frac{1}{2}$ ,, மெய், குற்றியலிகரம், குற்றுகரம் இவைகட்கு.
$\frac{1}{4}$ ,, மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் இவைகட்கு.

(புறனடை.) பண்டமாற்று, விளி, இசை, புலம்பல் இவைகளில் உயிரும் மெய்யும் தங்கள் மாத்திரையின் வளவுமீறி நீண்டொலிக்கும்.

(உ-ம்.) 1. பயறு......பயறு (பண்டமாற்று)
2. சுந்தரம்......சுந்தரம் (விளி)
3. "என்......ஞேபலநினைவாலும்" (இசை)
4. ஐயோ......அநியாயம் புலம்பல்)

### 3. அப்பியாசம்.

1. உயிரளபெடை ஒற்றளபெடைகளுக்கு வேறு உதாரணங்கள் தருக.

2 கழுகு, முறுக்கு, சவ்வு, புளிப்பு, நடு, தள்ளு, சங்கு, நண்டு, தெள்கு, மிலாறு, உண்ணு, அம்பு, கலசு, பசு, பசாசு, தூசு, அணு, பயறு, நஞ்சு, அறு, ஆறு, எரு, வாகு, நான்கு, பல்லு, பலாசு;—இவைகளில் குற்றுகரங்களை யெடுத்துக்காட்டி ஒவ்வொன்றும் இன்ன தொடரெனவுங் கூறுக.

3. ஆறு குறுக்கங்கட்கும் உதாரணங்கள் தருக.

---

24. போலியாவதென்ன ? எத்தனை வகைப்படும் ?

இலக்கணமாய் வந்த ஓரெழுத்தைத் தவிர்த்து வேறு எழுத்தைச் சேர்த்தும பொருளொாது நடப்பது போலியாம். அது மொழிமுதற் போலி, மொழியிடைப்போலி, மொழிகடைப போலி, எழுத்துப்போலியென நான்கு வகைப்படும்.

25. மொழிமுதற்போலியைப்பற்றிய சூத்திரங்களெவை ?

(a) சகர ஞகர யகரங்களின் முன்வரும் அகரம ஐகாரத்தை யொத்தொலிக்கும்.

(உ-ம்.) பசல்=பைசல்; மஞ்சு=மைஞ்சு; மயல்=மையல்.

(b) சிலசொற்களின் முதலிலுள்ள நகரத்துக்கு ஞகரம் போலியாம்.

(உ-ம்.) நாயிறு=ஞாயிறு, நண்டு=ஞண்டு.

26. மொழியிடைப்போலியைப்பற்றிய சூத்திரங்களெவை?

(a) சில சொற்களின் நடுவில் உள்ள அகரம் சகர ஞகர யகரங்கள் வரின் ஐகாரத்தை யொத்தொலிக்கும்.

(உ-ம்.) அமச்சன்=அமைச்சன், இலஞ்சி = இலைஞ்சி, அரயன்=அரையன்.

(b) சில சொற்களின் நடுவில் உள்ள தகரத்துக்குச் சகரம் போலியாம்.

(உ-ம்.) தைத்தான்=தைச்சான்.

(c) தனிமொழிகளின் இடையிலுள்ள நகரத்துக்கு ஞகரம் போலியாம். நகரத்துக்கு முன் ஐகாரமும் பின் தகரமுமிருந்தால் அவற்றிற்கு முறையே அகரமும் சகரமும் போலியாம்.

(உ-ம்.) 1. நீந்தல்=நீஞ்சல்.
2. ஐந்து=அஞ்சு.

27. மொழிகடைப்போலியைப்பற்றிய சூத்திரங்களெவை?

(a) அஃறிணைப்பெயரின் இறுதியிலிருக்கும் மகரத்திற்கு னகரம் போலியாம்.

(உ-ம்.) நலம்=நலன், குணம்=குணன்.

(b) சில குற்றுகரங்கட்கு அர் என்பது போலியாம்.

(உ-ம்.) வண்டு=வண்டர், சுரும்பு=சுரும்பர்.

(c) சிலபெயர்களினிறுதியிலுள்ள லகரத்துக்கு ரகரம் போலியாம்.

(உ-ம்.) சாம்பல்=சாம்பர்.

(d) சில சொற்களினீற்று லகரத்துக்கு ளகரம்

(உ-ம்.) மதில்=மதிள்.

28. எழுத்துப்போலியைப்பற்றிய சூத்திரமெது ?

அகரத்தோடு இகரமாவது யகரமாவது ஒத்துப் பொருந்த இரண்டுங்கெட்டு ஐகாரமும், அகரத்தோடு உகரமாவது வகரமாவது ஒத்துப் பொருந்த இரண்டுங்கெட்டு ஔகாரமும் ஒலிக்கும்.

(உ-ம்.) அஇ=ஐ, அய்=ஐ, அஉ=ஔ, அவ்=ஔ.

4. அப்பியாசம்.

1. வைத்தான், நயம், மைந்தன், மவுனம், மனம், வாத்தியம், செதில், இடக்கு, குணம், ஆலயம், உரம், மெல்ல, ஒய்ந்தது, அய்யா, அவுஷதம், மாது, குடல், சவுக்கியம், பொதும்பு, வவுகை:—இவை ஒன்றிற்கும் போலி அமைத்தெழுதுக.

2. அவை இன்ன போலியெனவுங் கூறுக.

---

29. எழுத்துச்சாரியைகள் எவை ?

மெய்கள் அகரச்சாரியையும், உயிர்நெடில்கள் காரசசாரியையும், அவற்றுள் ஐ, ஔ என்பவை காரம், கான் என்னும் சாரியைகளையும் உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம், கான், கரம் என்னுஞ்சாரியைகளையும்பெறும்.

(உ - ம்.)

| | |
|---|---|
| ச் என்பது சகரம் | எனவும் |
| ஆ என்பது ஆகாரம் | எனவும் |
| ஐ என்பது ஐகாரம், ஐகான் | எனவும் |
| ஔ என்பது ஔகாரம், ஔகான் | எனவும் |
| அ என்பது அகாரம், அஃகான், அகரம் | எனவும் |

30. வட எழுத்துக ளென்பவை எவை ?

தமிழில் வழங்கிவரும் சமஸ்கிருத எழுத்துகளாம்.

அவையாவன:—க்ஷ, ஷ, ஸ, ஜ, ஹ.

க்ஷகரத்துக்குப்பதிலாக-க்க, ட்ச என்பவைகளும்
ஷகரத்துக்குப்பதிலாக-ட, ச என்பவைகளும்
ஸகரத்துக்குப்பதிலாக-த, ச என்பவைகளும்
ஜகரத்துக்குப்பதிலாக-ச, ய என்பவைகளும்
ஹகரத்துக்குப்பதிலாக-அ, க என்பவைகளும் வழங்கும்.

(உ - ம்.)

| | | |
|---|---|---|
| சாக்ஷி | சாக்கி | சாட்சி |
| விஷம் | விடம் | விசம் |
| மாஸம் | மாதம் | மாசம் |
| கஜம் | கசம் | கயம் |
| ஹானி, மோஹம் | ஆனி | மோகம் |

### 5. அப்பியாசம்.

புருஷன், ஜனம், ஸாகசம், நஷ்டம், ஜாதி, புஜம், விஷயம், மஹா, பக்ஷி, சாஹித்தியம், ஹிமாஸலம், சகஜம், ராஜா இவைகளிலுள்ள வடவெழுத்துகளை நீக்கித் தமிழ் எழுத்துகள் வைக்க.

---

31. மொழிக்கு முதலெழுத்தாய் வருவன எவை ?

உயிர் பன்னிரண்டும் க, ச, த, ந, ப, ம, ய, ஞ, வ என்னும் ஒன்பது மெய்யெழுத்துகளும்வரும்.

(உ - ம்.) அறம், ஆரம், இது, ஈனம், உலை, ஊனம், எது, ஏது, ஐந்து, ஒன்று, ஓட்டம், ஔவியம்.

(a) மேற்கூறிய ஒன்பது மெய்களில் க, ச, த, ந, ப, ம இவ்வாறும் 12 உயிரோடுங்கூடி மொழிக்கு முதலில் வரும்.

(b) யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துகளோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) யவனம், யாழ், யுகம், யூகம், யோகி, யௌவனம்.

(c) ஞகரம் அ, ஆ, இ, எ, ஒ என்கிற ஐந்துயிரோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) ஞமலி=நாய், ஞாயிறு=சூரியன், ஞிமிறு=வண்டு, ஞெளிர்=ஒலி, ஞொள்கல்=அலைதல்.

(d) வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்கிற எட்டுயிரோடு மொழிக்கு முதலில்வரும்.

(உ-ம்.) வலை, வாழை, விழி, வீடு, வெளி, வேலை, வையம், வௌவால்.

(e) ரகரத்தை முதலிலுடைய வடமொழிகள் தம் முன் அகர இகர உகரங்களிலொன்று வரப்பெற்றுத் தமிழில் வழங்கும்.

(உ-ம்) ரங்கன்=அரங்கன், ராகம்=இராகம், ருசி=உருசி.

(f) லகரத்தை முதலிலுடைய வடமொழிகள் தம் முன் இகர உகரங்களிலொன்று வரப்பெறும்.

(உ-ம்.) லவணம்=இலவணம், லோகம்=உலோகம்.

(g) யகரத்தை முதலிலுடைய வடமொழிகள் தம் முன் இகரம் வரப்பெறும்.

(உ - ம்) யமன்=இயமன்.

## 6. அப்பியாசம்.

கௌ, சௌ, தௌ, நொ, நோ, நு, ஞி, யூ, வை, வௌ இவ்வெழுத்துகளை முதலிலுடைய மொழிகளுக்கு உதாரணங்கள் தருக.

32. மொழிக்கு இறுதியில் வருமெழுத்துகளெவை ?
(a) எகரமொழிந்த பதினொருயிர்களும்வரும்.
(உ-ம்.) பற, புரு, பனி, தீ, பசு, பூ, தே, தலை, நொ, கோ, கௌ.
(b) ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்கிற பதினொருமெய்யும்வரும்.
(உ-ம்.) உரிஞ், மண், பொருந், மதம், பொன், சேய், நீர், கால், தெவ், தாழ், வாள்.

7. அப்பியாசம்.

ஞ், ந், ய், வ், ழ், ள்:—இவை மொழிக்கு இறுதியில்வர வகைக்கு இரண்டு உதாரணந்தருக.

## 2. பதவியல்.

33. பதமாவதென்ன ?
ஒன்று அல்லது ஒன்றுக்கதிகமான எழுத்துகள யாதொரு பொருளுடையனவாய்க் கூறப்படின் பதமென்னப்படும். அது பகாப்பதம் பகுபதமென இருவகைப்படும்.

34. பகாப்பதமாவதெது ?
பகுதி விகுதி முதலிய உறுப்புகளாயப பகுக்கக் கூடாத மொழியே பகாப்பதமாம்.
(உ-ம்) பெயர்ப்பகாப்பதம்......மண்.
வினைப்பகாப்பதம்......நட.
இடைப்பகாப்பதம்.....மேல்.
உரிப்பகாப்பதம்........நனி.

35. பகுபதமென்பதெது ?
பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்கிற ஆறுஉறுப்புகளாகப் பகுகக

க்கூடிய மொழியே பகுபதமாம். அதுபெயர்ப்பகுபதம், வினைப்பகுபதமென இருவகைப்படும்.

*Note.*—ஆறு உறுப்பும்பெறுமல் பகுதியுடனே இரண்டொரு உறுப்புகளை மாத்திரம்பெற்ற பகுபதங்களுமுண்டு.

36. பெயர்ப்பகுதி வினைப்பகுதியென்பவை எவை ?

(*a*) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்ஆகிய இவ்வாறினடியாகவும் பிறந்த பெயர்ச்சொற்களில் முதலில் நிற்கும் பகாப்பதமே பெயர்ப்பகுதியாம்.

(உ-ம்.) பொருட்பெயர்ப்பகுபதம்-பொன்னன்-பொன்-பகுதி.

| | | | |
|---|---|---|---|
| இடப்பெயர்ப்பகுபதம் | - நாட்டான்- | நாடு | ,, |
| காலப்பெயர்ப்பகுபதம் | - யுகத்தான்- | யுகம் | ,, |
| சினைப்பெயர்ப்பகுபதம் | - மார்பன் | - மார்பு | ,, |
| குணப்பெயர்ப்பகுபதம் | - கரியன் | - கருமை | ,, |
| தொழிற்பெயர்ப்பகுபதம் | -தட்டான் | - தட்டு | ,, |

(*b*) வினைசொல்லில் ஏவலாய் முதலில்நிற்கும் பகாப்பதமே வினைப்பகுதியாம. அது முதனிலை எனவும்படும்.

(உ-ம்.) சென்முன், கண்டாய்—செல், காண்-பகுதிகள்.

## 8. அப்பியாசம்.

1. ஓரெழுத்தொருமொழியாய் வருவதற்கு ஆறு உதாரணங்கள் தருக.

2. பெயர் வினை இடை உரிப்பகாப்பதங்களுக்கு உதாரணங்கள் தருக.

3. மன்று, சென்று, ஓடுகிறுன், புது, கண்டு, கண்டு, வடம், கற்ருேர், சேனை, நொண்டி, என, சா, என்று, நீ, கால், [illegible] கை, தீ, மலையாளி, உன்னுடைய:—

இவைகளில் பகுபதங்களெவை? பகாப்பதங்களெவை ? பகாப்பதங்களின் வகையின்னதெனவுங் கூறுக.

4. கிழவன், செங்கல், மூக்கன், கணக்கன், சீனத்தான், வெள்ளைக்காரன், பணக்காரி, வானவர், தோளான், வெந்நீர்:—இப்பெயர்ப்பகுபதங்கள் இன்னின்ன காரணம்பற்றி வந்தவையெனவும், ஒவ்வொன்றின்பகுதி யின்னதெனவுங்கூறுக.

5. கேட்டு, தெற்றிற்று, செத்தான், கொன்ற, போட்டு, உண்டு, கையிகந்து, அடக்கம், தேற்றரவு, அகன்ற, தேர்ந்து, பேறு, ஓட்டம், நோன்பு, வெந்த, ஆனேன், நோகிறது, விண்ட, வெகுளி, காவல், நல்கூர்ந்து:— இவைகளில் பகுதிகளெவை ?

---

37. விகுதியாவதென்ன ?

திணை பால் இடம் முதலியவற்றைக் காண்பித்து ச்சொல்லின் ஈற்றில்நிற்கும் உறுப்பாம்.

(a) பெயர் விகுதிகளெவை ?

| | | |
|---|---|---|
| அன்–கண்ணன் | அ–பழிப்பன | கள்–கோக்கள் |
| ஆன்–கையான் | து–யாது | வை–இவை |
| அள்–குழையள் | இ–பொன்னி | கை–தங்கை |
| ஆள்–மனையாள் | மார்–குருமார் | பி–தம்பி |
| அர்–நாடர் | மன்–வடமன் | ன்–பிறன் |
| ஆர்–நாட்டார் | மான் பெருமான் | ள்–மகள் |
| | | ர்–பிறர் |

(b) பண்புப்பெயர் விகுதிகளெவை ?

| | |
|---|---|
| மை–பசுமை | றி–நன்றி |
| ஐ–தொல்லை | று–நன்று |
| பு–நண்பு | அம்–நலம் |
| கு–நன்கு | பம்–திட்பம் |
| | நர்–நன்னர் |

(c) தொழிற்பெயர் விகுதிகளெவை ?

| | | |
|---|---|---|
| தல்-படித்தல் | கு-போக்கு | வி-தோல்வி |
| அல்-தேடல் | பு-படிப்பு | உள்-செய்யுள் |
| அம்-தேட்டம் | உ-வரவு | காடு-சாக்காடு |
| ஐ-கொலை | தி-மறதி | பாடு-கோட்பாடு |
| கை-செய்கை | அரவு-தேற்றரவு | மை-கொல்லாமை |
| வை-பார்வை | சி-எழுச்சி | து-வருவது |

(d) பெயரெச்ச விகுதிகளெவை ?

அ-வந்த | உம்-படிக்கும்.

(e) வினையெச்ச விகுதிகளெவை ?

| | |
|---|---|
| உ-நடந்து | ஆல்-போனால் |
| இ-தேறி | மல்-வராமல் |
| ய்-போய் | மே-மறவாமே |
| அ-படிக்க | து-அல்லது |
| கு-உண்ணற்கு | றி-அன்றி |
| இன்-போயின் | |

(f) வினைமுற்று விகுதிகளெவை ?

126-ம் சூத்திரத்திற் கண்டுகொள்க.

(g) வெவ்வேறு பொருள்படும் விகுதிகளுமுண்டோ ?

| வினைமுதற்பொருள் | செயப்படுபொருள் | கருவிப்பொருள் |
|---|---|---|
| (1) இ-அலரி | ஊருணி | மண்வெட்டி |
| ஐ-பறவை | தொடை | பார்வை |
| அம-எசசம் | தொல்காப்பியம் | நோக்கம் |

(2) விடு, ஒழி—துணிவுப்பொருள். கொன்றுவிடு, தின்றொழி. கோள்—தற்பொருட்டுப்பொருள். பார்த்துக்கொள். படு, உண்—செயப்பாட்டுப்பொருள். அடிபட்டான். கொலையுண்டான். மை—தன்மைப் பொருள். ஆண்மை. இரு, இடு—பகுதிப்பொருள். எழு

### 9. அப்பியாசம்.

1. எது, எடுப்பது, வந்து, இடைச்சி, தந்தை, சீர்மை, கெடுதி, வளர்ச்சி, ஆற்றல், மாட்சி, சோமான், சிந்தி, சந்தனம், தந்தோமே, மறவாமே, உண்பான்: — இவைகளில் விகுதிகளெவை? என்ன விகுதிகள்?
2. கலைகொத்தி, பட்டை. ஓடை, தோட்டம், நிலை, ஈயோட்டி, பல்லுக்குத்தி, ஏற்றம், மூடி, சுற்றம், சூடி, மோப்பம், விசிறி, பரவை, அடை:—இவைகளில் இ ஐ, அம் விகுதிகள் என்னென்ன பொருள்களில் வருகின்றன?

---

38. பெயர்ப்பகுபத இடைநிலையாவதெது?

வினைப்பெயர்களொழிந்த வேறு பெயர்களில் பகுதியையும் விகுதியையும் பிரிக்க நடுவில் நிற்பதே பெயரிடைநிலையாம்.

(உ-ம்.) அறிஞன்=அறி+ஞ்+அன்—ஞ் இடைநிலை. வலைச்சி=வலை+ச்+சி—ச் இடைநிலை.

### 10. அப்பியாசம்.

பாணத்தி, மலையாட்டி, புலைஞன், செருநர், கவிஞர், கலைஞர், வண்ணாத்தி.—இவைகளில் இடைநிலைகளெவை?

---

39. வினைப்பகுபத இடைநிலைகளெத்தனை? அவற்றின தொழிலென்ன?

அவை ஒன்பதாம். வினைச்சொல்லில் காலங்காட்டுவதே அவற்றின் தொழிலாம்.

40. காலம் எத்தனை?

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவையோடு முக்காலத்துக்கும் பொதுஎன்பதுமொன்றுண்டு.

41. இறந்தகால இடைநிலைகளெவை?

த், ட், ற், இன் இந்நான்குமே.

(உ-ம்.) செய்+த்+ஆன்=செய்தான்.
உண்+ட்+ஆன்=உண்டான்.
கொல்+ற்+என்=கொன்றேன்.
போ+இன்+என்=போயினேன்.

Note.—இன் என்னும் இடைநிலை முதல்குறைந்தும் ஈறுகெட்டும் இறந்தகாலங்காட்டும்.

(உ-ம்.) போ+இன்+ஆன்=போனான்
அனுப்பு+இன்+அ=அனுப்பிய.

42. நிகழ்கால இடைநிலைகளெவை ?
கிறு, கின்று, ஆநின்று, இம்மூன்றுமே.

(உ-ம்.) உண்+கிறு+ஆன்=உண்கிறான்.
தின்+கின்று+ஆன்=தின்கின்றான்.
நட+ஆநின்று+ஆன்=நடவாநின்றான்.

43. எதிர்கால இடைநிலைகளெவை ?
ப், வ் இவ்விரண்டுமே.

(உ-ம்.) உண்+ப்+ஆன்=உண்பான்.
செய்+வ்+ஆன்=செய்வான்.

44. இடைநிலையேயன்றி வேறெதுவுங் காலங்காட்டுமோ ?

(a) செய்யும்என்னும் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, ஏவல்வினைமுற்று, செய்யுமென்னும் பெயரெச்சம், இகர யகரவீற்றுச் செயதென்னும் வினையெச்சம், செய, செயின் என்னும் வினையெச்சங்கள் ஆகியவைகளில் விகுதியே காலங்காட்டும்.

படிக்கும் - உம் - எதிர்காலம்
எழுதுக - க - எதிர்காலம்
உண்ணாய் - ஆய் - எதிர்காலம்
வரும் - உம் - எதிர்காலம்

ஓடி - இ - இறந்தகாலம்
போய் - ய் - இறந்தகாலம்
வர - அ - முக்-பொது
வரின் - இன் - எதிர்காலம்

(b) ப விகுதி இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையுங் காட்டும்.

(உ-ம்.) என்ப - வருப.

(c) மின் விகுதி எதிர்காலத்தைக்காட்டும்.

(உ-ம்.) அஞ்சன்மின்.

(d) ஆ விகுதி முக்காலத்தையுங்காட்டும்.

(உ-ம்) கள்ளத்தனங்கள் கடவுளுக்காகா.

(e) பகுதி விகாரப்பட்டுங் காலங்காட்டும்.

(உ-ம்.) பெற்றான், புக்கான்:—இவைகளில் பெறு, புகு என்னும் பகுதிகள் வலிமிகுந்து காலங்காட்டின.

## 11. அப்பியாசம்.

1. "சீரியர்கெட்டாலுஞ் சீரியர்சீரியரே"
2. "ஒருவனைப்பற்றி ஓரகத்திரு"
3. "குடிதழீஇ"
4. தின்னக்கூடாது.
5. ஆடாய் பாம்பே.
6. வேதங்கூறும் வழி.
7. ஓதி அறிவி.
8. "அரவமாட்டேல்"
9. ஒளிபோய் இருள்படரும்.
10. "கலக்கினுந்தண்கடல் சேறாகாது"
11. "ஈரமுடைமை ஈகையினறிப"
12. "வஞ்சித்தோமென்று மகிழன்மின்":—

இவைகளிலுள்ள வினைகளில் காலங்காட்டும் உறுப்புகளை எடுத்தெழுதி யின்னகாலமெனவுங்கூறுக.

45. சாரியைகளெவை?

பெயர் வினைகளைச் சார்ந்துவரும் உருபுகளாம்.

அ - தனக்கு
ஏ - மூன்றேகால
ஐ - பண்டைநாள்
கு - செய்குவேன்
ன் - கோன்
அன் - கண்டனன்
ஆன் - ஒருபான்
இன் - அதினால்
அல் - வளையல
அற்று - சிலவற்றை
இற்று - பதிற்றுப்பத்து
அம் - புளியங்காய்
ஆம் - மண்ணாங்கட்டி
அத்து - மரத்தை

## 12. அப்பியாசம்.

1. நிறத்தை, தின்றனன், இவற்றை, நாரத்தங்காய், நடந்தது, பொன்னாங்காணிக்கீரை, ஆன்கன்று, கலனேகுறுணி, தொடையல், பதிற்றுமூன்று, வருகுவேன்: இவைகளிற் சாரியைகளெவை?

2. அ, ஆம், ஐ, ன், ஆன், ஏ—சாரியைகள் வருவதற்கு உதாரணங்கள் தருக.

46. சந்தியாவதென்ன?

நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் எழுத்துகள் விகாரப்படுவது சந்தி என்னப்படும்.

(உ-ம்.)

1. படித்தான். படி (பகுதி), த் (இடைநிலை), ஆன் (விகுதி), வேறொரு த் தோன்றினது சந்தி.

2. ஒட்பம். ஒள் (பகுதி), பம் (விகுதி), ளகரம் டகரமாத்திரிந்தது சந்தி.

3. ஓடான். ஓடு (பகுதி), ஆன் (விகுதி), உகரங்கெட்டது சந்தி.

47. பகுபத உறுப்பு ஆறில் விகாரமென்பதெது?

செய்யுள் விகாரங்களை இங்கு விகாரமென்பது. (அவைகளை 74-ம் சூத்திரத்திற் கண்டுகொள்க.)

## 13. அப்பியாசம்.

அடியில்வரும் பதங்களிற் பகுபத உறுப்புகளைப் பகுத்துக் காட்டுக.

சென்ற, வஞ்சித்தோம், கண்ணன், வருவான், கண்டு, ஆன்றார், எச்சம், ஏமாந்தோம், நட்பு, சினந்தான், செவ்விய, செற்றார், கொண்டனன், ஆகிய, சொல்லி, கற்ற, பச்சரிசி, கனன்று.

# 3. புணரியல்.

48. எழுத்துப்புணர்ச்சி என்றாலென்ன?

இரண்டு மொழிகள் தொடர்ந்துவருகையில் நிலைமொழியீறும் வருமொழி முதலும் பொருந்தி ஒரேசொல்லின் தன்மையை அடைதலாம். அதுவேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சியென இருவகைப்படும்.

49. வேற்றுமைப்புணர்ச்சி என்றாலென்ன?

நிலைமொழியினீற்றில் வேற்றுமை உருபுகள் தொக்காவது விரிந்தாவது நிற்க அது வருமொழியோடு புணருவது வேற்றுமைப்புணர்ச்சியாம்.

(உ-ம்.) வேற்றுமைத்தொகை...வேற்றுமைவிரி.
2-ம் சோறுதின்றான்.........சோற்றைத்தின்றான்.
3-ம் துப்பாக்கிசுட்டான்......துப்பாக்கியாற்சுட்டான்.
4-ம் ராமர்தம்பி.......... ...ராமருக்குத்தம்பி.
5-ம் மலைவீழருவி............மலையின்வீழருவி.
6-ம் மன்னர்கோல்..........மன்னரதுகோல்.
7-ம் மலைஎலி.................மலையில்உள்ளஎலி.

Note.—வேற்றுமையுருபுகள் தொக்குநிற்பதை அவற்றின் பொருளாலேயே அறிக.

50. உருபும்பயனும் உடன்றொக்கத்தொகை என்பதியாது?

மொழிகளுக்கு நடுவில் வேற்றுமை யுருபுகள் தொக்குவருவதன்றி அவை கொண்டுமுடியும் வேறு மொழியும் தொக்குவரின் உருபும் பயனும் உடன்றொக்கத்தொகை என்னப்படும்.

(உ-ம்) பொன்காசு=பொன்னாலாகியகாசு.
கைக்களிறு=கையையுடையகளிறு.

51. அல்வழிப்புணர்ச்சியாவதென்ன?

வேற்றுமை யுருபுகள் இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வராமல் மொழிகள் புணர்வது அல்வழிப்புணர்ச்சியாம் அது 14 வகைப்படும். அவைகளில் தொகைநிலைத் தொடர் 5. தொகாநிலைத்தொடர் 9.

(உ-ம்.) 1. வினைத்தொகை.................கடிநாய்.
2. பண்புத்தொகை.............. ...செம்மண்.
3. உவமைத்தொகை...............மதிமுகம்.
4. உம்மைத்தொகை................மாதாபிதாக்கள்.
5. அன்மொழித்தொகை...........உயிர்மெய்.
1. எழுவாய்த்தொடர்...............நாய் வந்தது.
2. விளித்தொடர் ..................ஐயா வாரும்.

3. பெயரெச்சத்தொடர்............கடித்த நாய்.
4. வினையெச்சத்தொடர்...........ஓடி வா.
5. வினைமுற்றுத்தொடர்...........வருகிறார் ராஜா.
6. குறிப்புவினைமுற்றுத்தொடர்...கரியன் இவன்.
7. இடைச்சொற்றொடர் ..........பிறிதொருவர்.
8. உரிச்சொற்றொடர்.............உறுசெயல்.
9. அடுக்குத்தொடர்...............புலிபுலி.

52. வினைத்தொகையாவதென்ன?

வினைப்பகுதி ஒருபெயரைத்தழுவி வருமாயின் வினைத்தொகை யென்னப்படும்.

இதுவுமது.

காலங்காட்டும் உருபு தொக்குநிற்கும் பெயரெச்சமே வினைத் தொகையாம்.

(உ-ம்.) எறியீட்டி, சுடுசூஞ்சி, வருபுனல்.

53. பண்புத்தொகையாவதென்ன?

குணத்தை விளக்கும் ஆகிய என்னும் உருபு தொக்கத்தொடர்களும் ஒருபொருளின் பொதுப்பெயரும் சிறப்புப்பெயரும் தொடர்ந்து வரும் மொழிகளும் பண்புத்தொகை யென்னபபடும்.

(உ-ம்.) கருமேனி...........வண்ணப்பண்பு.
வட்டக்கல்..........வடிவுப்பண்பு.
அறுசுவை...........அளவுப்பண்பு.
புளிமாங்காய்........சுவைப்பண்பு.
வாளைமீன்..........இருபெயரொட்டுப்பண்பு.

54. உவமைத்தொகையாவதென்ன?

மொழிகளுக்கிடையில் உவமையுருபு தொக்குவரின் உவமைத்தொகை யென்னப்படும்.

(உ-ம்.) மதிமுகம்=மதிபோன்றமுகம்.
கடியிடை=கடியொத்தஇடை.

55. **உம்மைத்தொகை யாவதென்ன?**

மொழிகளுக் கிடையில் **உம்** என்பது தொக்கு வருவதாம்.

(உ-ம்) தந்தைதாய்=தந்தையும் தாயும்.

56. **அன்மொழித்தொகையாவதென்ன?**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய ஐந்து தொகைகளோடு வேறுமொழிகளும் தொக்குவருவது அன்மொழித்தொகை யாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| பூங்குழல்=பூவையுடைய குழலை உடையாள். | 2-ம்-வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. |
| தாழ்குழல்=தாழ்ந்த குழலை உடையாள். | வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. |
| கருங்குழல்=கருமையாகிய குழலை உடையாள். | பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. |
| துடியிடை=துடிபோன்ற இடையை உடையாள். | உவமைத்தொகைப் புறத் துப்பிறந்த அன்மொழித் தொகை. |
| உயிர்மெய்=உயிரும்மெய்யுங் கூடிப்பிறந்த எழுத்து. | உம்மைத்தொகைப் புறத் துப்பிறந்த அன்மொழித் தொகை. |

## 14. அப்பியாசம்.

(1) புலிசுட்டான், நாளைவா, பலகற்றேம், வீசுபணி, இதுதா, யார்புஸ்தகம், பொன்மோதிரம், தேன்மொழி, சுமைகூலி, தலைமயிர், ஐயர்மகன், வண்டிவாடகை, சூரியசந்திரர், கடல்நாகம், குறுங்கழுத்து, சாரைப்பாம்பு, ஓடுபாம்பு, ஆயுள்மருந்து, கற்று, ஜெகம்ஜெயித்தோன், வில்அடித்தான்:— இத்தொடர்மொழிகள் ஒவ்வொன்றும் என்னதொகை? அவை விரிந்தால் எப்படியாம்?

(2) வேற்றுமைத்தொகைகளுக்கு உதாரணங்கள்தருக.

(3) 2-ம் 3-ம் 5-ம் 7-ம் வேற்றுமைகளின் உருபும் பயனும் உடன்றொக்கத்தொகைகளுக்கு உதாரணந்தருக.

(4) வேலைமுடிந்தது, வென்றகோழி, மாமாவாரும், சாலவு நன்று, செத்தான் சாத்தன், மூடிவை, முன்மாதிரி, தீதீ, இனியதுபழம், தம்பிவந்தான், நல்லபாம்பு.— இவை ஒவ்வொன்றும் என்னதொடர்?

---

57. இயல்புப்புணர்ச்சியாவதென்ன?

நிலைமொழியும் வருமொழியும் யாதொரு மாறுதலுமின்றிப் பொருந்துவது இயல்புப்புணர்ச்சியாம்.

(உ-ம்.) நல்ல+பாம்பு=நல்லபாம்பு.

58. விகாரப்புணர்ச்சியாவதென்ன?

எழுத்தாவது சாரியையாவது தோன்ற, திரிய அல்லது கெட நிலைமொழியும் வருமொழியும் பொருந்துவது விகாரப்புணர்ச்சியாம்.

(உ-ம்.) 1. மா+கனி=மாங்கனி.
2. மண்+பானை=மட்பானை.
3. மரம்+வீடு=மரவீடு.

---

## A. உயிரீற்றுப்புணரியல்.

(நிலைமொழியினீற்றில் உயிர்இருக்கையில்சொற்கள்புணருவது)

---

59. உடம்படுமெய் ஆவதென்ன?

இரண்டு உயிர்கள் சந்திக்கும்போது அவை ஒத்தொலிப்பதற்காக இடையில்தோன்றும் மெய் உடம்படுமெய்யாம்.

60. உடம்படுமெய் எங்கெங்கே வரும்?

(*a*) உயிர் பன்னிரண்டினுள் இ, ஈ, ஐ என்னும் இம்மூன்றுக்குப்பின் எவ்வுயிர்வரினும் இடையில் யகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்.) புளி+ஆணம்=புளியாணம்.
தீ+ஊது=தீயூது.
மலை+அகத்தி=மலையகத்தி.

(*b*) ஏ என்ற உயிருக்குப்பின் உயிர்வரின் யகரமும் சிலவிடத்து வகரமுந் தோன்றும்.

(உ-ம்.) பேயே+என்றான்=பேயேயென்றான்.
சே+அடி=சேவடி.

(*c*) அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ, என்னும் உயிர்களுக்குப்பின் உயிர்வரின் வகரந் தோன்றும்.

(உ-ம்.) மன+உருக்கம்=மனவுருக்கம்.
கனு+என்ன = கனுவென்ன.
பசு+எது = பசுவெது.
மூ+உலகம் = மூவுலகம்.
எ+அன் = எவன்.
நொ+அதிகம் = நொவதிகம்.
கோ+இல் = கோவில். *
கௌ+அழகு = கௌவழகு.

* கோவில் என வகர உடம்படுமெய் வருவதுமன்றி கோயில் என யகர உடம்படுமெய்யும வரும். இப்படிவரும் எழுத்து எழுத்துப்பேறு என்னப்படும்.

அப்படியே உறை+இடம்=உறைவிடம். எனவரும்.

61. சுட்டெழுத்துக்குப் பின்னும் எகர வினாவெழுத்துக்குப் பின்னும் உயிரும் யகரமும் வரின் எவ்வாறாம் ?

(உ-ம்.) அ+உயிர் = அவ்வுயிர். *
அ+யானை= அவ்யானை.
எ+உயிர் = எவ்வுயிர். *
எ+யானை = எவ்யானை.

* இங்கு வேறொரு வ் தோன்றிய காரணத்தை 69 - ம் சூத்திரம் b என்ற பிரிவிற்காண்க.

## 15. அப்பியாசம்.

1. தலை+அசை; புலி+ஓடினது; இ+உலகம்; அ+யாழ்; மீனோ+அரவோ; அ+ஓலை; நீ+உண்;—இவை எவ்வாறு புணரும் ?
2. நானேயவன்; அவன்; தேவன்; புறுவோடிற்று; கடலையாணம்; இவள்;—சந்திபிரித்து விதிகூறுக.
3. எழுத்துப்பேறு வருவதற்கு உதாரணங்கள் தருக.

---

62. கு, சு, டு, து, பு, று என்பவற்றின் பின் உயிர்களும் மெய்களும் வரில் எவ்வாறும் ?

(1) குற்றுகரமாகவரும் கு, சு, டு, து, பு, றுக்களின்பின் உயிர்வரின் உகரங் கெட்டு அது ஏறின மெய்யில் வருமொழியினுயிர் ஏறும்.

(உ-ம்.) குரங்கு+ஆட்டம்=குரங்காட்டம்.
சூது +ஆட்டம்=சூதாட்டம்.

புறனடை. குற்றுகரம் வடமொழியாயிருக்கின் உகரங்கெடாமல் உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்.) ஹிந்து+எவன்=ஹிந்துவெவன்.

(2) முற்றுகரமாகவரும் கு, சு, டு, து, பு, றுக்களின்பின் உயிர்வரின் உகரங்கெடாமல் உடம்படுமெய்தோன்றும்.

(உ-ம்.) வகு+என்றான்=வகுவென்றான்.

(3) டு, று ஈற்றிலுடைய உயிர்த்தொடர் நெடிற்றொடர்க்குற்றுகரங்களுக்குப்பின் வேற்றுமை வழியில் நாற்கணமும்வரின் உகரமேறிய மெய்யிரட்டும்.

(உ-ம்.) உதடு+தோல்=உதட்டுத்தோல்.
கயிறு+உரி =கயிற்றுரி.
காடு +யானை=காட்டியானை.
ஆறு +மீன் =ஆற்றுமீன்.

புறனடை. மேற்கூறிய இருதொடரும் 2-ம் 7-ம் வேற்றுமைத்தொகைகளில் இரட்டா.

(உ-ம்.) காடு+வெட்டினான்=காடுவெட்டினான்.
வீடு+சேர்ந்தான் =வீடுசேர்ந்தான்.

63. உயிருக்குப்பின் வல்லினம் வரில் எவ்வாறும்?

(1) உயிருக்குப்பின் வரும் வல்லினம் இரட்டும்.

(உ-ம்.) மற்ற+சொல்=மற்றச்சொல்.
அரிசி+சோறு=அரிசிச்சோறு.
இந்த+பேச்சு=இந்தப்பேச்சு.
தங்க+தாலி=தங்கத்தாலி.

புறனடை:—வினைப்பெயர், விளிப்பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினைத்தொகை, அது, இது, இவை, அவை சில, பல, ஒரு, இரு, சிறு, அறு, எழு முதலியவை, 3-ம் 6-ம் வேற்றுமையுருபுகள் உயிரீற்று உயர்திணைப்பெயா. பொதுப்பெயர்—இவைகளுக்குப் பின்வரும் வல்லினமிரட்டாது.

(உ - ம்.)

| | |
|---|---|
| இவனுதந்தான். | அது, இது, கை, கை. |
| அம்மாகொடு. | தோழரொடு கூடி. |
| தந்தைசாமி. | உனதுபுஸ்தகம் |
| வந்தகுருவே. | பொன்னிதந்தாள். |
| விரிபூவே. | நீ கெட்டவன். |

*Note.*—பல சில என்பவை அடுக்கிவரின் பற்பல சிற்சில

(2) உயர்திணை அஃறிணைப் பண்புத்தொகைக ளில் உயிருக்குப்பின்வரும் வல்லொற்றிரட் டும்.

(உ-ம்.) முனிசாமி+தச்சன்=முனிசாமித்தச்சன்.
கடலை +பருப்பு=கடலைப்பருப்பு.

64. மரப்பெயர்கள் எவ்வாறு புணரும்?

(1) சில உயிரீற்று மரப்பெயர்க்குப்பின் வல்லி னம்வரில் இனவெழுத்துத் தோன்றும்.

(உ-ம்.) விளா+காய் = விளாங்காய்.
மா+சோலை = மாஞ்சோலை.

☞ இனவெழுத்துகளைப்பற்றி 166-ம் சூத்திரத்திற்காண்க.

(2) சில மரப்பெயர்க்குப்பின் அம் சாரியைதோ ன்றும், ஈற்றில் ஐகாரமிருக்கில் ஐ கெட்டு அம் தோன்றும்.

(உ-ம்.) 1. புளி+காய்=புளியங்காய்; ஆலங்காய்.
2. பனை+காய்=பனங்காய்; மாதுளங்காய்.

## 16. அப்பியாசம்.

(1) தின்றழி, வீடெது? சம்புவார்? கொசுவதிகம்; காட்டுக் கோழி; தேக்கம்பலகை; ஆற்றங்கரை; ஈந்தங்காய்; தூதுளங்காய்; பயற்றங்கூழ்; மோட்டோலை; பூப்பறித் தான்; சாரைப்பாம்பு; வயிற்றுவலி; கோரங்கிழங்கு; கிணற்றங்கரை:—சந்திபிரித்து விதிகூறுக.

(2) a. கெட்டபையன், கெடுதோஷி; "நூறுகுறள்"; தம்பி தந்தான்; மலையொடுபேசு; சிலபேர்; நீசுடு; புலையனு தின்றான். அண்ணுகொடும்; இருந்தனை துணையே:— இவைகளில் வல்லினம் இரட்டாமைக்கும்;

b. பொன்னித்தாதி; வழலைப்பாம்பு; வெளிப்புறம்; விள க்குச்சுவாலை; கின்னிக்கோழி:—இவைகளில் வல்லி னம் இரட்டியதற்குங் காரணங்கூறுக.

65. மையீற்றுப் பண்புப்பெயர்கள் என்னென்னவிகாரங்களைப்பெறும் ?

(a) மை விகுதி கெடும்.
(b) நடுவில் உகரம் இருக்கில் அது இகரமாகும்
(c) முதலில் உள்ள குறில் நெடிலாகும்.
(d) முதலில் அகரமிருக்கில் ஐகாரமாகும்.
(e) நடுவிலிருக்கும் மெய்யிரட்டும்.
(f) முதலிலுள்ள மெய் வேறு மெய்யாகத் திரியும்.
(g) வருமொழியின் முதலெழுத்துக்கு இனவெழுத்துத் தோன்றும்.
(h) வேறு விகாரங்களும் வரப்பெறும்.

(உ-ம்.) 1. கருமை+அன்=கரியன். (மைகெட்டு உகரம் இகரமானது.)
2. செம்மை+ஆ=சேதா. (மைகெட்டு முதல் நீண்டு மகரம் தகரமானது.)
3. பசுமை+கிளி = பைங்கிளி (மைகெட்டு வேறு விகாரத்தால் சு கெட்டு முதல் அகரம் ஐகாரமாகி வருமொழி முதலுக்கு இனவெழுத்துத் தோன்றிற்று.)

## 17. அப்பியாசம்.

1. பின்வருவன விகாரப்பட்ட வகையைக்கூறுக. சிறுவர்; தீயார்; வெந்நீர்; திட்பம்; இல்லை; செங்கரும்பு; குற்றுயிர், பேராசை; பைம்பொன்; வெற்றிலை, அருந்தவம், கருங்குதிரை; நட்டாறு, புதியது, வெய்ய.
2. சிறுமை+இன்பம்; பெருமை+இன்பம்; பெருமை+சோலை. கருமை + ஆமணக்கு; புது+உருக்கு:—இவை எவ்வாறு புணரும் ?

66. மென்றொடர்க் குற்றுகர மொழிகள் எவ்விகாரங்களைப் பெறும் ?

(1) மென்றொடர் வன்றொடராவதும், அதனோ டு அம் சாரியை தோன்றுவதுமுண்டு.

(உ-ம்.) 1. கன்று+ஆ=கற்றா. இருப்புலக்கை.
2. கரும்பு+சாறு=கருப்பஞ்சாறு.

(2) சில மென்றொடர்க் குற்றுகரங்கள் அம்சாரி யைமாத்திரம் பெறும்.

(உ-ம்.) சம்பு+கோழி=சம்பங்கோழி.
கம்பு+கூழ்=கம்பங்கூழ்.

(3) சில மென்றொடர்க் குற்றுகரங்கள் ஐகாரச் சாரியை பெறும்.

(உ-ம்.) அன்று+கு=அன்றைக்கு, இன்றைக்கு.

*Note.*—சில வன்றொடர்க் குற்றுகரங்களும் ஐகாரச்சாரியை பெறும்.
நேற்று+கு=நேற்றைக்கு.

(4) தெங்கு என்னும் மென்றொடர்க் குற்றுகரத் தின்பின் காய் என்பது வரின் நிலைமொழியி னீறுகெட்டு முதல் நீளும்.
தெங்கு+காய்=தேங்காய்.

## 18. அப்பியாசம்.

இரும்பு+தூண் ; செம்பு+தகடு ; கம்பு+சோறு ; குரங்கு+இனம் ; வேம்பு+பழம் ; சேம்பு+கிழங்கு ; என்று+கு ; ஈந்து+காய்:—இவை எவ்வாறு புணரும் ?

67. திசைப்பெயர்கள் எவ்விகாரங்களைப் பெறும் ?

1. ஈறு கெடுதலும்,
2. ஈற்றயல் மெய் கெடுதலும்,
3. றகரம் னகர லகரங்களாவதும்,
4. முதல் நீண்டு நடுவில்நின்ற உயிர்கெடுதலும்,
5. வேறு விகாரங்களும் வரப்பெறும்.

(உ-ம்.) 1. வடக்கு+தேசம்=வடதேசம். இதில் ஈறும் ஈற்றயலுங்கெட்டது.

2. தெற்கு+தேசம்=தென்தேசம். இதில் ஈறுகெட்டு றகரம் னகரமானது.

3. மேற்கு+தேசம்=மேல்தேசம். இதில் ஈறுகெட்டு றகரம் லகரமானது.

4. கிழக்கு+திசை=கீழ்திசை. ஈறும் ஈற்றயலுங் கெட்டு முதல் நீண்டு நடுவில்நின்ற உயிர்கெட்டது.

## 19. அப்பியாசம்.

1. மேலூர் ; கீழ்கடல் ; வடநாடு ; தென்றேயம் ; மேனாடு; இவைகளுக்குப் புணர்ச்சி விதி கூறுக.

2. தெற்கு+மேற்கு ; கிழக்கு+ஊர் ; வடக்கு+மேற்கு ; மேற்கு+எல்லை:—இவை எவ்வாறு புணரும் ?

---

68. எண்ணுப்பெயர்கள் எவ்விகாரங்களைப் பெறும் ?

(a) 1. ஈறும் ஈற்றயலுங் கெடுதலும்,
2. ஈற்றயல் மெய் வேறுமெய்யாய்த்திரிதலும்,
3. முதல் நீளுதலுங் குறுகுதலும்,
4. இன் இற்றுச்சாரியைகள் தோன்றுதலும்,
5. வேறு விகாரங்களும் வரப்பெறும்.

(உ-ம்.) 1. ஒன்று+ஒன்று=ஒவ்வொன்று. இதில் நிலைமொழியின் ஈறும் ஈற்றயலுங்கெட்டு, வகர உடம்படுமெய்தோன்றிற்று.

2. மூன்று+மூன்று=மும்மூன்று. ஈறுகெட்டு முதல் குறுகி, னகரம் மகரமாயிற்று.

3. பத்து+ஒன்று=பதிற்றொன்று. ஈறுகெட்டு இற்றுச்சாரியை தோன்றிற்று.

4. இருபது + ஆயிரம் = இருபதினாயிரம். ஈற்றுகரங் கெட்டு இன்சாரியை தோன்றிற்று.

5. பத்து+இரண்டு=பன்னிரண்டு. ஈறுகெட்டு தகரம் னகரமாகி னகரம் இரட்டியது.

(b) ஒன்பதின்பின் பத்தும் நூறும் வந்தால் நிலைமொழியின் பதுகெட்டு, னகரம் முறையே ணகரமாகவும் ளகரமாகவுந் திரிந்து, முதலுயிர் தகரவொற்றிலேறி, வருமொழியின் பத்து நூறாகவும், நூறு ஆயிரமாகவும் திரியும்.

(உ-ம்.) ஒன்பது+பத்து=தொண்ணூறு.
ஒன்பது+நூறு=தொளாயிரம்.

*Note.*—மற்றவைகட்கு மிவ்வாறே சூத்திரஞ்செய்துகொள்க.

20. அப்பியாசம்.

1. இவ்விரண்டு; அவ்வாறு, நந்நான்கு; மூவாயிரம், ஈராயிரம், பதிற்றுமூன்று, பதினைந்து; எழுபது; முப்பத்திரண்டு:—இவைகளைப் பிரித்து விதிகூறுக.

2. ஐந்து+ஐந்து; எழு+எழு; பத்து+ஆறு; ஒன்று + கால்:—இவை எவ்வாறு புணரும்?

## B. மெய்யீற்றுப்புணரியல்.

(நிலைமொழியினீற்றில்மெய்இருக்கையிற்சொற்கள்புணருவது)

69. மெய்யெழுத்துக்குப்பின் உயிர்வரின் எவ்வாறும்?

(a) அவ்வுயிர் மெய்யோடு கூடும்.

(உ-ம்.) பால்+ஆறு=பாலாறு.

(b) தனிக்குறிலணைந்த மெய்யின்பின் உயிர்வரின் அம்மெய்யிரட்டும்.

(உ-ம்.) பொன்+ஆசை=பொன்னாசை.

*Note.*—தனிக்குறிலணைந்த=ஒரு குற்றெழுத்தைச்சேர்ந்த.

70 நிலைமொழியீற்று னகர ணகரங்கள் எவ்விகாரங்களைப் பெறும்?

(*a*) னகர ணகரங்கள் வல்லினம் வரில் வேற்றுமை வழியில் முறையே றகர டகரங்களாம்.

(உ-ம்.) பொன்+பானை=பொற்பானை.
மண்+குடம்=மட்குடம்.

(*b*) தனிக்குறிலணைந்த னகர ணகரங்களுக்குப் பின்வரும் நகரம் முறையே னகர ணகரங்களாம்.

(உ-ம்.) பொன்+நிறம்=பொன்னிறம்.
மண்+நிலம்=மண்ணிலம்.

(*c*) தனிக்குறிலணையாத னகர ணகரங்களுக்குப் பின் நகரம்வரில் அது னகர ணகரங்களாய்த் திரிய நிலைமொழியீற்று னகர ணகரங்கள் கெடும்.

(உ-ம்.) கூன்+நிமிர்ந்தது=கூனிமிர்ந்தது.
ஊண்+நாட்டம்=ஊணாட்டம்.

(*d*) வேற்றுமைவழியில் னகர ணகரங்களுக்குப் பின் தகரம் வரில் இரண்டும் முறையே றகர டகரங்களாம்.

(உ-ம்) பொன்+தளம்=பொற்றளம்.
மண்+தளம்=மட்டளம்.

## 21. அப்பியாசம்.

1. வெள்+நயம்; கண்+நாற்றம்; வீண்+நாட்டம்; மின்+நிறம்; மண்+தாமரை; ஊன்+நாற்றம்; வேல்+அழகு இவை எவ்வாறு புணரும்?
2. கல்லம்மி; மானிற்கிறது; தன்னயம்; கண்ணோ; தண்ணீர்; கட்புலன்; மட்டீமை; பொற்றகடு:—சந்திபிரித்து விதிகூறுக.

---

71 நிலைமொழியீற்று லகர ளகரங்கள் எவ்விகாரங்களைப் பெறும்?

(*a*) லகர ளகரங்கள் வேற்றுமைவழியில் வல்லி னம்வரில் றகர டகரங்களாம். அல்வழியிலிய ல்பாம்.

(உ-ம்.) 1. கல்+கம்பம்=கற்கம்பம்.
கள்+குடித்தான்=கட்குடித்தான்.
2. கல்குறிது, முள்குறிது.

(*b*) லகர ளகரங்கள் மகரம் வரின் னகர ணகரங் களாம்.

(உ-ம்.) கல்+மலை=கன்மலை.
முள்+முடி=முண்முடி.

(*c*) லகர ளகரங்களின்பின் நகரம் வரின் இரண் டும் னகர ணகரங்களாம்.

(உ-ம்.) நல்+நூல்=நன்னூல்.
முள்+நுனி=முண்ணுனி.

*Note*.—இரண்டும் என்பது நிலைமொழியீறும் வருமொழி முதலும்.

(*d*) தனிக்குறிலணையாத லகர ளகரங்களுக்குப் பின் நகரம் வரில் அது னகர ணகரங்களா ய்த்திரிய நிலைமொழியீற்று லகர ளகரங் கள்கெடும்.

(உ-ம்.) பால்+நன்று=பானன்று.
வாள்+நன்று=வாணன்று.

(*e*) லகர ளகரங்களுக்குப்பின் தகரம் வரில் இர ண்டும் றகர டகரங்களாம்.

(உ-ம்.) சொல்+திறம்=சொற்றிறம்.
முள்+தோன்றும்=முட்டோன்றும்.

(*f*) அல்வழியில் தனிக்குறிலணையாத லகர ளக

டகரங்களாய்த் திரிய நிலைமொழியீற்று லகர ளகரங்கள் கெடும்.

(உ-ம்) சோம்பல் + தீது = சோம்பறீது.
நாள் + தோறும் = நாடோறும்.

## 22. அப்பியாசம்.

a. மஞ்சள் + தலை; கேள் + தூயா; கள் + நாற்றம்; வால் + நனை ந்தது; நெல் + நட்டான்; கள் + மண்டி. பால் + தீனி நெல் + கஞ்சி; பால் + தீது—இவை எவ்வாறுபுணரும்?

b. எங்கணுயகமே; கன்னன்று; வாணுள்; மேண்மகன்; புற் றளை, கானனைந்தது, எட்டாள், நாண்மலர்; வாட்டேள், எலிகடின்றன, வருதறீது:—சந்திபிரித்து விதிகூறுக.

---

72. மகரம் எவ்விகாரங்களைப் பெறும்?

(1) நிலைமொழியீற்று மகரம், ககரமும், சகர மும், தகரநகரங்களும் வரின் முறையே ஙகர, ஞகர, நகரங்களாம்.

(உ-ம்.) யாம் + கண்டோம் = யாங்கண்டோம்.
மரம் + செடி = மரஞ்செடி.
குணம் + தீயது = குணந்தீயது.
வெம் + நீர் = வெந்நீர்.

(2) வருமொழியில் உயிராவது, மெல்லினமாவ து, இடையினமாவது வரில் நிலைமொழியீற்று மகரங்கெடும்.

(உ-ம்.) வட்டம் + ஆழி = வட்டவாழி.
மரம் + நாய் = மரநாய்.
மரம் + வேர் = மரவேர்.

(3) மகரத்தின் பின் வேற்றுமைவழியில் வல்லி னம்வரில் மகரங்கெட்டு வல்லொற்றிரட்டும்.

(உ-ம்.) மனம்+சாட்சி=மனச்சாட்சி.
குளம்+பாசி=குளப்பாசி.

(4) எல்லாம் என்பது வேற்றுமைப்படும்போது ஈறுகெட்டு அற்றுச்சாரியையும், உருபும், உம் என்பதும் தொடரப் பெறும்.

(உ-ம்.) எல்லாம்+அற்று+ஐ+உம்=எல்லாவற்றையும்.
எல்லாம்+அற்று+ஆல்+உம்=எல்லாவற்றாலும்.

Note.—எல்லாம் என்னும் பொருளையுடைய வேறுமொழிகளும் அவ்வாறே அற்று அல்லது அத்துச்சாரியைகளோடு உருபும் உம்முமாவது; உருபும் உம்முமாத்திரமாவது தொடரப்பெறும்.

(உ-ம்.) 1. சர்வம்-சர்வத்தையும்.
சமஸ்தம்-சமஸ்தத்தையும்.
2. இரண்டு கைகளையும் விரித்தான்.
குதிரை நாலு காலாலும் நடக்கும்.

(5) மற்ற மகர வீற்றுச் சொற்கள் வேற்றுமைப் படுகையில் ஈறும் ஈற்றயலுயிருங்கெட அத்துச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) முகம்+ஐ=முகத்தை.
பணம்+ஆல்=பணத்தால்.

## 23. அப்பியாசம்.

(a) குணக்கேடன்; மரப்பொந்து; குணவசீகன்; செந்நெல்; மரவாணி; மரணநாள்:—இவைகளைச் சந்திபிரித்துவிதிகூறுக.

(b) மனம்+மாட்சி; நிலம்+ஆவரை; மரம்+நார்; முகம்+வாட்டம்; குளம்+கரை—இவை எவ்வாறு புணரும்?

(c) எல்லாம்; சர்வஜனங்களும்; சகலமானவர்களும்; திரிபவனங்களும்; ஐம்பலன்களும்:—வேற்றுமைகூறுக.

(c. என்ற பிரிவைப் பெயரியல் படித்ததன்பின் பார்க்கவும்.)

---

72. ய், ர், ழ் என்னும் எழுத்துகளின்பின் வல்லினம்வரில் எவ்வாறாம் ?

(1) அடைமொழியி னீற்றிலிருக்கும் ய் ர், ழ் என்னும் எழுத்தின் பின்வரும் வல்லினம் இரட்டும.

(உ-ம்.) பேய்+சுரை = பேய்ச்சுரை.
வேர்+கடலை= வேர்க்கடலை.
யாழ்+கயிறு= யாழ்க்கயிறு.

☞ அடைமொழியாவது இன்னதென்று 171-ம் சூத்திரத்திற்காண்க.

(2) வேற்றுமை வழியிலும் இரட்டும்.

(உ-ம்.) பேய்+கரம் = பேய்க்கரம்.
தேர்+கால் = தேர்க்கால்.
பூழ் +கால் = பூழ்க்கால்.

(3) யகரவீற்று வினையெச்சங்களுக்குப் பின்னும் வலிமிகும்.

(உ-ம்.) போய்+திரும்பு = போய்த்திரும்பு.
ஆய் + போயிற்று=ஆய்ப்போயிற்று.

73. ஞ, ம, ன எப்பொழுது இரட்டும் ?

(1) தனிக்குறிலைச்சேர்ந்த யகரத்தின்பின்னும்,

(உ-ம்) மெய் + ஞானி=மெய்ஞ்ஞானி.
பொய்+ மதம் =பொய்ம்மதம்.
செய் + நன்றி=செய்ந்நன்றி.

(2) தனி ஐகாரத்தின் பின்னும் இரட்டும்.

(உ-ம்.) கை + ஞிறை = கைஞ்ஞிறை.
கை + மாற்று = கைம்மாற்று.
மை + நாகம் = மைந்நாகம்.

## C. செய்யுள் விகாரங்கள்.

(பாட்டில் எழுத்துகள் அடையும் மாறுதல்கள்.)

74. செய்யுள் விகாரங்களெவை ?

### (a) 1. வலித்தல்.

மெல்லினத்தை வல்லினமாக்கல். உ-ம் குறுந்தாள்=குறுத்தாள்.

### 2. மெலித்தல்.

வல்லினத்தை மெல்லினமாக்கல். உ-ம் புத்தி=புந்தி.

### 3. நீட்டல்.

குறிலை நெடிலாக்கல். உ-ம் அளி=ஆளி.

### 4. குறுக்கல்.

நெடிலைக் குறிலாக்கல். உ-ம் பாதம்=பதம்.

### 5. விரித்தல்.

இல்லாத எழுத்தை வருவித்தல். உ-ம் ஆகுமே=ஆகும்மே.

### 6. தொகுத்தல்.

உள்ள எழுத்தை நீக்கல். உ-ம் தொழாதார்=தொழார்.

(b) பெயர் வினைகளின் இறுதியில் ன், ள், ர், ய் என்பவை இருக்கின் அவற்றிற் கயலிலிருக்கும் ஆகாரம் ஓகாரமாவது முண்டு.

(உ-ம்.) ஈன்றான்=ஈன்றோன்.
பெற்றார்=பெற்றோர்.

24. அப்பியாசம்.

அடியில் வருவன்வற்றில் செய்யுள்விகாரங்கள் என்னென்ன இருக்கின்றன?

1. "ஈத்தவகையா லுவவாதார்க்கீப்பின்னு"
2. "கிருபை செயும் உம்மைந்தனை நினைந்து"
3. "இன்னு கல்லாதான் கோட்டி கொளல்"
4. "பரம சிவனு பவவிமோசனு"
5. "நீரலாற் சொல்லின் வேறுளதோ"
6. "தாகமும் பசியும் வருகும்மே"
7. "பற்று சபத்தோர்க்கில்லை பாவங்கள்"
8. "வளிதோட்கிடிவாரோவில்"
9. "உயிருக்கு ஊற்றுக்கோலாகி"
10. "எல்லாமிருந்து மவற்கென்செய்யும்"

## D. வடமொழிச் சந்தி.

75. *நிலைமொழியீறுவருமொழிமுதல், இவ்விரண்டிலும் உயிர் இருக்கையில் தமிழில் வழங்கும் வடமொழிகள் எவ்வாறு புணரும்?*

வடமொழிப் புணர்ச்சிக்குரிய தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தியென மூன்றுவகையாய்ப் புணரும்.

### 1. தீர்க்க சந்தி.

1. அ-ஆவின்பின் அ-ஆ வரில் இரண்டுங்கெட ஆ தோன்றும்.

   (உ-ம்.) தேவ+ஆலயம்=தேவாலயம்.

2. இ-ஈ யின்பின் இ-ஈ வரில் இரண்டுங்கெட ஈ தோன்றும்.

   (உ-ம்.) கிரி+ஈசன்=கிரீசன்.

3. உ-ஊவின்பின் உ-ஊ வரில் இரண்டுங்கெட ஊ தோன்றும்.

## 2. குணசந்தி.

1. அ - ஆவின்பின் இ - ஈவரில் இரண்டுங்கெட ஏ தோன்றும்.

(உ-ம்.) நர+ஈசன்=நரேசன்.

2. அ - ஆவின்பின் உ ஊவரில் இரண்டுங்கெட ஓ தோன்றும்.

(உ-ம்.) பாத+உதகம்=பாதோதகம்.

## 3. விருத்திசந்தி.

1. அ - ஆவின்பின் ஏ - ஐவரில் இரண்டுங்கெட ஐ தோன்றும்.

(உ-ம்.) ஞான+ஐக்கியம்=ஞானைக்கியம்.

2. அ - ஆ வின்பின் ஓ ஔவரில் இரண்டுங்கெட ஔ தோன்றும்.

(உ-ம்.) தின+ஓதனம்=தினௌதனம்.

Note.—ஆகாரவீற்று வடமொழிகள் தமிழில் ஐகார வீற்றைப் பெறும்.

(உ-ம்.) மாலா=மாலை. கங்கா =கங்கை.
தயா=தயை. கிருபா=கிருபை.

### 25. அப்பியாசம்.

அரசேந்தி; லோகைகநாதன்; வரௌடதம்; பூமீசன்; குணானுபவம்; கௌரீசன்; சேனாதிபதி; பிரஜாதிபத்தியம்; குணைசுவரியம்; மகோற்சவம்; மகேசுவரன்; பரோபகாரி; அணூற்பத்தி; தேசாபிமானி:—இவைகளைச்சந்திபிரித்து விதி கூறுக.

# 2. சொல்லதிகாரம்.

76. சொல்லதிகாரமாவதென்ன?
சொற்களின் வகைபொருள் முதலியவற்றைக கூறும் பாகமாம்.

Note—சொல் எனினும் மொழியெனினும் ஒன்றே; அது திணை பால் இடங்களை வெளிப்படை யாகவேனும் குறிப்பாகவேனும் உணர்த்தும்.

77. தனிமொழி தொடர்மொழி என்பவை எவை?
வேறு சொல்லோடு கலவாமல் தனித்து நின்று ஒரு பொருளை உணர்த்துவது தனிமொழி அல்லது ஒரு மொழியாம்; அப்படியின்றி இரண்டு முதலாக மொழிகள் தொடர்ந்து வருவது தொடர் மொழியாம்.

(உ-ம்.) ஒருமொழி=மண், நட, பின், உறு.
தொடர்மொழி=கருங்கண், இல்லறத்துணைவி.

78. பொது மொழியாவ தென்ன?
ஒருமொழி போலவும் தொடர்மொழி போலவும் நின்று ஒருபொருளையும், பலபொருளையும் உணர்த்துவதாம்.

(உ-ம்.) வேங்கை. 1=வேகுங்கை. 2=ஓர்புலி

## 26. அப்பியாசம்.

பின் வருபவைகளில் ஒருமொழி தொடர்மொழி பொதுமொழிகளை எடுத்துக்காட்டிப் பொதுமொழிகளின் பொருளையுங் கூறுக:—

வீடு; கண்ணீர்; நிலா; நங்கை; இராவணன்; ஓடாநின்றான்; மாடுமேய்த்தான்; எதுகை; எழுந்திருந்தான்; மாடு; கையெழுத்து; அரிவை; கட்டாண்மை; அம்பரம்; கேட்டுக்கொண்டான்; சிறகல்; சொற்சத்தி; தாமரை; பின்னிட்

டான்; கழிநுட்பம்; பலகை; கோமான்; கலியாணம்; புதுமை; திரிகை; பணி; நாற்காலி.

---

79. திணை எத்தனை?

தேவர் நரகர் மனிதராகிய உயர்திணை, உயிருள்ளதும் உயிரற்றதுமான மற்றவையாகிய அஃறிணையெனத் திணை யிரண்டாம்.

(உ-ம்.) ஈஸ்வரன்; பேய்; ராமன்—உயர்திணை.
குதிரை; மண்; கப்பல்—அஃறிணை.

80. பால் எத்தனை? (பால்=பாகம்)

உயர்திணைக்குரிய ஆண்பால், பெண்பால், பலர் பாலும், அஃறிணைக்குரிய ஒன்றன்பால் பலவின்பாலுமெனப் பால் ஐந்தாம்.

(உ-ம்.)

| உயர்திணை | | | அஃறிணை. | |
|---|---|---|---|---|
| ஆண் | பெண் | பலர் | ஒன்றன் | பலவின் |
| புருஷன் | ஸ்திரி | புருஷர் ஸ்திரிகள் | மரம் | மரங்கள் |

81. இடமெத்தனை?

பேசுகிறவனாகிய தன்மை யிடமும், பேசக்கேட்பவனாகிய முன்னிலை யிடமும், பேசப்படுபவனாகிய படர்க்கை யிடமுமென இடம்மூன்றாம்.

(உ-ம்.) தன்மை=நான், நாம்.
முன்னிலை=நீ, நீங்கள்.
படர்க்கை=அவன், அவர்கள்.

82. ஆடூஉ முன்னிலை மகடூஉ முன்னிலையாவதென்ன?

முன்னிலையில் ஆண்பாலைக்குறித்தசொல் ஆடூஉ முன்னிலையாம், முன்னிலையில் பெண்பாலைக் குறித்தசொல் மகடூஉ முன்னிலையாம்.

(உ-ம்.) மகனே......ஆடூஉமுன்னிலை.
மகளே.......மகடூஉமுன்னிலை.

83. மொழியெத்தனை? (Number)
ஒருமை பன்மையென விரண்டாம்.

(உ-ம்.) நான் - கை - ஒருமை.
நாங்கள் - கைகள் - பன்மை.

84. சொல் எத்தனை?

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைசசொல், உரிச்சொல் என நான்காம்.

85. பெயர்ச்சொல் ஆவதென்ன?
யாதாமொன்றின் பெயரோ பெயர்ச்சொல்லாம்.

(உ-ம்.) கிருஷ்ணன், மதுரை, ஓடினவன், குதிரை.

*Note.*—பெயர்ச்சொல்லில் வினையடியாய் வந்தவையேயன்றி மற்றவை காலங்காட்டா.

86. வினைச்சொல் ஆவதென்ன?

தொழிலையுணர்த்துஞ் சொல்லே வினைச்சொல்லாம்.

(உ-ம்.) வெட்டினான். ஓடுகிறான். நடக்கும்.

87. இடைச்சொல் ஆவதென்ன?

பெயர் வினைகளைச் சேர்ந்துவரும் உருபுகளே இடைச்சொற்களாம்.

(உ-ம்.) மரத்தை—இதில் அத்து ஐ என்பவைகளும், ஓடினான்—இதில் இன் ஆன் என்பவைகளும் இடைச்சொற்களாம்.

88. உரிச்சொல் ஆவதென்ன?

பெயர்வினைகளைத் தழுவி அவற்றின் குணவிசேஷங்களைக் காட்டுஞ் சொல்லாம்.

(உ-ம்) நனிதூயன், சாலப்பேசினான்.

☞ (மேற்கூறிய நான்குசொற்களையும்பற்றி அல்வவ்வியல் களில் விவரமாய்க் கூறப்படும்)

## 27. அப்பியாசம்.

1. அடியில்வரும் பெயர்களுக்குத் திணை, பால், இடங்களைக் கூறுக:—கள்ளன், துரையே, கைகள், நாய், மலையே, உன்னை, எங்களுக்கு, அவள், அரசனே, குதிரை, சங்கு, தெய்வம், கோபாலா, சக்கரவர்த்தினி, சோமேசா, நீங் கள், குருக்கள் நான்.

2. கேட்டேன், தந்தாள், வீட்டுக்கு, இவற்றை, அறுத்து, கண்ணை, கண்டனன், குதிரையில், என்னிடத்திலிரு ந்து, ஈந்த:—இவைகளில் பெயர் வினைகளை எடுத்துக் காட்டி அவைகளைச்சேர்ந்துவந்த இடைச்சொற்களின் னின்னவென்றுங் கூறுக.

---

89. திசைச்சொல் என்பதியாது?

தத்தம் பொருளுடனே செந்தமிழ் நாட்டிலும் வந்து வழங்கும் பற்பல திசைகளின் சொற்க ளாம்.

(உ-ம்) பெற்றம்=பசு; தள்ளை=தாய்; எகின்=புளி.

## 28. அப்பியாசம்.

பின் வருபவைகளிற் றிசைச்சொற்களெவை? அவற்றை நீக் கிச் செந்தமிழ் மொழிகள் வைத்து நிரப்புக.

1. பாம்பைக் கம்பால் அடி.
2. அவன் சீக்காய்க்கிடக்கிறான்.
3. மைசூரில் ராகி தின்றார்கள்.
4. உன் அச்சன் வீட்டிலிருக்கிறானா?
5. "கட்டளை கோடித்திரியிற்கருதிய இட்டிகையுங்கோடும்"

7. ஓடாவி வந்தானு ?
8. என் சொக்காய் கிழிந்துபோயிற்று.
9. மலையாளத்தில் தேங்காய் ஜாஸ்தி.
10. இந்தப்பணத்தை அவருக்குப் பட்டுவாடாசெய்.

---

90. வடசொல் ஆவதென்ன ?

தமிழில் வந்துவழங்கும் ஆரியபாஷையின் மொழிகளாம்.

(உ - ம்) குஞ்சரம்=யானை; பிரயத்னம்=முயற்சி.

## 29. அப்பியாசம்.

பின் வருவனவற்றில் உள்ள வடசொற்களை யெடுத்துக்காட்டி அவற்றிற்குப் பதிலாகத் தமிழ்மொழிகள் வைத்து நிரப்புக.

1. வெடிமருந்து மிசிரபதார்த்தம்.
2. சராசரங்களைப் படைத்தவர் கடவுள்.
3. நட்சத்திரங்கள் சலிக்கின்றனவா ?
4. சூரியன் பூமியை ஆகருஷிக்கிறது.
5. அஷ்டதிக்குஞ் சென்றுபார்த்தான்.
6. இந்த உலகு நமக்குச் சாஸ்வதமா ?
7. அங்கிலேயர்வந்து சககமனத்தை நிறுத்தினார்கள்.
8. அவன்வீடு பஷ்பமாகிவிட்டது.

---

91. இயற்சொல் திரிசொல் என்பவை எவை ?

(a) கற்றூர் கல்லார் யாவரும் வழங்குஞ்சொல இயற்சொல்லாம்.

(உ-ம்) மண், வா.

(b) கற்றோரேயன்றி மற்றோரறியாச்சொல் திரிசொல்லாம். அதிற் பலமொழிகள் ஒரு பொருளையும் ஒருமொழி பலபொருளையும் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | கிள்ளை, சுகம், தத்தை=கிளி ... ... ...<br>வாரணம்=யானை, சங்கு, கோழி ... ... | பெயர். |
| | படர்ந்தான், ஏகினான், சென்றான்=போனான், ஆர்த்தான்=காட்டினான், ஒலித்தான்... | வினை. |
| | அம், ஆம், எம்=ஓம் ... ... ... ...<br>தந்தனம், தந்தாம், தந்தேம்=தந்தோம் ...<br>கொல்=ஐயம், அசைநிலை ... ... ... | இடை. |
| | சால, தவ, உறு, நனி=மிகை... ... ...<br>கடி=காப்பு, கூர்மை, மணம் ... ... ... | உரி. |

### 30· அப்பியாசம்.

1. பெயர் வினைகள் ஒருபொருள் குறித்த பலசொல்லாயும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாயும் வருவதற்கு உதாரணங்கள் தருக.

2. அடியில் வருவன ஒருபொருள் குறித்த பலபெயர்வினைத்திரிசொற்கள் தாமெனக் காட்டுக.

a. கூறினான், புகன்றான், உரைத்தான், பகர்ந்தான், அறைந்தான்,

b. கிரி, வரை, வெற்பு, பருவதம்.

c. பூஜித்தான், தொழுதான், வணங்கினான்.

d. ஆதித்தன், பரிதி, ஞாயிறு, அருணன், ஆதவன்.

e. பள்ளிகொண்டான், கண் அயர்ந்தான், உறங்கினான்.

f. பா, கவி, யாப்பு, செய்யுள்.

---

92. வழக்காவதென்ன ? எத்தனை வகைப்படும் ?

யாவரும் வழக்கமாய்ப்பேசும் விதம் வழக்கென்னப்படும். அது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ ஆகிய மூவ்வகை இயல்பு வழக்கு, இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகிய மூவ்வகைத் தகுதிவழக்கு என இருவகைப்படும்.

## (உ - ம்) 1. இயல்புவழக்கு.

| | |
|---|---|
| a. இலக்கணமுடையது. ‖ இலக்கணம் பிசகாமல் வருவது. | = மண், கல். |
| b. இலக்கணப்போலி. ‖ இலக்கணப்பிசகா யிருப்பினும் அதைப்போல வருவது. | = கடைப்புறம்=புறங்கடை. காலுள் = உள்ளங்கால். |
| c. மரூஉ. ‖ முன் இலக்கணமாயிருந்து கெட்டு மாறினது. | = அருமருந்தன்ன = அருமந்த |

## 2. தகுதி வழக்கு.

| | |
|---|---|
| a. இடக்கர் அடக்கல். ‖ சொல்லத்தகாததை மறைத்துச் சொல்வது: | கால் கழுவப்போனான். |
| b. மங்கலம். ‖ அமங்கலத்தை மங்கலமாகக் கூறுவது. | தாலிஅறுந்தது என்பதற்குத் தாலிபெருகிற்று என்பது. |
| c. குழூஉக்குறி. ‖ பிறர் அறியாதிருக்கும் பொருட்டுத் தாம் சொல்லக்கருதியதை வேறொரு அறிகுறியாற் சொல்லுவது. | பறி=பொன். (தட்டார் சொல்லிக்கொள்ளுவது) சொல் விளம்பி, வெள்ளைக் குதிரை=கள். (குடிகாரர் சொல்லிக்கொள்ளுவது) |

### 31. அப்பியாசம்.

பின்வரும் வாக்கியங்களில் என்னென்ன வழக்குகளிருக்கின்றன ?

1. உச்சந்தலை உடைய அடித்தான்.
2. சாப்பிட வரலையா ?
3. [illegible]

4. மேற்படியான் போய்விட்டானு ?
5. உள்ளங்கையில் புண்ணிருக்கிறது.
6. காயா பழமா ?
7. இரக்கவுங்காலமாச்சோ ?
8. சோற்றிற் சின்னச்சாமி கிடக்கிறது.
9. உள்ளூரிற் குடியிருக்கிருன்.
10. வெள்ளையப்பனிருந்தால் எல்லாம் நடக்கும்.
11. வாச்சுது நல்லவேளை.
12. சொள்ளைமாடன் வந்தானு ?
13. ஒரு போசனக்குறடாவிருந்தாற்போதும்.
14. அவனை நட்டாற்றில் விட்டுவிடாதே.

---

93. ஆகுபெயராவதென்ன ?

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நால்வகை அளவு, சொல், தானி, கருவி, காரியம், கர்த்தா என்பவற்றின் பெயர்கள் தத்தமக்குச் சம்பந்தமுள்ள வேறென்றுக்குப் பெயராய்ப் பூர்வந்தொடுத்து வழங்கிவரின் ஆகுபெயரெனப்படும்.

(உதாரணம்.)

| | | |
|---|---|---|
| 1. பொருளாகுபெயர் | தாமரைமலர்ந்தது. | பொருளின்பெயர் பூவிற்காயிற்று. |
| 2. இடவாகுபெயர் | பள்ளிக்கூடம் முடிந்தது. | இடப்பெயர் பாடத்திற்காயிற்று. |
| 3. காலவாகுபெயர் | காரறுத்தது. | காலப்பெயர் பயிருக்காயிற்று. |
| 4. சினையாகுபெயர் | வெற்றிலை நட்டான். | சினைப்பெயர் கொடிக்காயிற்று. |
| 5. குணவாகுபெயர் | வீட்டுக்கு வெள்ளை பூசு. | குணப்பெயர் சுண்ணத்திற்காயிற்று. |
| 6. தொழிலாகுபெயர் | சுண்டல் ருசியாயிருக்கிறது. | தொழிற்பெயர் பொருளுக்காயிற்று. |
| 7. எண்ணலளவை ஆகுபெயர் | இவன் எண்பதில்பிறந்தவன். | எண்பெயர்வருஷத்திற்காயிற்று. |

| | | |
|---|---|---|
| 8. எடுத்தலளவை ஆகுபெயர் | துலாக்கோல். | எடுத்தல் அளவைப்பெயர் துலைக்காயிற்று. |
| 9. முகத்தலளவை ஆகுபெயர் | படி உடைந்தது. | முகத்தல் அளவைப்பெயர் பாத்திரத்துக்காயிற்று. |
| 10. நீட்டல் அளவை ஆகுபெயர் | வேலூர்தடி விளைந்தது. | நீட்டல் அளவைப்பெயர் வயலுக்காயிற்று. |
| 11. சொல்லாகுபெயர் | நூலுக்கு உரைசெய்தவரார் ? | சொல்லே நூலுக்காயிற்று. |
| 12. தானியாகுபெயர் | நெஞ்சு நொந்தது. | தானியே தானத்திற்காயிற்று. |
| 13. காரணவாகுபெயர் | திருவாசகம். | காரணம் காரியத்திற்குப் பெயராயிற்று. |
| 14. காரியவாகுபெயர் | வேற்றுமை எட்டு. | காரியம் காரணத்திற்குப் பெயராயிற்று. |
| 15. கர்த்தாவாகுபெயர் | கொன்றைவேந்தன் படி. | கர்த்தாப்பெயர் நூலுக்காயிற்று. |

## 32. அப்பியாசம்.

பின் வருவனவற்றிலுள்ள ஆகுபெயர்களை யெடுத்துக்காட்டி இன்னின்ன வகையெனவுங் கூறுக.

1. மரத்தில் பறவை இருக்கிறது.
2. வண்ணான் வெள்ளை கொண்டுவருகிறான்.
3. சுற்றத்தைத் தழுவவேண்டும்.
4. வேடிக்கை பார்க்கப் பட்டினமெல்லா மோடிற்று.
5. பயறு சீக்கிரம் பூத்துவிட்டது.
6. ஆழாக்கைத் தம்பி உடைத்துவிட்டான்.
7. உன் காதிலிருக்கும் சிவப்பு விலையென்ன ?
8. அவன் அரையில் கட்டியிருக்கும் கச்சை என்னுடையது.
9. மல்லிகை மலர் வாசனையுள்ளது.
10. ''நீர்சான்றுயர நெல்லுயரும்''
11. அவன் சொல் எனக்குத் தெரியுதில்லை.
12. ''வானக் காளிநோக்கி வாழுமுலகம்''

13. "ஊருடன் கூடிவாழ்"
14. "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான்"
15. திருவள்ளுவர் படித்தான்.

94. சொற்கள் என்னென்ன விதமாய்த் தத்தம் பொருளை யுணர்த்தும்?

வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தும்.

(உதாரணம்.)

| | | |
|---|---|---|
| 1. இம்மாடு கன்றைக் காணாமல் கதறுகிறது. | மாடு ‖ பொதுச்சொல் | கன்று என்றதனால் காளை அல்ல பசு. |
| 2. மரைமலர் ஆரம். | மரை ‖ முதற்குறை | மலர் என்றதனால் தாமரை. |
| 3. சோற்றில் சின்னச்சாமி கிடக்கிறது. | சின்னச்சாமி ‖ தகுதிவழக்கு | சோற்றில் என்றதனால் சிறுகல். |
| 4. காரறுத்தது. | கார் ‖ ஆகுபெயர் | அறுத்தது என்றதனால் கார்காலப்பயிர். |
| 5. பூங்கொடி வந்தாள். | பூங்கொடி ‖ அன்மொழித்தொகை | வந்தாள் என்றதனால் பெண் |
| 6. ஆக்பர் நல்ல அரசன். | வினைக்குறிப்பு | ஆக்பர் அரசன் என்றதனால் இருந்தானென்றும் இறந்தகால வினைதோன்றிற்று. |
| 7. ஆத்திசூடி படித்தாயா? | முதற்குறிப்பு | படித்தாயா என்றதனால் நூலைக்காட்டிற்று. |
| 8. அஞ்சும் மூன்றும் இருந்தால் அறியாப்பெண்ணும் கறிசமை | அஞ்சும் மூன்றும் ‖ தொகைக்குறிப்பு | கறிசமைப்பாள் என்றதனால் 5=புளி, மிளகு, உப்பு, கடுகு, சீரகம். 3=நீர், நெருப்பு, விறகு. |

### 33. அப்பியாசம்.

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள குறிப்புச் சொற்களை யெடுத்தெழுதி, அவை இன்னின்னவகையென்றும் இன்னகுறிப்பால் இன்னபொருளை உணர்த்துகின்றன வென்றுங் கூறுக.

1. நூறு பிள்ளைகளும் ஐவரோடு சண்டைசெய்தார்கள்.
2. விளக்கு ஒடிந்தது.
3. கொன்றைவேந்தன் படித்தான்.
4. பிள்ளைகள் வேட்டைக்குப் போகிறார்கள்.
5. கண்மணியே படியையா.
6. அரிச்சந்திரன் சத்தியவாக்கன்.
7. வெற்றிலை நட்டான்.
8. நன்காடு சேர்ந்தான்.
9. பத்து பெற்றாள் பத்தினி அம்மாள்.
10. உழுத மாடு வந்ததா?
11. காலில்லாதவன் முடவன்.

---

## 1. பெயரியல்.

95. பெயர்ச்சொற்கள் எத்தனை விதப்படும்?

இடுகுறிப்பெயர் காரணப்பெயர் என இருவகைப்படும்.

(உ-ம்)

1. பனை, நீர். (ஒரு நிமித்தமுமின்றி இயல்பாயமைந்தவை)
2. கணக்கன். (கணக்கெழுதுகிற காரணம் பற்றி வந்தது.)

96. பொதுப்பெயர் சிறப்புப்பெயராவதென்ன?

திணைபால் இடங்களுக்குப் பொதுவாய்வரும் பெயர் பொதுப்பெயராம், அங்ஙனமின்றி ஒன்

## விவரம்.

(*a*) திணைப்பொதுபபெயர் = உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொது.

(உ-ம்.) சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது.

(*b*) பாற்பொதுப்பெயர் = ஆண்பாலோ பெண் பாலோ; ஒன்றன்பாலோ பலவின்பாலோ வென்றறியக்கூடாதது.

(உ-ம்.) 1. ஊமைவந்தான்; ஊமைவந்தாள்.

2. குதிரை வந்தது; குதிரை வந்தன.

(*c*) இடப்பொதுப்பெயர் = மூன்றிடங்களிலும் வரத்தக்கது.

(உ-ம்.) 1. கண்டவன்நான்; கண்டவன்நீ; கண்டவன் அவன்.

2. நாமெல்லாம்; நீரெல்லாம்; அவரெல்லாம்.

*Note.*—சிறப்புப்பெயர் ஐம்பாலிலும் வரும்.

### 34. அப்பியாசம்.

1. பின் வரும் வாக்கியங்களிலுள்ள காரணப்பெயர்களை யெடுத்தெழுதிக் காரணத்தையும் விளக்குக.

a. மரப்பெட்டிப்பூட்டு உடைந்துபோயிற்று.

b. நறுக்குமூலமும் சுக்கும் நல்ல மருந்துகள்.

c. பூமி இருள்வலியைச் சுற்றியோடுகிறது.

d. சுருட்டுப் புகைக்கிறதிற் சுகமில்லை.

e. நாற்காலியில் உட்காரு.

f "நானே நல்ல மேய்ப்பன்."

g. "நல்லாரைக்காண்பதுவு நன்றே"

h. "ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள்"

மூவ்விதப் பொதுப்பெயர்களுக்கும் வகைக்கு ஆறு உதாரணந்தருக.

97. ஒவ்வொரு பாலுக்குமுரிய விகுதிகளெவை ?

a ஆண்பால்விகுதிகள்:-

அன்=அவன்.
ஆன்=ஊரான்.
மன்=வடமன்.
மான்=கோமான்.
ன்=மகன்.

b. பெண்பாலவிகுதிகள்:-

அள்=அவள்.
ஆள்=மனையாள்.
இ=கள்ளி.
சி=வலைச்சி.
ள்=மகள்.

## NOTES.

1. அன் ஆன் என்பவைகளை ஈற்றிலுடைய ஆண்பாற்பெயர்கள் பெரும்பாலும் ஈறுகெட்டு ச்சி, த்தி, என்பவை புணர்ந்து பெண்பாலாகும்.

(உ-ம்.) துலுக்கன்=துலுக்கச்சி; வண்ணான்=வண்ணாத்தி.

2. சிலவிடத்து **அன் ஆன்** என்பவை கெட்டு இகரவிகுதி பெற்றுப் பெண்பாலாகும்:—

(உ-ம்.) பொன்னன்=பொன்னி; பூலான்=பூலி.

3. வெவ்வேறு விகாரங்களாலும் பெண்பாலாகும்:—

(உ-ம்.) சக்கிரவர்த்தி=சக்கிரவர்த்தினி.
மகிபன்=மகிஷி, பெருமான்=பெருமாட்டி.

c. பலர்பால் விகுதி:—

அர்=பாலகர்.
ஆர்=தட்டார்.
கள்=பெண்கள்.
மார்=தேவிமார்.
ர்=பிறர்.

d. ஒன்றன்பால் விகுதி:—

து=வந்தது. எது.

e. பலவின்பால் விகுதிகள்:—

வை=இவை.
அ=செய்வன.
கள்=மரங்கள்.

### 35. அப்பியாசம்.

அடியில்வரும் பெயர்களில் ஆண்பாலுக்குப் பெண்பாலும் பெண்பாலுக்கு ஆண்பாலுங் கூறுக

அண்ணன், ஆய்ச்சி, ஈனன், பேயன், சீமாட்டி, காதகன்

தாசி, புருஷன், சக்கிலியன், இருளன், குறவன், தாதி, தூதன், சீஷன், பாட்டன், புலையன், கொலைபாதகன், அடியாள், கொடியன், பாணன், கூத்துக்காரன், பத்தினி, ஓட்டன், பாலகன், செட்டி, தச்சன்.

---

98. மூன்றிடத்துக்குமுரிய விகுதிகளெவை?

74 - ம் பக்கம் பார்க்க.

### 36. அப்பியாசம்.

தான், யான், நான், நீ, அவன், அது, யாது, எது, உதவாது, ஆள், அண்ணன், புரு, எனக்கு, கோ, அரசன்—இவைகட்குப் பன்மை எழுதுக.

---

99. வேற்றுமையாவது என்ன? எத்தனை?

பெயரின் இயல்பைமாற்றுவதேயாம், பெயர்ச்சொல் எட்டு வேறுபாடுகளை யடையும்.

100. வேற்றுமை உருபுகளைச் சுருக்கிச் சொல்க.

ஐ, ஆல், கு, இன், அது, கண், (விளி.)

101. முதல் வேற்றுமை எது?

பெயர் இயல்பா யிருக்கையில் முதல்வேற்றுமை அல்லது எழுவாய் என்னப்படும். அது வினையும் பெயரையும் வினாவையுங் கொண்டு முடியும்.

(உ-ம்.) 1. மனிதன் பெட்டியைச் செய்வான்.

2. மந்திரிக்கழகு வரும்பொரு ளுரைத்தல்.

3. எதிலனா நோவதேவன்?

*Note.*—1. எழுவாய், செய்பவன், வினைமுதல், கருத்தா இவை ஒருபொருட் பெயர்களாம்.

*Note*—2. எழுவாய் = எழு வேறுபாடுகளை யடையக்கூடிய இடம்.

102. இரண்டாம் வேற்றுமைக்கு உருபென்ன ? பொருள்கள் எவை ?

ஐ என்பதே; அதன் பொருட்களாவன:—

| | |
|---|---|
| 1. ஆக்கல் ‖ செய்தல் | = கடவுள் உலகத்தைப் படைத்தார். |
| 2. அழித்தல் | = ராமன் கோபாலனைக் கொன்றான். |
| 3. அடைதல் ‖ பெறுதல் | = பாவி நரகத்தை அடைவான். |
| 4. விடுதல் | = குடியை விட்டான். |
| 5. ஒத்தல் ‖ ஒப்பாதல் | = புலியையொத்தவன். |
| 6. உடைமை | = செல்வத்தை யுடையவன். |

## 37. அப்பியாசம்.

பின் வருபவைகளில் 2-ம் வேற்றுமைகளை யெடுத்துக்காட்டிப் பொருள்கூறுக.

1. சூதாடுவதில் காலத்தைப் போக்கினான்.
2. வீடுவிட்டுக் காடுசேர்ந்தான்.
3. இரும்பைக் காந்தமிழுக்கின்றது.
4. சோறு சமைத்தாள்.
5. பல்லி மரத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறது.
6. உத்தியோகத்தை விட்டான்.
7. "சலவரைச் சாராவிடுதலினிதே"
8. பூனையைப்போலிருந்து புலிபோலபாய்ந்தான்.
9. "ஒன்றனைச்சேரேல்"
10. குதிரையைப் பிள்ளைபோல் வளர்த்தான்.

103. மூன்றாம் வேற்றுமைக்குருபுகளெவை? பொருளென்ன?

ஆல், ஆன், ஒடு, ஓடு; பொருள்களாவன:—

1. கருவி— { a. முதற்கருவி=மண்ணாற்செய்தகுடம்.
b. துணைக்கருவி=திரிகையாற் செய்தகுடம்.

2. கர்த்தா— { a. ஏவுதற்கர்த்தா = அரசனாற் கொல்லப்பட்டான்.
b. இயற்றுதற்கர்த்தா=சேவகனாற்கொல்லப்பட்டான்.

3. உடனிகழ்ச்சி || கூடச்செல்லுதல் } = பசுவோடு கன்றும்வந்தது.

38. அப்பியாசம்.

பின் வருபவைகளில் 3-ம் வேற்றுமைக்குப் பொருள்கூறுக.

1. கடவுளால் ஆகாத காரியம் இல்லை.
2. உன்கையால் ஒரு அடி அடி.
3. "கொலைக்ளவு செய்வாரோ டிணங்கவேண்டாம்"
4. செம்மானாற் செய்யப்பட்ட செருப்பு.
5. "உருவத்தால் நீண்டஉயர் மரங்கள்"
6. இது என்னா லாகாது.
7. "கடலேயனையம் யாங் கல்வியால்"
8. துரையால் எமக்கோர்வீடு கட்டப்பட்டது.
9. "பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து பசியாலலைந்து முலவா, அநியாயவெங்க ணரவாலிறந்த வதிபாவமென்கொலறியேன்"

---

104. நான்காம் வேற்றுமைக்குருபென்ன? பொருள்களெவை?

கு என்பதாம்; பொருள்கள்.—

1. கொடை = அவனுக்கு அன்னமிடு.
2. பகை = கடவுளுக்குப் பாவமாகாது.
3. நேர்ச்சி = இராமன் உனக்குச் சிநேகிதன்.

5. அது ஆதல் = தாலிக்குத்தங்கம்.
6. நிமித்தம் = தேறுவதற்குக் கற்றான்.
7. முறை = இவன் ராமனுக்குத் தம்பி.

### 39. அப்பியாசம்.

அடியில் வருவனவற்றில் 4-ம் வேற்றுமைக்குப் பொருள் கூறுக.

1. "எருதிலுழவர்க்குப் போகீரமின்று"
2. எனக்குக் கணிதம் மெத்தப்பிரியம்.
3. "கற்றோர்க்குக் கல்வி நலனேகலன்"
4. ஒரு வெள்ளைக்குக் கூலியென்ன ?
5. ஏழைகளுக்குத் தர்மஞ் செய்.
6. வேட்டைக்குப் போனார்கள்.
7. "கண்ணுக்கணிகலங் கண்ணோட்டம்"
8. "ஈ எனக்கென்னும் இம்மாற்றம்"
9. மோதிரத்துக்குப் பொன் கொடு.
10. அவருக்குக் குமாரர் எத்தனைபேர் ?

105. ஐந்தாம் வேற்றுமைக் குருபென்ன ? பொருளென்ன ?
இல். இன் என்பவையே; பொருள்.—

1. நீங்கல் = விசும்பிற்றுளிவீழின்.
2. ஒப்பு = பூனையிற் பெரிது புலி.
3. எல்லை = சென்னையிற் றெற்கு செங்கற்பட்டு.
4. ஏது = நரிதந்திரத்திற் சிறந்தது.

*Note*.—இவ்வேற்றுமையின் சொல்லுருபுகள் நின்று இருந்து காட்டிலும் பார்க்கிலும். என்பவையாம், அவைகளில் முன்னவையிரண்டும் நீங்கற் பொருளிலும், பின்னவை எல்லைப்பொருளிலும் வரும்.

### 40. அப்பியாசம்.

பின் வருவனவற்றில் 5-ம் வேற்றுமைகட்குப் பொருள் கூறுக.

1. கண்ணினின்றும் நீர்த்தாரை பெருகியது.
2. "இரத்தலின்னூங் கிழிவரவில்லை"
3. "கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று"
4. படகிற் பெரிது கப்பல்.
5. இவர் பாட்டில் வல்லவர்.
6. வில்லின்னீங்கு பாணம்.
7. "மழலை கேட்டலமிழ்தினினிது"
8. "மக்கட் பேற்றிற் பெரும்பேறில்லை"

106. ஆறும்வேற்றுமையின் உருபுகளெவை? பொருளென்ன?

ஒருமைக்கு அது, ஆது ; பன்மைக்கு அ.
பொருள்கள்:—

*

| | | |
|---|---|---|
| 1. பண்புத்தற்கிழமை. | = | முகிலினது வெண்மை. |
| 2. உறுப்புத் | ,, | = | எனது கண். |
| 3. ஒன்றன்கூட்டத் ,, | = | நெல்லது குப்பை. |
| 4. பலவினீட்டத் ,, | = | மிருகங்களது மந்தை. |
| 5. திரிபினாக்கத் ,, | = | புகையிலையது பொடி. |
| 6. பொருட்பிறிதின்கிழமை | = | எனது வஸ்திரம். |
| 7. இடப்பிறிதின் ,, | = | எனது வீடு. |
| 8. காலப்பிறிதின் ,, | = | எனது நாள். |

*Note.* 1. இவ்வேற்றுமைக்குச் சொல்லுருபு உடைய.

2. தற்கிழமை=தன்னோடு பொருந்தியவற்றின் உரிமை. பிறிதின்கிழமை = தன்னோடுபொருந்தாதவற்றின் உரிமை.

* 3. இன் என்பது சாரியை.

### 41. அப்பியாசம்.

பின் வருவனவற்றில் 6-ம் வேற்றுமைகளை யெடுத்துக்கா

1. "சிற்றுளுடையான் படைக்கல மாண்பினிதே"
2. அந்தச்சட்டையின் நிறமென்ன ?
3. நெல்லினது மாவும் சர்க்கரைப்பாகும்.
4. குதிரைகளின் ஓட்டத்தைப்பார்.
5. நமது மக்கள கண்கள்.
6. "வீரன்கேண்மை கூரம்பாகும்"
7. கொக்குகளின் படை.

---

107. ஏழாம் வேற்றுமையின் உருபுகளெவை ? பொருளென்ன ?

இல், கண்; பொருள்கள்:—

| தற்கிழமை. | பிறிதின்கிழமை. |
|---|---|
| 1. பொருள்=நெருப்பிற்சூடு | பாலில் ஈ |
| 2. இடம்=ஊரில்வீடு | வீட்டில் நாய் |
| 3. காலம்=நாளில்நாழிகை | வைகாசியில் தேரோடும் |
| 4. சினை=கண்ணிற்கருவிழி | காதிற்கடுக்கன் |
| 5. குணம்=கறுப்பிலழகு | இளமையிற் செல்வம். |
| 6. தொழில்=ஓட்டத்தில்விரைவு | ஆட்டத்திற் பாட்டு. |

*Note.*—மேற்கூறிய பொருள் முதலியவற்றிற்கு இடமாய் நிற்றலே இவ்வேற்றுமையின்பொருள்.

## 42. அப்பியாசம்.

அடியில்வரும் வாக்கியங்களில் உள்ள 7-ம் வேற்றுமைகட்குப் பொருள்கூறுக.

1. பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் இருக்கிறார்.
2. "மூத்தவிடத்துப் பிணியின்றே"
3. வெண்கலத்தில் ஓசையிருக்கிறது.
4. குழம்பில் உப்பு இல்லை.
5. பாட்டிற் பரவசங்கொண்டான்.
6. விரலில் நகமிருக்கிறது.
7. கழுத்தில் தாவடம் போட்டான்.
8. ஒரு வருஷத்தில் பன்னிரண்டு மாதமிருக்கிறது.
9. அன்பில் பெருமையில்லை.

10. கண்ணிற் பார்வையிருக்கிறது.
11. மார்கழியில் மழைபெய்யும்.

108. (1) எட்டாம் வேற்றுமையின் உருபுகளெவை? பொருளென்ன?

பெயர்களின் ஈறுதிரிதலும், கெடுதலும், மிகுதலும், இயல்பாதலும், ஈற்றயலெழுத்துத்திரிதலும் இவ் வேற்றுமையின் உருபுகளாம். அதன் பொருள் அழைத்தற் பொருளாம்.

(உ-ம்.) அம்மை = அம்மா - ஈறுதிரிதல்.
அரசன் = அரச - ஈறுகெடுதல்.
மகன் = மகனே - ஈறுமிகுதல்.
பொன்னி = பொன்னி - இயல்பு.
பாவிகள் = பாவிகாள் - ஈற்றயல்திரிதல்.

Note. 1. அழைத்தல் எனினும் விளி எனினும் ஒன்றே.
2. அண்மைவிளி அல்லது சமீபத்திலுள்ளதை அழைக்கும்போது பெயர்கள் இயல்பாதலும், ஈறுகெடுதலும்; சேய்மைவிளி அல்லது தூரத்திலுள்ளதை அழைக்கும்போது, ஈறு மிகுதலும், ஈறுகெட்டு அயல்நீளுதலும், புலம்பல் விளிக்கு ஓகாரமும் வரும்.

(உ-ம்.) 1. தம்பி. தம்பி } அண்மைவிளி.
அரசன். அரச
2. மகன் - மகனே } சேய்மைவிளி.
கள்ளன் - கள்ளா
3. அண்ணுவோ - புலம்பல்விளி.

108. (2) எட்டாம் வேற்றுமை ஏற்காத பெயர்களெவை?

தன்மை முன்னிலைப்பெயர்களும், சுட்டுப்பெயரும், வினுப்பெயரும், தான் தாம்முதலிய பெயர்களும் விளிக்கப்படா.

### 43. அப்பியாசம்.

பின்வரும் விளிப்பெயர்களில் விளியுருபுகளெவை ?

நேரிழாய், பிறைநுதால், போஜா, "சினையாமைவைகுந் திருநாடா," "எருமைமேல் நாளைதுயில் வதியுமூர" நல்லாய், மக்காள், துரைசாமிவா, அப்பாவோ, பொன்னே.

---

109. எவ்வேற்றுமைகள் இன் சாரியை பெறும் ?

ஐ முதல் கண் ஈறாக உள்ள ஆறு வேற்றுமைகளும் பெறும்.

(உ-ம்.) பசுவினை, பசுவினால், பசுவிற்கு, பசுவினின்று, பசுவினது, பசுவின்கண்.

110. இயல்புதிரிந்து வேற்றுமை ஏற்கும் பெயர்களெவை ?

(a) தான் தாம் என்பவை தன் தம் எனத்திரியும்.

(உ-ம்.) தான்—தன்னை, தன்னால்; தாம்—தம்மை, தம்மால்.

(b) யான், யாம், நாம் என்பவை என், எம், நம் எனத்திரியும்.

(உ-ம்) யான்—என்னை, என்னால்; யாம்—எம்மை, எம்மால்; நாம்—நம்மை, நம்மால்.

(c) நீ, நீர் என்பவை நின், உன் எனவும் நும், உம் எனவுந் திரியும்.

(உ-ம்.) நீ—நின்னை, நின்னால், உன்னை, உன்னால்;
நீர்—நும்மை, நும்மால், உம்மை, உம்மால்.

Note. இவை 4-ம் வேற்றுமையை ஏற்கும்போது அகரச்சாரியை பெறும்.

(உ-ம்.) தனக்கு, உனக்கு, நமக்கு.

### 44. அப்பியாசம்.

1. ஈ, மரம், சேறு, சுவர், தலை:—வேற்றுமைப்படுத்துக.

2. தாம், யான், நீ—2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம் வேற்றுமை கூறுக.

3. கண்ணினின்று, தீயினுக்கு, தன, எனது, மழை, யானை, வீட்டின்கண்—இவை எவ்வேற்றுமையிலிருக்கின்றன?

111. இவ்வேற்றுமைகள் எவைகளைக்கொண்டு முடியும்?

எல்லைப்பொருளில் வரும் இன் என்னும் உருபும் ஆறும்வேற்றுமையுருபும் **பெயரைக்** கொண்டும், மற்ற வேற்றுமைகள் பெரும்பாலும், **வினையைக்** கொண்டும் முடியும்.

(உ-ம்.) 1. மதுரையின் வடக்கு.
2. குதிரையினது கால்.

1. கண்ணைமூடு, 2. காலால்உதை, 3. கோவிலுக்குப்போ, 4. வீட்டிலிருந்துவந்தான், 5. கடையில்இருந்தான், 6. மகனேபடி.

## 45. அப்பியாசம்.

பின்வரும் வாக்கியங்களில் வேற்றுமையுருபுகள் எவைகளைக் கொண்டு முடிந்தன?

1. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.
2. "நல்லோர் வரவானகைமுகங் கொண்டின்புறீஇ அல்லோர் வரவானமுங்குவார்—வல்லோர்.
3. சென்னையிற் றெற்கு செங்கற்பட்டு.
4. தலையில் உள்ளமயிர் எண்ணப்பட்டிருக்கிறது.
5. மரத்தால் உளிகொண்டு பெட்டிசெய்தான்.
6. உனது கருங்குதிரை எங்கே?
7. அவரளிக்கும் கூழுக்குக் குற்றேவல் செய்தான்.
8. கண்ணிற்சிறந்த உறுப்பில்லை.

ஒரு வேற்றுமையினுருபு வேறொரு வேற்றுமை யின் பொருளைத் தருமாயின் அது வேற்றுமை உருபு மயக்க மென்னப்படும்.

(உ-ம்.) 1. பையனைத் தலையிலடியாதே இதில் பையனை=பைய னுடைய. 2-ம் வேற்றுமை மயங்கி 6-ம் வேற்று மைப் பொருளைத்தந்தது.

2. வீட்டுக்குப்போ - வீட்டினிடத்து. 4-ம் வேற்று மை மயங்கி 7-ம் வேற்றுமைப்பொருளைத்தந்தது.

## 46. அப்பியாசம்.

பின் வருவனவற்றில்உள்ள வேற்றுமை மயக்கங்களை யெடு த்துக்காட்டி இன்னின்ன வேற்றுமை மயங்கிற்று என் றும் விளக்குக.

1. "கண்ணிற்சொலி செவியினோக்கு மிறைமாட்சி"
2. ஏழைகளை வயிற்றிலடியாதே.
3. கழுத்திற்குத் தாவடம்போடு.
4. கள்ளனைக் காலிற்சுடு.
5. "கல்லாவொருவனைக் காரணங்காட்டினும்"
6. உன்னை நம்பினவனை மோசஞ்செய்யாதே.
7. "மணற்கின்ற நாணற்கிழங்கு"
8. "காலத்தினாற் செய்தநன்றி"

# பெயர்ச்சொற்களுக்கு இலக்கணங்கூறும் வகை.

| பெயர். | வகை. | | | திணை | பால். | இடம். | வேற்றுமை | | | முடிபு | சந்தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இடுகுறியோ காரணமோ | காரணப்பெயரில் பண்புப்பெயரோ தொழிற்பெயரோ வினையாலணையும் பெயரோ. | பொதுப்பெயரோ சிறப்புப்பெயரோ | உயர்திணையோ அஃறிணையோ | ஆண்பாலோ பெண் ,, பலர் ,, ஒன்றன் ,, பலவின் ,, பால்பகாப்பெயரோ. | தன்மையோ முன்னிலையோ படர்க்கையோ | எட்டுவேற்றுமைகளில் எது ? | தொகையோ விரியோ. | பொருள். | எதைக்கொண்டு முடிந்தது ? | சந்தி உண்டானாற் கூறுக. |
| | | | | | | | | | | | |

☞ அட்டவணையிற் கூறிய கேள்விகளுக்கு விடையை அந்தந்தப் பட்டிகளில் எழுதிவிடுக, அல்லது அட்டவணையை ஞாபகத்தில் வைத்து அதற்கேற்க விடைகூறுக.

### 47. அப்பியாசம்.

அடியில் எடுத்தெழுதிய பதங்கட்கிலக்கணங்கூறுக.

1. "அறஞ்செயவிரும்பு"—அறம்.
2. நூறபலகல்—நூல்.
3. கெடுப்பதொழி—கெடுப்பது.
4. "வீரன்கேண்மை கூரம்பாகும்."—வீரன், கேண்மை.
5. நம்மைவிடப் பாக்கியருண்டோ ?—நம்மை.
6. "மவுனத்தோர்க்கில்லை வருங்கலகம்."—மவுனத்தோர், [கலகம்.
7. இட்டார் பெரியோர்.—இட்டார்.
8. "எல்லாவிளக்கும் விளக்கல்லசான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு."—விளக்கும், சான்றோர்க்கு.
9. "பெற்றறியாவந்தி பரிவாய்மகவைப் பெறுந்துயரம் நொந்தறிகுவாளோ நுவல்"—வந்தி, துயரம்.
10. பாவிகாள் ! ஏன் இப்படிச்செய்கிறீர்கள்—பாவிகாள்.

## 2. வினையியல்.

**113. வினைசொற்கள் எத்தனை வகைப்படும் ?**

தெரிநிலைவினை குறிப்புவினை யென இருவகைப் படும்.

**114. தெரிநிலை வினையாவதென்ன ?**

கர்த்தா, கருவி, நிலம், செயல், காலம், செயப் படுபொருள் இவ்வாறையும் வெளிப்படையா யத் தெரிவிப்பது தெரிநிலை வினையாம்.

(உ-ம்.) குடத்தை வனைந்தான்:—இதில்

கர்த்தா - குயவன்.
கருவி - தண்டசக்கரம்.
நிலம் - வனைந்தவிடம்.
செயல் - வனைதல்.

செயப்படுபொருள் - குடம்.— இவை வெளிப்படையாய்த் தெரிகின்றன.

115. குறிப்பு வினையாவ தென்ன ?

பொருள் முதலியவற்றின் காரணமாய்ப்பிறந்து கர்த்தா ஒன்றைமட்டுந் தெரிவித்துக் குறிப்பால் காலத்தைக் காட்டும் வினையே குறிப்பு வினையாம்.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| பொருளடியாய்ப்பிறந்த | குறிப்புவினை | | - பொன்னன். |
| இடமடியாய்ப் | ,, | ,, | - சீனத்தான். |
| காலமடியாய்ப் | ,, | ,, | - ஆதிரையான். |
| சினையடியாய்ப் | ,, | ,, | - பெருவயிறன். |
| குணமடியாய்ப் | ,, | ,, | - கரியன். |
| தொழிலடியாய்ப் | ,, | ,, | - தட்டான். |

Note. 1. மேற்கூறிய உதாரணங்கள் இயற்கையில் பெயர்களாய்த் தோன்றினும், வினைநிற்கும் இடங்களில் நின்று வினைப்பொருளையும் தருமாதலின் வினையென்னப்பட்டன.

(உ-ம்.) இவன் இன்று பொன்னனுயிருக்கிறான் என வினைவர வேண்டியவிடத்தில் "பொன்னன்" என்ற பெயர்வந்து வினைப்பொருளைத்தந்தது.

Note. 2. அவையிருக்கும் வாக்கிய சம்பந்தத்தால் மாத்திரம் காலம்முதலியன தெரியுமாகையால் குறிப்புவினையென்னப்பட்டன.

(உ-ம்.) இவன்முன் பொன்னன்; இவன் இன்று பொன்னன்; இவன் இனிப் பொன்னன்;—இவைகளில் முன், இன்று இனி என்னும் குறிப்புகளால் முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய காலங்கள் தெரிகின்றன.

48· அப்பியாசம்.

அடியில் வருவனவற்றில் உள்ள குறிப்பு வினைகளை யெடுத்தெழுதி ஒவ்வொன்றும் எதின்காரணமாய்ப் பிறந்ததெ

1. "கடங்கொண்டும் செய்வன செய்தலினிது"
2. "எத்துணைய வாயினுங் கல்வி"
3. "தலையின்மேற் சுமந்த கையள்"
4. "கல்வியில் பெரியவர் கம்பர்"
5. "அன்புக்கு உண்டோ அடைக்குந்தாள்"
6. "மவுனத்தோர்க்கில்லை வருங்கலகம்"
7. "பூனைக்குத் தன்குட்டி பொன்குட்டி"
8. "மின்னனைய தோளான்"
9. "அறன் அல்ல எண்மைய ஆயினுங்கைவிட்டு"
10. "இறைக் கடைதுடித்த புருவத்தள்"
11. "அகரமுதல எழுத்தெல்லாம்"
12. "உண்டுண் டுண்டென்னும் உணர்வினாற் சாற்றுமே"

116. தெரிநிலைவினை எத்தனை விதப்படும் ?

தன்வினை பிறவினை யெனவும், செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்றாவினை யெனவும், செய்வினை செயப்பாட்டுவினை யெனவும் ஆறுவிதப்படும்.

Note. இவை ஒவ்வொன்றும் விதிவினையாகவும் மறைவினையாகவும் வரும்.

117. தன்வினை பிறவினை யென்பவை எவை ?

தன் எழுவாய் தானாகச் செய்யும் செயலைக் காட்டும் வினை தன்வினையாம்; தன் எழுவாய் பிறகர்த்தாவைக்கொண்டு செய்யும் செயலைக் காட்டும் வினை பிறவினையாம்.

(உ-ம்.) தன்வினை — ஓடினான், விழுந்தான்.
பிறவினை — ஓட்டினான், விழுத்தினான்.

118. பிறவினை எப்படியுண்டாகும் ?

(a) வினைப்பகுதியோடே வி, பி, து, சு, ஆகிய

(உ-ம்.) கொல்வி, நடப்பி, இருத்து, பாய்ச்சு.

(b) வினைப்பகுதிகளில் மெல்லினம் வல்லினமா வதினாலும்,

(உ-ம்) அடங்கு=அடக்கு; எழும்பு=எழுப்பு.

(c) வினைப்பகுதிகளில் வல்லொற் றிரட்டுவதினாலும் தன்வினை பிறவினையாம்.

(உ-ம்.) மாறு—மாற்று; ஓடு—ஓட்டு.

49. அப்பியாசம்.

பின் வருபவைகளில் தன்வினை பிறவினைகளைக் குறிப்பிட்டுத் தன்வினைகளைப் பிறவினைகளாகவும், பிறவினைகளைத் தன்வினைகளாகவுமாற்றுக:—

கடந்தான், ஆட்டுகிறான், உருகினான், வந்து, ஓட, படி, குறைந்து, விடு, ஆற்றினான், கெட்டு, நடத்தினாள், தூறு, தின்றான், தேறினான், மாய்ந்தாள், அறுப்பித்தால், பெருக்கு, சாய்ந்தான், மடங்கு, செய்வித்து, காண், வீழு, பாய், ஈன்று, புக்கினாள், காய்ச்சு, நீங்கு, ஏவு, ஈ, ஒழுக்கு, உணர், பிழை, ஒடுங்கினான், சாடுகிறான், இயங்கிற்று,

119. செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை யென்பவை எவை?

இரண்டாம் வேற்றுமைப் பெயருக்கு முடிபாயிருக்கும்வினை செயப்படுபொருள் குன்றாவினை, முடிபாயிராதது குன்றியவினை.

(உ-ம்.) 1. அவன் மரத்தை வெட்டினான்.

2. அவன் விடியுமட்டும் தூங்கினான்.—இவைகளில் —வெட்டினான்— செய - குன்றாவினை. தூங்கினான் செய—குன்றியவினை.

*Note.* 1. செயப்படுபொருள் குன்றா = செயப்படு பொ

Note. 2. செயப்படுபொருள் குன்றிய = செயப்படுபொருளில்லா.

,, 3. எதை அல்லது யாரை என்ற கேள்விக்குத் தகுந்த விடைதரும் வினையே செயப்படுபொருள் குன்றா வினை.

## 50. அப்பியாசம்.

(a) பின்வரும் வாக்கியங்களில் செயப்படுபொருள் குன்றிய வினைகளையும் குன்றாவினைகளையும் எடுத்துக்காட்டி, குன்றாவினைகளுக்குச் செயப்படுபொருளையுங் கூறுக.

1. "அரவ மாட்டேல்"
2. "சோம்பித் திரியேல்"
3. "மொழிவ தறமொழி"
4. "இடம்பட வீடிடேல்"
5. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை"
6. "பெருங்கடலுள் பல்விலையமுத்தம் பிறக்கும்"
7. வெகுதூரம் கடலில் நீந்தினான்.
8. தாயைக் காணாதபிள்ளை மழையைக்காணாத பயிர்போல் வாடும்.
9. மரங்களை வெட்டி யழித்தான்.
10. "தெய்வ மிகழேல்"

(b) செய்பொருள் குன்றியவினைக்கு ஆறு உதாரணந்தருக.

---

120. செய்வினை செயப்பாட்டு வினைகளுக்குள்ள பேதமென்ன?

தன் எழுவாய் தானாகவாவது பிறகர்த்தாவைக் கொண்டாவது ஒருசெயலைசெய்தது என்னும் வினை செய்வினையாம், தன் எழுவாய்க்கு ஏதோ சம்பவித்தது என்னும் வினை செயப்பா

ட்டு வினையாம். படு உண் என்பவை செயப்பா ட்டு வினையின் உருபுகளாம்.

(உ-ம்.) 1. கொன்றான், நடத்தினான்.
2. கொலையுண்டான், நடத்தப்பட்டான்.

### 51. அப்பியாசம்.

பின்வரும் வாக்கியங்களில் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாகவும், செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாகவுமாற்றிப் பொருள் மாறாதிருக்கச் செய்க.

1. அவனைக் கள்ளர்பிடித்து, அடித்துக்கொன்றார்கள்.
2. நாங்கள் வையப்பட்டுப் பலவிடங்களுக்கும் இழுப்புண்டிருந்தாலும் அது பெரிதல்ல.
3. அவன் காட்டுப்புலியால் பீறுண்டான்.
4. குயவன் களிமண்ணை மிதித்துக் குழைத்துக் குடஞ்செய்கிறான்.
5. பாம்பு உலகத்தைத் தாங்குமா ?

---

121. விதிவினை மறைவினை யென்பவை எவை ?

ஒருசெயலை உண்டென்று கூறும் வினை விதிவினை, செயலை மறுத்து இல்லையென்று கூறும் வினை மறைவினையாம். இவை முறையே உடன்பாடு எதிர்மறை யென்னப்படும்.

(உ-ம்.) வருவான், உண்பான்.—விதி.
வாரான், உண்ணான்.—மறை.

Note. இரண்டு எதிர்மறை வினைகள் கூடி ஒரு உடன்பாட்டு வினையின் பொருளைத்தரும்.

(உ-ம்.) படியாமல் இரா தவையன்=படித்தவையன்.

## 52. அப்பியாசம்.

1. அடியில்வரும் வாக்கியங்களில் எதிர்மறைகளை உடன்பாடாக்கிப் பொருள் மாறுதிருக்க மாற்றியெழுதுக.

1. "நேராமற்கற்றது கல்வியன்று"
2. சொல்லாத வார்த்தை வெளியாகாது.
3. தீயில்லாமல் புகை எழும்பாது.
4. அடியாத மாடு பணியாது.
5. பழுக்காத காய்களைத்தின்னுதே.
6. தான்தேடாச்செல்வம் செல்வமன்று.
7. "நீரறிந்தொழுகாதாடாரமல்லன்."

(2) பின்வரும் வினைகளை எதிர்மறைகளாக்குக:—

ஓடி, காண, நடந்தேன். உண்டு, சென்று, வரும். போகொண்டு, எறிந்தாள். போகிறான், பேசுவான்.

---

122. வினைச்சொற்கள் போதுவாகவும் வருமோ ?

(1) தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாக வரும்.

(உ-ம்.) கெடு—நீ கெட்டுப்போ எனவும் கெடுத்துவிடு எனவும் பொருள்படும்.

(2) செயப்படுபொருள் குன்றியவினை குன்றுவினைகளுக்குப் பொதுவாகவரும்.

(உ-ம்.) வெளுத்தான்—வெளிறினன் எனவும் துணியை வெளுத்தான் எனவும் பொருள்படும்.

(3) செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவாகவும் வரும்.

(உ-ம்.) விண்டகமலம்=விரிந்தபூ
விண்டகாய்=விரிக்கப்பட்டகாய்.

*Note*. விண்ட என்பது கமலம் என்பதைச் சேர்க்கும்போது "விரிந்த" எனச் செய்வினையாகவும், காய் என்பதைச்சேர்க்க "விரிக்கப்பட்ட" எனச் செயப்பாட்டு வினையாகவும் ஆனது காண்க.

(4) விதிவினை மறைவினைகளுக்குப் பொதுவாகவும வரும்.

(உ-ம்.) நிறுத்தான் — எடை பார்த்தான் எனவும் நிறுத்தமாட்டான் எனவும் பொருள்படும்.

53. அப்பியாசம்.

களை, சிந்தினன், தேய், வாராய், பிரி, சிதறினன், செய்யா, புலிகொன்றவன், தேற்றினன், உண்ணாய், கடல்சூழுலகம், அலை:— இவை ஒவ்வொன்றும் எவ்வினைகளுக்குப் பொதுவாயிருக்கின்றனவென்று கூறுக.

---

123. வினைப்பகுதியினின்று பிறப்பவை எவை ?

வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும்பெயர், தொழிற்பெயர் என்பவையாம்.

124. இவைகளில் வினைமுற்று ஆவதென்ன ?

கர்த்தாமுதலிய ஆறையேனும், அவற்றுள் சிலவேனுந் தெரிவித்து, வாக்கியத்தை முடிக்கும் வினையே வினைமுற்றாம்.

(உ-ம்) வனைந்தான், சென்றான்.

125. ஒரோ வினைப்பகுதியினின்று எத்தனை வினைமுற்றுகள் பிறக்கும் ?

தன்மை முன்னிலையாகிய இருவிடத்திற்கும் பன்னிரண்டும் படர்க்கைக்குப் பதினைந்துமாக 27 வினைமுற்றுகள் பிறக்கும்.

127. அவ்விருபத்தேழு வினைமுற்றுகளையும், அவற்றின் விகுதிகளையும் காட்டும் அட்டவணையெது ?

ஒரோ வினைப்பகுதியினின்று பிறந்த 27 வினைமுற்றுகளைக் காட்டிய அட்டவணை. வினைப்பகுதி - காண்.

| இடம் | எண் / பால் | விகுதி | காலம் | எண் | வினைமுற்று |
|---|---|---|---|---|---|
| தன்மை. | ஒருமை | என் | இ | 1 | கண்டேன். |
| | | | நி | 2 | காண்கிறேன். |
| | | | எ | 3 | காண்பேன். |
| | பன்மை | அம், ஆம், எம், ஓம் | இ | 4 | கண்டனம். |
| | | | நி | 5 | காண்கிறோம். |
| | | | எ | 6 | காண்பேம். |
| முன்னிலை. | ஒருமை | ஐ, ஆய், இ | இ | 7 | கண்டனை. |
| | | | நி | 8 | காண்கிறாய். |
| | | | எ | 9 | காண்பாய். |
| | பன்மை | இர், ஈர் | இ | 10 | கண்டனிர். |
| | | | நி | 11 | காண்கிறீர். |
| | | | எ | 12 | காண்பீர். |
| படர்க்கை. | ஆண் | அன், ஆன் | இ | 13 | கண்டனன். |
| | | | நி | 14 | காண்கிறான். |
| | | | எ | 15 | காண்பான். |
| | பெண் | அள், ஆள் | இ | 16 | கண்டனள். |
| | | | நி | 17 | காணகிறாள். |
| | | | எ | 18 | காண்பாள் |
| | பலர் | அர், ஆர், ப. | இ | 19 | கண்டனர். |
| | | | நி | 20 | காண்கிறார். |
| | | | எ | 21 | காண்ப. |
| | ஒன்றன் | து, று | இ | 22 | கண்டற்று. |
| | | | நி | 23 | காண்கிறது. |
| | | | எ | 24 | கா[illegible] |
| | பலவின் | அ, உம் | இ | 25 | கண்டன. |
| | | | நி | 26 | காண்கின்றன. |
| | | | எ | 27 | காணும். |

### 54. அப்பியாசம்.

1. கொள், சா, விடு—இப்பகுதிகளினின்று பிறந்த ஐம்பாலுக்குமுரிய முக்காலத்துவினைமுற்றுகளையும் எழுதுக.
2. சென்றோம், போனார்கள், ஆயிற்று, வரும், கொண்டான், சென்றி, சுட்டீர், தருகின்றன, வந்தனை, வருப, போனேன்—இவை என்ன வினைமுற்றுகள்?
3. செய்தி, படி, ஓடி, மலர், கண்டனை — இவை பெயராகவும் வினையாகவும் வரச் சிறுவாக்கியங்களெழுதுக.

---

127. எதிர்மறை வினைமுற்று எவ்வாறு வரும்?

வினைப்பகுதியும் விகுதியும் இடைநிலை புணர்ந்தால் எதிர்மறை வினைமுற்றாம்.

(உ-ம்.) படி+ஏன் = படியேன்
படி+ஆய் = படியாய்
படி+ஆன் = படியான்
படி+ஆள் = படியாள்

*Note*. ஒன்றன்பாலுக்கு ஆகாரவிகுதியோடே து, புணர்ந்தும், பலவின்பாலுக்கு ஆ, ஒன்றும்வரும்.

(உ-ம்.) படி+ஆ+து=படியாது.
படி+ஆ=படியா.

128. ஏவல் வினைமுற்றாவதென்ன?

விகுதியாற் காலங்காட்டி எதிர்காலத்தில் மாத்திரம்வரும் முன்னிலை வினையேயாம். மின் என்பது அதன் பன்மை விகுதி.

(உ-ம்.) நடவாய், நடமின்.

129. எதிர்மறை ஏவல் வினைமுற்று எவ்வாறு வரும்?

வினைப்பகுதியோடே ஏல், அல் என்பவை புணர எதிர்மறை ஒருமை ஏவலாம். அன் மின் என்பக புணரப் பன்மையாம்.

(உ-ம்.) படியேல், படியல் - ஒருமை.
படியன்மின் - பன்மை.

*Note.* வழக்கத்தில் ஒருமைக்கு வினைப்பகுதியோடே ஆதே என்பதையும், பன்மைக்கு ஆதேயும், ஆதேயுங்கள்—என்பவைகளையும் சேர்க்கலாம்.

(உ-ம்.) படியாதே, படியாதேயும், படியாதேயுங்கள்.

55. **அப்பியாசம்.**

1. வா, போ, இரு—இப்பகுதிகளினின்று பிறந்த முக்காலத்துக்கும் பொதுவான (a) தன்மைப்பன்மை, (b) முன்னிலையொருமை (c) ஒன்றன்பாற் படர்க்கை, எதிர்மறை வினைமுற்றுகளை யெழுதுக.
2. தின்னன்மின், கொள்ளன்மின், சேரேல், வராதேயுங்கள், போடாதே, வரீர்:—இவைகளுக்கு உடன்பாடு கூறுக.
3. செல், கொன்மின், ஓடுங்கள், இருப்பாய்—எதிர்மறை கூறுக.

130. வியங்கோள் வினைமுற்றாவதென்ன?

மூன்றிடத்துக்கும் ஐம்பாலுக்கு முரியதாயும், விருப்பத்தையும் மரியாதையையும் உணர்த்துவதாயுமிருக்கிற ஏவல் வினைமுற்றே வியங்கோளாம். அதன் விகுதிகள் க, இ, இய, இயர், அல், ஆக என்பவையாம்.

(உ-ம்.) எழுதுக, வாழி, வாழிய, வாழியர், கொள்ளல், வருவதாக.

131. எதிர்மறை வியங்கோள் எவ்வாறு வரும்?

(1) வினைப்பகுதியோடே அற்க என்பதைச் சேர்ப்பதினாலும்,

(2) எதிர்கால எதிர்மறை வினைமுற்றுகளோடு ஆக என்பது புணர்வதினாலும் வரும்.

(உ-ம்.) படியாதிருப்பாய்+ஆக=படியாதிருப்பாயாக.
செய்யாதிருப்பேன்+ஆக=செய்யாதிருப்பேனாக.

132. வேறு, இல்லை, உண்டு, வேண்டும் என்பவை என்ன சொற்கள்?

அவை ஐம்பால் மூவிடங்கட்குமுரிய குறிப்பு வினை முற்றுகளாம்.

(உ-ம்.) அவன், அவள், அவர், அது, அவை, நான், நீ, அவன் } வேறு; இல்லை; உண்டு; வேண்டும்.

## 56. அப்பியாசம்.

செல், உண், பார், கொள்—இப்பகுதிகளினின்று பிறந்த

1. தன்மைப்பன்மை வியங்கோள்.
2. உயர்திணை ஆண்பாற்படர்க்கை வியங்கோள்.
3. பலவின்பால் வியங்கோள்.
4. முன்னிலை யொருமை எதிர்மறை வியங்கோள்:—இவைகளை யெழுதுக.

---

133. தெரிநிலை வினையெச்சம் என்றாலென்ன?

செயலையுங் காலத்தையுங்காட்டிச் செய்பவனைக் காட்டாமல் வேறொரு வினையைக் கொண்டு முடியும் வினையாம்.

(உ-ம்.) வந்து, வந்தால், வரின்.

(1) வினைப்பகுதியோடே இறந்தகாலஇடைநிலையும் உகரவிகுதியும் புணருவதினாலும்;

(உ-ம்.) படி + த் + உ=படித்து } த், தோன்றினதும்
காண் + ட் + உ=கண்டு } நெடில் குறிலானதும்
செல் + ற் + உ=சென்று } ல், ன் ஆனதும் சந்தி.

(2) வினைப்பகுதியோடே இ, ய் என்னும் விகுதிகள் புணர்வதினாலும் இறந்தகால வினையெச்சமாகும்.

(உ-ம்.) ஓடு+இ=ஓடி
போ+ய்=போய்

*Note*. இறந்தகால வினையெச்சத்திற்கு உதாரண வாய்பாடு **செய்து**, என்பதாம்.

135. எதிர்கால வினையெச்சம் எவ்வாறு வரும் ?

(1) வினைப்பகுதியோடு இறந்தகால இடைநிலையும் ஆல் விகுதியும் புணர்வதினாலும்,

(உ-ம்.) செய் + த் + ஆல்=செய்தால்
காண்+ ட் + ஆல்=கண்டால்

(2) வினைப்பகுதியோடு இல், இன் என்பவைபுணர்வதினாலும,

(உ-ம்.) செய்+இல்=செய்யில், செய்யின்.

(3) வினைப்பகுதியோடு க்க் என்பதும் இல், இன் என்பவையும் புணர்வதினாலும் வரும்.

(உ-ம்.) படி+க்க்+இல்=படிக்கில், படிக்கின்.

*Note*. எதிர்கால வினையெச்சத்துக்கு உதாரண வாய்பாடு **செய்தால்**.

136. முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் எவ்வாறு

(1) வினைப்பகுதியோடு அகரவிகுதி புணர்வதினுலும்.

(உ-ம்.) ஓடு+அ=ஓட.

(2) சில வினைப்பகுதிகளோடு க்க என்பது புணர்வதினுலும்,

(உ-ம்) படி+க்க=படிக்க.

(3) வினைப்பகுதிகளோடு அல், தல் விகுதிகளும், அதன்மேல் கு என்னும் விகுதியும் புணர்வதினுலும் வரும்.

(உ-ம்.) உண்+அல்+கு=உண்ணற்கு.
ஓடு+தல்+கு=ஓடுதற்கு.

*Note*. 1. முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்துக்கு உதாரணவாய்பாடு செய்ய.

*Note*. 2. அது வியங்கோட்பொருளையுந்தரும்.

(உ-ம்.) ஐயா வர.

*Note*. 3. அது அடுக்கிவரின் செய்கைத் தொடர்ச்சியை உணர்த்தும்.

(உ-ம்.) போடப்போடத்தின்றான்= போட்டுக்கொண்டேயிருக்க.

*Note*. 4. இவ்வினையெச்சம், காரணப்பொருட்டானல் இறந்தகாலத்தையும், காரியப்பொருட்டானல் எதிர் காலத்தையும் இரண்டுமில்லையானல் நிகழ்காலத்தையும் தெரிவிக்கும்.

137. எதிர்மறை வினையெச்சம் எவ்வாறு வரும்?

(1) வினைப்பகுதியோடே ஆமல், ஆது, ஆமே என்னும் விகுதிகள் புணர்வதினுலும்,

(2) வினைப்பகுதியோடே ஆகாரவிகுதியும் விட்டால் விடில் என்னும் துணைவினைகளும் புணர்வதினாலும் வரும்.

(உ-ம்.) உண்+ஆ+விட்டால், விடில் = உண்ணவிட்டால், உண்ணவிடில்.

138. குறிப்பு வினையெச்சம் என்பதெது ?

பண்படியாய்த் தோன்றி ஈற்றில் அகரமுடையதாய் வினையைக் கொண்டு முடிவது குறிப்பு வினையெசசமாம்.

(உ-ம்.) மெல்ல நடந்தான், பையச்சென்றான்.

139. எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம் எவ்வாறு வரும் ?

(1) அல், இல் என்னும் பண்படிகள் றி, விகுதி புணர்ந்தும்,

(உ-ம்.) அல்+றி=அன்றி } வந்தான்.
இல+றி=இன்றி }

(2) அல், இல் என்பவையோடு ஆகாரச்சாரியையும் மல், மே, து என்னும் விகுதிகளும் புணர்வதினாலும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம வரும்.

(உ-ம்.) அல்+ஆ+மல்=அல்லாமல்
இல்+ஆ+மல்=இல்லாமல்

அல்லாமே, இல்லாமே, அல்லாது, இல்லாது.

## 57. அப்பியாசம்.

1. செல், கொள், காண், விடு—இவைகளினின்று பிறந்த உடன்பாட்டு வினையெச்சங்களையும் எதிர்மறை வினையெச்சங்களையு மெழுதுக.

2. அடியில் வரும் வாக்கியங்களில் வினையெச்சங்களை யெடு

யெனவும் இன்னதைக் கொண்டு முடிந்தது வெனவுங் கூறுக:—

(1) "நுண்ணிய கருமமு மெண்ணித்துணி"
(2) "ஈதற்குச் செய்க பொருளை"
(3) "உண்ணுதுவைக்கும் பெரும்பொருள்வைப்பின்று"
(4) "சிலுவை தெரிசனஞ்செய்தால் கலிதீரும்"
(5) "........மறவாமே நோற்பதொன்றுண்டு"
(6) உன்றனையல்லா தொருவர் துணையில்லை.
(7) "பையச்சென்றால் வையந்தாங்கும்"
(8) பாலுண்ணப் பசிதீரும்.
(9) "வாடிவாடி வாடிவாடி மாண்டுபோனமானிடர்"
(10) நானே வலியப்போய்க் கண்டேன்.
(11) அவன் கொடாவிடில் நான் கொடுக்கிறேன்.
(12) உன்னைக் காண்புான் வருகின்றேன்.

---

140. தெரிநிலைப் பெயரெச்சம் என்பதெது ?
செயலையுங் காலத்தையுங்காட்டிச் செய்பவனைக காட்டாமல் பெயரைக் கொண்டு முடியும் வினையே தெரிநிலைப் பெயரெச்சமாம்.

(உ-ம்.) வந்த, வருகிற, வரும்.

141. இறந்தகாலப் பெயரெச்சம் எவ்வாறு வரும் ?
வினைப்பகுதியோடே இறந்தகால இடைநிலையும் அகரவிகுதியும் புணர்வதினாலும்,

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | செய் | +த் | +அ=செய்த | மனிதன், |
| | காண் | +ட் | +அ=கண்ட | |
| | செல் | +ற் | +அ=சென்ற | |
| | பொன்று | +இன் | +அ=பொன்றின. | |

(உ-ம்.) சொல் +இன்+அ=சொல்லிய } காரியம்.
நடத்து +இன்+அ=நடத்திய

*Note.* இறந்தகாலப் பெயரெச்சத்திற்கு உதாரண வாய்பாடு செய்து.

142. நிகழ்காலப் பெயரெச்சம் எவ்வாறு வரும் ?

வினைப்பகுதியோடே நிகழ்கால இடைநிலையும் அகரவிகுதியும் புணர்வதினால் வரும்.

(உ-ம்.) ஓடு +கிறு +அ=ஓடுகிற
செல்+கின்ற+அ=செல்கின்ற } மனிதன்.
நட +ஆநின்று+அ=நடவாநின்ற

*Note.* நிகழ்காலப் பெயரெச்சத்திற்கு உதாரண வாய்பாடு செய்கிற.

143. எதிர்காலப்பெயரெச்சம் எவ்வாறு வரும் ?

எதிர்காலத்து அஃறிணைப் படர்க்கை வினைமுற்றே எதிர்காலப்பெயரெச்சமாகவும் வழங்கும்.

(உ - ம்) நடக்கும்
செய்யும் } மனிதன்.

144. எதிர்மறைப்பெயரெச்சம் எவ்வாறு வரும் ?

வினைப்பகுதியோடே ஆத, ஆ என்பவை புணர எதிர்மறைப் பெயரெசசமாம்.

(உ - ம்) படி+ஆத=படியாத } மனிதன்.
படி+ஆ =படியா

145. குறிப்புப் பெயரெச்சம் என்பதெது ?

பண்படிகளோடு அ, இய என்னும் விகுதிகள் புணர்ந்து வருவது குறிப்புப்பெயரெசசமாம்.

(உ - ம்) உள்+அ =உள்ள, வல்ல } ஆள்.
வல்+இய=வலிய, கரிய

146. எதிர்மறைக் குறிப்புப்பெயரெச்சம் என்பதெது?

இல், அல் என்னும் பண்படிகள் ஆத, ஆ என்னும் விகுதிகளோடு புணர்ந்து வருவது எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சமாம்.

(உ - ம்) இல்+ஆத=இல்லாத } மனிதன்.
இல்+ஆ =இல்லா
அல்லாத, அல்லா

58. அப்பியாசம்.

1. ஆகு, தா, சுடு, வே—இப்பகுதிகளினின்றுபிறந்த உடன்பாட்டுப் பெயரெச்சங்களையும், எதிர்மறைப் பெயரெச்சங்களையும் எழுதுக.

2. தேறு, ஓடு, ஒடுங்கு, சா — இவைகளினின் றுண்டான பிறவினை எதிர்மறைப் பெயரெச்சங்களை எழுதுக.

3. அடியில் வருவனவற்றிலுள்ள பெயரெச்சங்களை எடுத்துக் காட்டி, அவை யின்னின்ன வகையெனவும் எவைகளைக்கொண்டு முடிந்தனவெனவுங்கூறுக.

a. நெல்லுக் கிறைத்த நீர்.

b. உப்பில்லாப்பண்டம்.

c. பூநாறுஞ் செய்யவாய் மக்கள்.

d. ஆங்காரியந்தடுத்த அங்கனே.

d. வருத்தமுறப் பெற்றறியா வந்திபரிவாய்மகவைப் பெறுந்துயரம் நொந்தறிகுவாளோ நுவல்.

e. ஆகாத வார்த்தை சொன்னீர்.

f. குலைக்கிற நாய் கடியாது.

g. நல்லமனிதன் சிறியபாவமுஞ் செய்யான்.

4. கற்க, நடப்ப, தின்னும் இவை எச்சமாகவும் முற்றாகவும் வரச் சிறுவாக்கியங்க ளெழுதுக.

பெயரெச்சங்களோடு ஐம்பாலுக்குமுரிய விகுதிகள் புணர்ந்து செய்பவனைக் காட்டுவது வினையாலணையும் பெயர் என்னப்படும்.

148. இறந்தகால வினையாலணையும் பெயர் எவ்வாறு வரும்?

இறந்தகாலப் பெயரெச்சத்தோடு ஐம்பால் விகுதிகளும் புணாவதினாலாம்.

(உ-ம்.) படித்த+அன்=படித்தவன்; படித்தவள் படித்தவர்கள், படித்தது, படித்தவை.

149. நிகழ்கால வினையாலணையும் பெயர் எவ்வாறு வரும்?

நிகழ்காலப் பெயரெச்சத்தோடு ஐம்பால் விகுதிகளும் புணர்வதினாலாம.

(உ-ம்.) படிக்கிற+அன்=படிக்கிறவன்; படிக்கிறவள்; படிக்கிறவர்; படிக்கிறது, படிக்கிறவை.

150. எதிர்கால வினையாலணையும் பெயர் எவ்வாறு வரும்?

(1) வினைப்பகுதியோடே எதிர்கால இடைநிலையும் அகரவிகுதியும், ஐம்பால் விகுதிகளும் புணர்வதினாலும்,

(உ-ம்.) செய்+ப்+அ+அன்=செய்பவன். செய்பவள், செய்பவர், செய்வது, செய்பவை.

(2) வினைப்பகுதியோடே ப்ப என்னும் இடைநிலையும் ஐம்பால் விகுதிகளும் புணர்வதினாலும் வரும்.

(உ-ம்.) படி+ப்ப+அன்=படிப்பவன், படிப்பவள், படிப்பவர், படிப்பது, படிப்பவை.

### 59. அப்பியாசம்.

1. பய, அடக்கு, நொ—இவைகளினின்று பிறந்த முக்காலத்து ஐம்பால் வினையாலணையும் பெயர்களையு மெழுதுக.

2. ஓடு, செல்.— இவைகளிலிருந்து பிறந்த இறந்தகால எதிர்மறை வினையாலணையும் ஆண்பாற்பெயர்களை யெழுதுக.
3. போட்டவள், இருப்பது, செய்வன, நடவாதிருந்தவன், பழிப்பன, ஓடினவர்கள், கொல்கிறவன், உண்ணு திருப்பவன்—இவை இன்னவகை வினையாலணை யும் பெயர்களென்று கூறுக.

151. தொழிற்பெயர் எவ்வாறு வரும்?

வினைப்பகுதிகளோடு தொழிற்பெயர் விகுதிகள் புணர்ந்து தொழிற்பெயர்களாகும்.

(உ-ம்.) 37-ம் சூத்திரம் (c) என்ற பிரிவிற்காண்க.

1. இறந்தகாலத் தொழிற்பெயர். இறந்தகாலப் பெயரொச் சத்தோடு மை, து என்னும் விகுதிகள் புணர்வதினால் வரும்.

(உ-ம்.) சென்ற+மை, து=சென்றமை, சென்றது.

2. நிகழ்காலப்பெயரொச்சத்தோடு மை, து விகுதிகள் புணர் வதினாலே நிகழ்காலத் தொழிற்பெயர் வரும்.

(உ-ம்.) தருகின்ற+மை, து=தருகின்றமை, தருகின்றது.

3. வினைப்பகுதியோடு எதிர்கால இடைநிலையும் அகரவிகுதி யும் அதன்மேல் மை, து விகுதிகளும் புணர்வதினா லே எதிர்காலத் தொழிற்பெயர் வரும்.

(உ-ம்) செய்+வ்+அ+மை, து=செய்வமை, செய்வது.

152. முதனிலைத் தொழிற்பெயர் என்பதெது?

வினைப்பகுதியே தொழிலுக்குப்பெயராய் வழங் குவதாம்.

(உ-ம்.) தொடர், பகை.

153 முதனிலைதிரிந்த தொழிற்பெயர் என்பதெது?

வினைப்பகுதி விகாரப்பட்டுத் தொழிலின் பெய ரை உணர்த்துவதாம்

(உ-ம்.) கூறு = கூற்று.
கெடு = கேடு.

154. முதனிலையில்லாத் தொழிற்பெயர்களெவை ?

யாதொரு வினைப்பகுதியினின்றும் பிறவாமல் பகாப்பதங்களாயிருந்து தொழிலை புணர்த்துவனவாம்.

(உ-ம்.) பசி, பட்டினி, சண்டை, சூது.

155. எதிர்மறைத் தொழிற்பெயர் எவ்வாறு வரும் ?

வினைப்பகுதியோடே ஆமை என்பதைச சோபப திறலேயாம்.

(உ-ம்.) கொல்+ஆமை=கொல்லாமை. செய்யாமை.

## 60. அப்பியாசம்.

(1) கொடு, சா, போ, எழுது—இவற்றினின்று பிறந்த முக்காலத்துக்குமுரிய தொழிற்பெயர்களை யெழுதுக.

(2) தின், விள், அறு, பகு—இவற்றினின்றுண்டான முக்காலத்து எதிர்மறைத் தொழிற்பெயர்களையுமெழுதுக.

(3) அடியில் வருவனவற்றில் உள்ள தொழிற்பெயர்களை யெடுத்துக்காட்டி ஒவ்வொன்றும் இன்னவிதமென வுங் கூறுக.

a. "தோராமற்கற்றது கல்வியன்று"
b. "சீருடையாண்மை செய்கையினறிப"
c. "மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை"
d. தம்மை அடைந்தவரைக்கைவிடுவது நன்றோ ?
e. "பழிக்கஞ்சாத்தாரத்தினன்று தனி"
f. தாகங்கொண்ட காகம்.
g. பொய்பேசுவதிலும் இறப்பது நன்று.
h. படித்ததை மறக்கிறது சரியா ?
i. "யார்மாட்டும் பொல்லாங்குரையாமை நன்கு"

தெரிநிலைவினைகளுக்கு இலக்கணங்கூறச் சுலபமானவகை.

| | | |
|---|---|---|
| முடிபு. | வினையாலணையும்பெயர் அல்லது தொழிற் பெயராயின் பெயருக் குரிய இலக்கணமுங்கூறுக. | |
| | பெயரெச்சமாயின் இன்ன பெயரைக் கொண்டு முடிந்தது என்க. | |
| | வினையெச்சமாயின் இன்ன வினையைக் கொண்டு முடிந்தது என்க. | |
| | வினைமுற்றாயின் இன்ன எழுவாய்க்குப் பயனிலையென்க. | |
| நிலை. | தொகைநிலையோ தொகாநிலையோ | |
| வினை. | வினைமுற்றோ வினையெச்சமோ, பெயர் எச்சமோ, வினையாலணையும் பெயரோ, தொழிற்பெயரோ | |
| இடம். | தன்மையோ முன்னிலையோ படர்க்கையோ. | |
| பால். | ஐந்துபால்களில் எது ? | |
| திணை. | உயர்திணையோ அஃறிணையோ. | |
| காலம். | இறப்போ நிகழ்வோ எதிர்வோ. | |
| வகை. | விதிவினையோ மறைவினையோ. | |
| | தன்வினையோ பிறவினையோ. | |
| | செய்வினையோ செயப்பாட்டுவினையோ. | |
| | செயப்படுபொருள் [illegible] | |

பழையவகைப்படி இலக்கணங்கூறுவது சிறுவகுப்பினருக்குக் கஷ்டமாயிருப்பதால், இப்படிப்பட்டி சய்யலாச்சுது. மேற்படிபட்டியின் தலைப்புகளை மனதில்வைத்துக்கொண்டு அதற்கேற்கவிடைகூறிவிடுக.

## குறிப்புவினைகளைக் இலக்கணங்கூறும் வகை.

| | | |
|---|---|---|
| முடிபு. | வினையாலணையும்பெயர் தொழிற் பெயராயின் பெயருக் குரிய இலக்கணமுங் கூறுக. | |
| | பெயரெச்சமாயின் இன்னபெய ரைக்கொண்டு முடிந்தது வென்க. | |
| | வினையெச்சமாயின் இன்ன வினை யைக்கொண்டு முடிந்தது வென்க. | |
| | வினைமுற்றாயின் இன்ன எழு வாய்க்குப் பயனிலை என்க. | |
| நிலை. | தொகைநிலையோ தொகாநிலையோ | |
| வினை. | வினைமுற்றோ, வினையெச்சமோ, பெயரெச்சமோ, வினையாலணை யும் பெயரோ, தொழிற் பெயரோ. | |
| இடம். | மூவிடங்களில் எது ? | |
| பால். | ஐந்து பால்களில் எது ? | |
| திணை. | உயர்திணையோ அஃறிணையோ. | |
| வகை. | விதிவினையோ மறைவினையோ. | |
| | செயப்படுபொருள் குன்றிய வினையோ குன்றாததோ | |
| | பொருள்முதலிய ஆறனுள் எதின் காரணமாய்ப் பிறந்தது ? | |

### 61. அப்பியாசம்.

(1) அடியிற் குறிப்பிட்டவைகளுக் கிலக்கணங்கூறுக.

a. "தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்று."

b. "ஈரமுடைமை ஈகையினறிப."

c. "அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு."

d "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்."

e. "எப்பொழுதும எண்ணப்படுவது வீடு."

f "மொழிவதறமொழி"

g. "சோம்பித் திரியேல்."

h. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு.

i. "உற்ற விடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ."

(2) 48-ம் அப்பியாசத்தில் வரும் குறிப்புவினைகளுக் கிலக்கணங்கூறுக.

---

## 3. இடையியல்.

156. இடைச்சொற்களெவை ?

a. வேற்றுமையுருபுகள்.

b. விகுதிகள்.

c. இடைநிலைகள்.

d. சாரியைகள்.

e. உவமைச்சொற்கள்.

f. பற்பலபொருளை யுணர்த்துஞ்சொற்கள்.

g. இசைநிறைகள்.

h. அசைநிலைகள்—ஆகிய இவைகளே.

இவைகளில் a. b. c. d. ஆகிய நான்கையும் முன்னேடுகளில் கூறினோம்.

போல (உ-ம்.) புலிபோல வந்தான்.
ஒப்ப ,, இதற்கொப்ப அதையுஞ்செய்.
நேர ,, "இன்னுயிர்க்குநேரோயிளமுறுவல்"
நிகர ,, பவளத்துக்குநிகரானவாய்.
மான ,, என்சொன்மானநட.
அனைய ,, "மின்னனையதோளான்."

### 62. அப்பியாசம்.

மேற்கூறிய உவமைச்சொற்கள் வருவதற்கு வேறு உதாரணங்கள் எழுதுக.

---

158. பற்பல பொருளையுணர்த்திய இடைச்சொற்களெவை ?
ஏ, ஓ, ஆ, உம், என என்று, என்பவன், ஆனவன், முன், பின், கீழ், மேல், என்ற, எனு, அந்தோ, ஐயோ, மற்று, மன், கோல், ஆந்த என்பவையாம்.

159. ஏகாரம் என்னென்ன பொருளைத்தரும் ?

1. தேற்றம். ‖ வற்புறுத்தல் } - வணக்கம் கடவுளுக்கே உரியது.

2. எண் - மகனே மகளே வாருங்கள் (இருவரும்)

3. வினா - அவனே தந்தான் (அவனா ?)

4. பிரித்தல். ‖ பலதிலிருந்து ஒன்றைப் பிரித்தல். } - இவர்களில் நானேவளர்ந்தவன்.

5. ஈற்றசை. ‖ அர்த்தமின்றி அசை } - தந்தனனே.

6. இசைநிறை.
||
அர்த்தமின்றி ஓசை
நிறைக்கமட்டும் வந்தது. } - ஏயே மகனே !

## 63. அப்பியாசம்.

(a) பின் வருபவைகளில் ஏகாரம் என்னென்ன பொருளில் வருகிறது ?

1. "துணையே ஆதாரம் நீதானையா"
2. "தீயாரைக்காண்பதுவுந்தீதே"
3. சாந்தனையுந்தீயனவேசெய்திடினும்"
4. வானமே பூமியே காற்றே கடலே கேளுங்களேன்.
5. "கல்வியழகே யழகு"
6. இம்மரத்தை நீயேவெட்டினாய்.
7. "போட்டேனேகுண்டு"
8. ஆயுளேபெரிய ஆசீர்வாதம்.

(b) ஏகாரம் தேற்றம், பிரித்தல், எண்பொருள்களில் வர உதாரணங்கள் தருக.

---

160. ஓகாரம் என்னென்ன பொருளைத்தரும் ?

1. பிரித்தல்=அவனோசெய்தான் (இவன் இல்லையோ)
2. ஒழியிசை.
||
ஒன்றை மறுத்து வேறு
ஒன்றைக்குறிப்பிடல் } = விளையாடவோவந்தீர்கள் (விளையாடவல்ல படிக்கவந்தீர்கள்)
3. எதிர்மறை = கடவுள் பொய்சொல்லுவாரோ (சொல்லார்)
4. வினா = அரசனோ ?
5. ஐயம்
|| } =புலியோகரடியோகொன்றிருக்கிறது

6. சிறப்பு { உயர்வு=ஒஒ இராஜா வருகிறார்.
இழிவு=ஒஒ கோமாளி வருகிறான்.

7. அசைநிலை=ஒஒ உண்மை.

### 64. அப்பியாசம்.

பின் வருவனவற்றில் ஒகாரங்கட்குப் பொருள்கூறுக.

1. "இதற்கோ இந்த யோசனைசாமி"
2. "வானகந்தானோ அல்லதிது வையகந்தானோ"
3. மரத்தைநட்டவன் நீரிறையானோ ?
4. யாரோ வந்திருக்கிறார்கள்.
5. "ஒஒ உன்னதம்"
6. "புல்லுக்கு நீரிறைப்பாரோ ?
7. பொய்சொல்லியோ பிழைக்கவேணும்.

---

161. ஆகாரம் என்னென்ன பொருளைத்தரும் ?

1. எதிர்மறை=பருவத்தாலன்றிப்பழா(பழுக்காது)
2. எசசம் =பெய்யாக்கொடுக்கும் (பெய்து)
3. வினா =வருவாயா ?
4. வியப்பு ="ஆஆ இதென்ன அதிசயம் பார்"

### 65. அப்பியாசம்.

ஆகாரம் மேற்கூறிய 4 பொருளையுந்தர வேறு உதாரணங்கள் தருக.

---

162. உம் என்பது என்னென்ன பொருளைத்தரும் ?

1. எதிர்மறை=கும்பிட்டாலுங் கொடான். (கும்பிடாவிட்டாலும்)
2. எச்சம்=காலும்ஒடிந்தது. (அது மாத்திரமல்ல கையும்)
3. முற்று=இவனுக்கு இரண்டுகண்ணுங் குருடு. (இருப்பதெல்லாமிரண்டே)
4. எண்="புலையுங் கொலையுங் களவுந்தவிர்

5. சிறப்பு { உயர்வு = யானைக்கும் அடிபிசகும். (பெரிதாயிருந்தும்) இழிவு=நாயுந்தின்னுதசோறு. (கக்கினதைத்தின்கிற) }

6. ஐயம்=இன்றாவது நாளையாவது வருவான்.

7. ஆக்கம் = பாலே மருந்துமாயிற்று. (உணவாயிருந்தும்)

8. தெளிவு='அரியுமல்ல அயனுமல்ல அரனுமல்ல'

66. அப்பியாசம்.

அடியில் வருவனவற்றிலுள்ள உம்மைகட்குப் பொருள் கூறுக.

1. "பேதைக்குரைத்தாலுந் தோன்றாதுணர்வு"
2. ஐந்துவிரலும் ஒன்றுபோலிருக்கிறதா ?
3. அரசனுஞ்சாவான் அடிமையுஞ்சாவான்.
4. "சங்குசுட்டாலும் வெண்மைதரும்"
5. "நாட்டையுமிழந்தோம்"
6. அளவுக்குமிஞ்சினால் அமுதமும்நஞ்சாம்.
7. இடமும் பொருளும் ஏவலுமுண்டு.
8. "வெயிலாகிலும் நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்தாது"
9. மகனே பகைவனுமானான்.
10. எல்லாரும் வந்திருக்கிறார்கள்.

---

163. என என்று என்பவை எத்தனை பொருளைத்தரும் ?

1. வினை="போவெனப்போகிறான்" (என=என்றுசொல்ல)
2. பெயர் = உதயபுரியென வோரூரிருக்கிறது (என=என்ற பேரையுடைய)
3. குறிப்பு= { ஒலிக்குறிப்பு = (பணஞ்சலீரென விழுந்தது) விரைவுக்குறிப்பு = பொள்ளென

4. பண்பு=வெள்ளெனவெளுத்தது. (என=என்னுந் தன்மையாக)

5. எண்=வெயிலென மழையெனப் பனியெனப் பாராமல் (இம்மூன்றையும்)

67. அப்பியாசம்.

அடியில் வருவனவற்றில் என என்று என்னென்ன பொருளில் வருகின்றன.

1. சொடக்கென முறிந்தது.
2. சட்டென்று வந்துவிட்டான்
3. நெறுநெறெனப் பல்லைக்கடித்தான்.
4. தின்றாயோவென ஆமென்றான்.
5. சள்சள்என்று நாய்குலைக்கிறது.
6. "இம்மூவர் செல்வரெனப்படுவார்"
7. சரேலென வந்தான்.
8. மழை சோவெனப்பெய்கிறது.
9. இனமெனச்சனமென வெண்ணிநட.
10. வாவென்றும் இருவென்றும் சொன்னானில்லை.

164. வெவ்வேறு பொருள்தரும் இடைச்சொற்களெவை ?

a. ஒலிக்குறிப்புப்பொருள்:—கூகூ, கடகட, களகள, திடுதிடு, நெறுநெறு, பொத்:—இவைபோல்வன.

b. விரைவுக் குறிப்புப் பொருள்:— சரேலென, பொருக்கென, சட்டென்று.

c. அச்சுக்குறிப்புப் பொருள்:—திடுக்கென, பசக்கென, துண்ணென.

d. இரக்கப்பொருள்:—அந்தோ, ஐயோ, ஓஓ.

e. இகழ்ச்சிப்பொருள்:—சீ, சீச்சீ, சை.

### இடைச்சொற்களுக்கு இலக்கணங்கூறும் வகை.

| வகை. | பொருள். | அடுத்துவந்தசொல். |
|---|---|---|
| 156 - ம் சூத்திரத்திற் காட்டிய எட்டு வகை இடைச் சொற்களில் இன்னது. | பொருளுண் டானாற்கூறுக | இன்னபெயரை அல்லது இன்னவினையை அடுத்து வந்ததுவென்க. |
| | | |

68. அப்பியாசம்.

அடியில்வரு மிடைச்சொற்களுக் கிலக்கணங்கூறுக.

a. சொன்னாலும் தெரியலையே—உம். ஏ.

b. வெட்டெனவெட்டினான்—என. இன்.

c. நடவாக்குதிரை—ஆ.

d. மரமோ மனிதனோ—ஓ.

e. இனி ஒருபோதும் திருடாதே—இனி.

2. பால், கண், அது, மை, ஆ, மான்—இவை பெயர்ச்சொல் லாகவும் இடைச்சொல்லாகவும் வர உதாரணங்கள் எழுதுக.

3. வை, பாடு, ஓடு:—இவை வினைச்சொல்லாகவும் இடைச் சொல்லாகவும் வர உதாரணந்தருக.

## 4. உரியியல்.

165. உரிச்சொற்களெவை ?

பெயர் வினைகளைத்தழுவி அவற்றின் குணவிசேஷங்களைக்காட்டுந் திரிசொற்களாய்ச் செய்யுளில் வழங்குவன உரிச்சொற்களாம். அவை பெயருரி வினையுரியென இருவகைப்படும்.

1. சால, உறு, தவ, நனி, கழி, கூர், அற என்பன மிகுதி என்னும் ஒருபொருள் குறித்த உரிச்சொற்களாம்.
2. கடி என்பது, காவல், வாசனை, அச்சம் ஆகிய பலபொருள் குறித்த உரிச்சொல்லாம்.

இவை பெயருரியாய் வருதற்குதாரணங்கள்:-

1. சாலப்பெரியோரோ
2. உறுசெயல்
3. நனிபேதை
4. அறவடக்குமுனை
5. "கல்வியாறுயகழிநுட்பம்"
6. வெய்மைகூர்நரகு

வினையுரியாய் வருவதற்கு உதாரணங்கள்:—

1. சாலப்பேசினான்
2. நனிதின்றான்
3. தவஉயர்ந்தது
4. அறத்தேர்ந்தஞானிகள்.

Note. சேதன அசேதனப் பண்புச்சொற்கள் "தன்னையுணர்த்தும்போது பண்புப் பெயரென்றும், பண்புருபுகள், தொக்கு நின்று பொருளையுணர்த்தும்போது பண்புத்தொகை யென்றும், பண்பை விளக்கும் உருபின்றிப்பொருளையுணர்த்தும்போது உரிச்சொல்" என்றும் பெயர் பெற்று வழங்கும்.

தமிழ்ப்பாஷையில் உரிச்சொற்கள் மிகுதியில்லை.

### 69. அப்பியாசம்.

பின் வருபவைகளில் உரிச்சொற்களெவை ?

1. "தடங்கைதான்பேர்த்து விடுத்தலரிதோ."

3. "மழகளிறு இன்றகவளம்."
4. "உறழ்வெய்யோர்க் குறுசெருவெளிது."
5. "கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க்குற்றதுணை."
6. "மீச்செலவு காணினனிதாழ்ப."
7. "யானையுடைய படை காண்டன்மிகவினிதே."
8. "எனைமாண்பு தானினிது நன்கு."

---

☞ உரிச்சொற்களுக் கிலக்கணங் கூறுகையில் அவை இன்னபண்பை விளக்கி இன்ன பெயர் அல்லது வினையைக்கொண்டு முடிந்தன வென்க.

---

## 5. பொதுவியல்.

(முன்னர் கூறியவியல்களிற் சொல்லாதுவிட்டனவும், அவ்வியல்கட்குப் பொதுவாயுள்ளனவுமான சூத்திரங்கள்.)

166. இனவெழுத்துகள் என்பன எவை?

உயிரெழுத்துகளில்:—அ ஆ; இ ஈ; உ ஊ; எ ஏ; ஐ இ; ஒ ஓ; ஔ உ; (இவ்விரண்டாய் வந்தவற்றுள் ஒன்று மற்றதற்கு இனவெழுத்தாம்.)

மெய்யெழுத்துகளில்:—க் ங்; ச் ஞ்; ட் ண்; த் ந்; ப் ம்; ற் ன்; (இவற்றிலும் அப்படியே) ய் ர் ல் வ் ழ் ள்—இவை ஓரினமாம்.

167. இலக்கணையாவ தென்ன?

மனிதருக்கேயுரிய செய்கைகளை அஃறிணை வஸ்துக்களும் செய்வனவாகக் கூறுதலாம்.

(உ-ம்.)

கேட்டல் = மரங்களே மலைகளே செவிகொடுங்கள்.
பேசல் = "நிலத்தியல்பு வானமுளைத்து விடும்"

நடத்தல் = இவ்வழி தில்லைக்குப் போகும்.
செய்தல் = "தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

## 70. அப்பியாசம்.

அடியில் வருவனவற்றில் இலக்கணையாய்க் கூறப்பட்டுள்ளதை யெடுத்துக்காட்டி, இன்ன செய்கையென் றுந் தெரிவிக்க.

1. இவ்வரசன் கட்டளை போகாத இடமில்லை.
2. முகத்தில் அழுக்கிருப்பதைக் கண்ணாடி சொல்லும்.
3. இந்தச்சேலையில் சிவப்பு கறுப்பைப் பழிக்கிறது.
4. பணம் பழிக்கஞ்சாது.
5. உழைப்பின்கையில் ஐசுவரியமிருக்கிறது.
6. கள்ளிவயிற்றி னகில்பிறக்கும்.
7. அவன் இரத்தம் உங்களைக் கணக்குக்கேட்கும்.

168. உருவக மாவதென்ன ?

ஒன்றின் குணவிசேஷங்களை அதன் உடைமையின் மேலேற்றிக் கூறுதலாம்.

(உ-ம்) செங்கோல்—இதில் அரசனுடைய குணம் அவன் கையிலுள்ள கோலின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

## 71. அப்பியாசம்.

1. உருவக மொழிகளுக்கு வேறு உதாரணங்கள் தருக.
2. அடியில் வருபவைகளில் உருவகங்களையெடுத்துக் காட்டி விளக்குக:—

a. வீரக்கழலை யணிந்தவன்.
b. நின் பகைவர்க்கஞ்சாத வேலினையுங் கண்டேன்.
c. குடியோம்பியாளுங் கொற்றக் குடையாய்.
d. எதிரியின் கோபங்கொண்ட கத்திக் கிரையானார்கள்.

169. இரட்டை மொழிக ளவை ?

பொருளிலாச்சொற்கள் அடுக்கிவந்து யாதொருபொருளைத் தெரிவித்தால் இரட்டைமொழி யென்னப்படும்.

(உ - ம்) சுறுசுறுப்பு; மொறு மொறுப்பு.

170. அடுக்குத்தொடர் ஆவதென்ன ?

அர்த்தமுள்ள ஒருசொல் விரைவு, சினம், மகிழ்ச்சி, பயம், மிகுதி, கெடுதியாகியகாரணங்களால் அடுக்கிவரின் அடுக்குத்தொடர் என்னப்படும்.

(உ-ம்) விரைவு = நடநட.
சினம் = அடிஅடி.
மகிழ்ச்சி = அண்ணுவாரும் அண்ணுவாரும்.
பயம் = புலிபுலி.
மிகுதி = தின்றுதின்று ருசிகண்டான்.
கெடுதி = விழுந்தாய் விழுந்தாய்.

72· அப்பியாசம்.

1. இரட்டைமொழிகளுக்கு ஆறு உதாரணந்தருக.
2. போடப்போடத்தின்றான்; தீதீ; கெட்டான்கெட்டான்; வரவர; படிபடி; இருஇரு; ஓடுஓடு; பட்டுப்பட்டுச் சுரணையில்லை, வெள்ளம்வருகிறது வெள்ளம்வருகிறது; கொல்லுகொல்லு; சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் — இவை என்னென்ன பொருளில் அடுக்கிவந்தன ?

---

171. அடைமொழி யாவதென்ன ?

பொருள்முதலிய ஆறு பெயர்களும் வருமொழியோடுபொருந்திவரின் அடைமொழி யென்

(உ - ம்)

| | |
|---|---|
| பொருள், பாய்மரம். | சினை, பூமரம். |
| இடம், மலையரசன். | குணம், பச்சரிசி. |
| காலம், தைப்பொங்கல். | தொழில், விளைநிலம். |

### 73. அப்பியாசம்.

பொருள் முதலிய ஆறும் அடைமொழிகளாய் வருவதற்கு வகைக்கு மூன்று உதாரணந்தருக.

---

172. இடைப்பிறவரலாவ தென்ன ?

வேற்றுமையுருபுகளோடும், வினைமுற்றோடும், பெயரெச்ச வினையெச்சங்களோடும் சம்பந்தப்படாத வேறுசொற்கள் அவைகளை முடிக்குஞ் சொற்களோடு சம்பந்தப்பட்டு இடையில் வரின் இடைப்பிறவர லெனப்படும்.

(உ - ம்) 1. கத்தியால் (மனதார) வெட்டினன்.
2. வந்தான் (மலைக்குப்) போனமனிதன்.
3. கேட்ட (இங்கிலீஷ்) கேள்விகள்.
4. உட்கார்ந்து (சோற்றையெல்லாம்) தின்றான்.

### 74. அப்பியாசம்.

பின் வருவனவற்றில் இடைப்பிறவரல்களை யெடுத்துக் காட்டி அவை எவ்வெவற்றிற்கிடையில் வந்தனவென்றுங் கூறுக.

1. "விற்பிடித்து நீர்கிழிய வெய்தவடு"
2. "கற்றோற்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு"
3. "உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்து"
4. இப்படிச்செய்ய ஒருவராலுங்கூடாது.
5. நான் வளர்த்த வெள்ளைநாய்.
6. மகனே விரைவாய் நடந்துவா.

173. மரபு ஆவதென்ன ?

ஒரு பொருளுக்குப் பூர்வந்தொடுத்துப் பெயராய் வழங்குஞ்சொல் மரபாம்.

(உ - ம்) அணிற்பிள்ளை. பசுவின்கன்று. நாய்க்குட்டி.

174. வழு ஆவதென்ன ? அவை எத்தனை ?

திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு ஆகிய ஏழும் பிசகிவருமாயின் வழுவென்னப்படும்.

(உ - ம்) 1. அவன் வந்தது — திணைவழு.

2. அவள் வந்தான் — பால்வழு.

3. நான் வந்தான் — இடவழு.

4 நேற்று வருவான்—காலவழு.

5. (தன்னை ஒருநாளுமறியாத குருடனைப்பார்த்து) நான்கறுப்பா சிவப்பா என்பது. } வினாவழு.

6. சாப்பிட்டாயா என்றதற்கு என் பேர் சுப்பன் என்பது. } விடைவழு.

7. பசுவின்கன்று என்பதற்குப் பசுவின் குமாரன் என்பது. } மரபுவழு.

புறனடை. 1. பாலுந்திணையும் மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு இவ்வைந்தினாலும் வழுவிவரினும் பிசகல்ல. இது வழுவமைதி யென்னப்படும்.

உதாரணங்கள்.

1. (மகனை) அம்மாவா என்பது.—
(மகிழ்ச்சியால் பால் வழுவமைதி)

2. (ஒருவனை) அவர் வந்தார் என்பது.—
(உயர்வால் பால் வழுவமைதி)

3. (ஒருவனை) உலகுக்கெல்லாந்தாயே என்பது.—

4. (ஒருவனை) கசையடிபெறுவீர்காளையோ என்பது.—
(சினத்தால் பால் வழுவமைதி)

5. (ஒருவனை) இவன் ஒருபெண் என்பது.—
(இழிவால் பால் வழுவமைதி)

1. (பசுவை) என்னம்மை வந்தாள் என்பது.—
(மகிழ்ச்சியால் திணைவழுவமைதி)

2 கிளியாரே வாரும் என்பது.—
(உயர்வால் திணைவழுவமைதி)

3. என்பிள்ளைகளே என்பொருள் என்பது.—
(சிறப்பால் திணைவழுவமைதி)

4. (ஒருவனை) எருமைக்கடாவே என்பது.—
(கோபத்தால் திணைவழுவமைதி)

5. குறிப்பறியமாட்டாதவன் மரம் என்பது.—
(இழிவால் திணைவழுவமைதி)

(2) விரைவு நிச்சயம் இயல்பு ஆகிய காரணங்களால் காலப் பிசகிவரினும் வழுவல்ல. இது காலவழுவமைதியாம்.

(உ - ம்)

1. சாப்பிடுகிறவனை வேறொருவன் இன்னஞ்சாப்பிட வில்லையா என்க அவன் "சாப்பிட்டாயிற்று" என்கிறான்-இதில் விரைவால் எதிர்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.

2. நஞ்சைத்தின்றால் செத்தாய்—இதில் நிச்சயத்தினால்எதிர் காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.

3 நான் முன்னே விளையாடுவது இச்சோலை—இதில் இயல் பால் இறந்தகாலத்துக்கு எதிர்காலம் வந்தது.

## 75. அப்பியாசம்.

௧. பின்வருவனவற்றைத்திருத்தி இன்னவழுவென்றுங் கூ

1. எங்கள் வீட்டுப்பூனை குஞ்சுபோட்டிருக்கிறது.
2. இவன் யாருடைய புத்திரி ?
3. நானும் நீயும் நாளைபோனேம்.
4. எனக்கு ஒரு நாய் இருக்கிறான்.
5. இந்தக் கிளிக்குட்டி யாருடையது ?
6. இந்த ஊரார் கிறிஸ்தவனு ?

b. அடியில் வருவனவற்றில் உள்ள வழுவமைதிகளையெடுத்துக்காட்டி ஒவ்வொன்றும் இன்ன காரணத்தால் வழுவல்லவென்றுங் கூறுக.

1. (மகளை) வாடா வாடா என்துரையே. (என்பது)
2. (ஒருவனை) பொய்க்குத்தாயே. (எ-து)
3. (ஒருவனை) ஐயா வாரும் (எ-து)
4. (ஒருவனை) அடிபடப்போறீர் மாணுக்கரே. (எ-து)
5. (தன்நாயை) தம்பி வந்து விட்டான். (எ-து)
6. பூனையாரே எத்தனை எலிபிடித்தீர். (எ-து)
7. முன் நான் படிக்கிற காலத்தில் சோறுசமைப்பவன் இவன்தான்.
8. சோறு தின்றால் பசி நின்றது.

175. சிலேடை என்பதென்ன ?
சொற்கள் ஈரருத்தப்பட வருவது சிலேடையாம்.

(உ-ம்) a பலகை 1. = அனேக கைகள்.
2. = கற்பலகை.
b. நீர்வாரும். 1. = நீங்கள் வாருங்களென அழைத்தல்.
2. = ஜலத்தை ஊற்றும்.

### 76. அப்பியாசம்.

அடியில் வருவன சிலேடைமொழிகள் தானென்று காட்டுக:—என்தலைவிதிவசம்; அரிசிவசம்பு; சீதாதேவியார்மகள்; சிறுகல்; எழுகை; கருமை; புதுமை.

1. வடபதங்கள் நிஷ், நிர், அநு, துர், அ, அவ, அப முதலியவைசேர்ந்து எதிருருத்தத்தைத்தரும.

(உ - ம்) களங்கம் >< நிஷ்களங்கம்.
மலம் >< நிர்மலம்.
உசிதம் >< அநுசிதம்.
பலம் >< துர்ப்பலம்.
கிரமம் >< அக்கிரமம்.
பக்தி >< அவபக்தி.
கீர்த்தி >< அபகீர்த்தி

2. சிலமொழிகள இயல்பாய் எதிர்மொழிகளா யிருக்கும்.

(உ - ம்) புகழ்ச்சி >< இகழ்ச்சி.
பெருமை >< சிறுமை.
சேய்மை >< அண்மை.

77. அப்பியாசம்.

அடியில் வரும் பதங்களுக் கெதிர்மொழிக ளெவை ?

பிரயோஜனம், நற்காரியம், பறபல, ஆசாரம், அவசியம், உயர்வு, உபசாரம், சிற்றின்பம், ஆதி, மெய், சத்தியம், தூரம், அநுகூலம், பாக்கியம், இம்மை, நித்தியம், உவப்பு, சரீரி, அந்தரங்கம், புராதனம், ஞானம், ஜனனம், மங்கலம், ஏகம், மாணம், ஜெயம்.

---

177. வினு எத்தனை வகைப்படும் ?

அறிவு, அறியாமை, ஐயம், கொள்ளல், கொடை, ஏவல் என அறுவகைப்படும்.

1.ஆசிரியன்மாணக்கனை "அருத்தமென்ன" என்பது. (அறிவினு)
2.மாணக்கன்ஆசிரியனை "அருத்தமென்ன" எ-து. (அறியாவினு)
3.அதுபாம்போ கயிறோ எ-து. (ஐயவினு)
4.பழமுண்டோ செட்டியாரே எ-து. (கொள்ளல்வினு)
5.உனக்கு வஸ்திரம் இல்லையோ எ-து. இல்லாவிடில் தரு

6. தம்பி சாப்பிட்டாயா ? எ-து. இல்லாவிடில் சாப்பிடு என ஏவுவதால் (ஏவல்வினை)

178. சொற்கள் பலபொருட்களையுந்தருமோ ?

*a.* ஒருசொல் பலபொருளையுந்தரும், ஆயினும் இன்னவிடத்தில் இன்னபொருளென்பது, வினை, சம்பந்தம் முதலியவற்றால் தெரியவரும்.

(உ - ம்) மா என்பதற்கு மாமரம், வண்டு, குதிரை யெனப் பலபொருள்களுண்டு ஆயினும்,

1. மாபூத்தது வினையால் மாமரம் எனவும்.
2. மாவீழ்மலர் மலர் என்பதால் வண்டு எ-ம்.
3. காலாள்தேர்கரிமாசம்பந்தத்தால்குதிரைஎ-ம்.தெரிகிறது.

*b.* சில தொடர்மொழிகள் பலபொருளையுந் தரும், ஆயினும் இன்னவிடத்தில் இன்ன பொருள் என்பது சொற்களின் ஈறு முதல் இவைகளை ஊன்றி உச்சரிப்பதாற் றெரிய வரும்.

(உ - ம்) செம்பொன்பதின்றொடி, குறும்பரம்பு.

1. செம்பு + ஒன்பதின்றொடி (= செம்பு ஒன்பது பலம்)
2. செம்பொன் + பதின்றொடி (= பொன் பத்துப்பலம்)

1. குறும் + பரம்பு (= குறுகிய குன்று)
2. குறும்பர் + அம்பு (= குறும்பரது அம்பு)

## 78. அப்பியாசம்.

1. சிலை, பதி, பூ அளி, கோ, மை—இவை பலபொருட்களையுந் தருகின்றனவென ரூபிக்க.
2. அடியில் வரும் தொடர்மொழிகளொவ்வொன்றிலும் அடங்கிய பலபொருட்களையும் பகுத்துக் காட்டுக.

கண்டிறந்தான், மாதங்கம்; கண்டவளை; இரும்படியும், அவனைப்பசியிற்கண்டான்; பாலுண்டார் செத்தார்; போவா

# 3. சொற்றொடரதிகாரம்.

179. சொற்றொடராவ தென்ன ?

பெயர் முதலிய நால்வகைச் சொற்களும் இரண்டு அல்லது அதற்கதிகமாகத் தொடர்ந்து அருத்தப்படவருவது சொற்றொடராம்.

*Note*. அது எத்தனை விதப்படு மென்பதை 51-ம் சூத்திரத்தாலறிக.

180. வாக்கியமாவது என்ன ?

எழுவாய் பயனிலை செயப்படு பொருள் முதலியன உள்ளதாய், யாதொருபொருளை முடிவுற உணர்த்துஞ் சொற்றொடராம்.

புறனடை. சிலவேளை ஒரோசொல் வாக்கியமாகும்.

(உ - ம்) வந்தானா ? வந்தான்.

181. எழுவாய் ஆவதென்ன ?

வாக்கியத்தின் முதற்பொருளாகிய கர்த்தாவாம். அது முதல் வேற்றுமையாகவே வரும்.

(உ - ம்) தச்சன் வீட்டைக்கட்டினான். இதில் எழுவாய்—தச்சன்.

*Note*. எழுவாய் தொக்கு வருதலுமுண்டு.

(உ - ம்) ஒருநாளும் பொய் சொல்லாதே—இதில் நீ என்பது தொகுத்தது

101-ம் சூத்திரத்தையும் இத்துடன் வாசிக்க.

தொக்கு நிற்கும் எழுவாய் இன்னது என்று வாக்கியத்தின் பிரதானமான வினையாலறியலாம்.

எழுவாயின் செயலை முடிவுறக் காட்டும் சொல்லேயாம்.

(உ - ம்) 1. தச்சன் வீட்டைக் கட்டினான்.

2. இவர் மெத்த நல்லவர்—இவைகளில் கட்டினான், நல்லவர் என்பவை பயனிலைகளாம்.

*Note*. 1. பயனிலை தொக்குவருதலுமுண்டு.

(உ - ம்) இவ்வீட்டைக் கட்டினது யார் ? என்பதற்கு தச்சன்—என்று விடைகொடுக்கையில்கட்டினான் என்பது தொகுத்தது.

*Note*. 2. எழுவாய் பயனிலைகள் இரண்டும் ஒருவாக்கியத்தில் தொக்கு வருவதுமுண்டு.

(உ - ம்) நடந்து போகிறவனைப் பார்த்து "தூரமா" என்கையில் நீ என்னும் எழுவாயும் போகிறாய் என்னும் பயனிலையும் தொகுத்தன. விரிந்தால்—நீதூரமா போகிறாய் ? என வரும்.

183. எழுவாய்க்கும் பயனிலைக்கும் சம்பந்தமென்ன ?

எழுவாயும் பயனிலையும் திணை பால் இடங்களில் சற்றும் பிசகாமல் இசைந்தே வரும்.

(உ-ம்.) தச்சன் வீட்டைக் கட்டினான்.

தச்சன்—உயர்திணை, ஆண்பால், படர்க்கை. அப்படியே, கட்டினான் — உயர்திணை, ஆண்பால், படர்க்கை.

புறனடை.

படர்க்கையிடத்து ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் பலவின்பாற் பெயர்களுக்குச் செய்யும் என்னும் வினைமுற்று பயனிலையாய் வருதலு முண்டு.

(உ - ம்) அவன்வரும், அவள்வரும்; அதுவரும்; அவைவரும்.

184. ஒரேவாக்கியத்தில் பல எழுவாய் பயனிலைகளும் வரு

*a.* ஓரே எழுவாய்க்குப் பல பயனிலைகளும் வரும், அப்படி வருகையில் கடைசிப்பயனிலை தவிர மற்றவைகளை வினையெச்சங்களாக்கி விடுக. அவை முற்றெச்ச மென்னப்படும்.

(உ - ம்) துரைவந்தார், விசாரித்தார், போனார் — என்பது துரைவந்து விசாரித்துப்போனார்—எனவரும்.
—வந்து, விசாரித்து—முற்றெச்சங்கள்

*b.* பல எழுவாய்க்கு ஓரே பயனிலையும் வரும். அப்படி வரும்போது பயனிலை பன்மை யாகும்.

(உ - ம்) துரையும் துரைசானியும் பிள்ளைகளும் வந்தார்கள்.

185. செயப்படு பொருளாவது என்ன ?

எழுவாயின் செய்கையால் விளைந்த பயனும். அதுவும் பெயரேயாம். அது 2-ம் வேற்றுமை யாகவேவரும்.

(உ - ம்) தச்சன் வீட்டைக் கட்டினான்.—இதில் செய்பொருள்—வீட்டை.

*Note.* 1. செயப்படு பொருளும் சில விடத்தில் எழுவாயாக வரும்.

(உ - ம்) இவ்வீடு நான் கட்டினது.

*Note.* 2. ஒரே வாக்கியத்தில் இருசெயப்படுபொருள்கள் வருதலுமுண்டு.

(உ-ம்.) பசுவைப் பாலைக்கற.

79. அப்பியாசம்.

1. பின்வரும் வாக்கியங்களில் எழுவாய் பயனிலை செய்பொருள்களெவை ?

a. சாப்பிட்டீரா ?

b. "ஆறுவதுசினம்"

"[illegible]"

d. "விழியிலார்க்கேது விளக்கு"

e. அகத்தினழகு முகத்திற்றெரியும்.

f. இம்மரம் நான் வளர்த்தது.

g. "முடிப்ப முடித்துப்பின் பூசுவபூசி,
உடுப்ப உடுத்துண்ப உண்ணு—இடித்திடித்துக்
கட்டுரைகூறிற் செவிகொளாக் கண்விழியா
நெட்டுயிர்ப்போடுற்ற பிணம்"

h. "பெரியாரோடியாத்த தொடர்விடுதலின்று"

i. ஒருவரும் இங்கே வரக்கூடாது.

(2) ஏரி, ஏறி; மலை, மழை; கரி, கறி; தளை, தலை, தழை;—மேல் குறிப்பிட்ட வார்த்தைகளின் அர்த்தபேதத்தை விளக்கச் சிறுவாக்கியங்களெழுதுக.

3. கவி, ஈ, கல்லு—இவை பெயராகவும் வினையாகவும் வரச் சிறுவாக்கியங்களெழுதுக.

---

186. வசனக்கிரமம் ஆவதென்ன?

ஒரு வாக்கியத்தில் எழுவாயைத்தழுவிய சொற்களையும் எழுவாயையும் முதலிலும், செயப்படுபொருள் முதலியவற்றை இடையிலும், பயனிலைமுதலியவற்றைக் கடையிலும் வைத்துமுடிக்குதலாம்.

Note. உவமான உவமேயங்களுள்ள வாக்கியத்தில் முதலில் உவமானத்தைக் கிரமப்படுத்திப் பின்னர் உவமேயத்தைக்கூறுக.

(உ - ம்)

"சாந்தனையுந்தீயனவே செய்திடினுந்தாமவரை
ஆந்தனையுங்காப்பரறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந்தனையும் குளிர்நிழலைத்தந்து
மறைக்குமாங்கண்டீர் மரம்" — இதை வசனக் கிரமப்

மரம் மாந்தர் குறைக்குந்தனையும் குளிர் நிழலைத்தந்து மறைக்குமாங்கண்டீர், அறிவுடையோர் (ஒருவர்) சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாம் அவரை ஆந்தனையுங் காப்பர்—எனவரும்.

## 80. அப்பியாசம்.

அடியில் வருவனவற்றை வசனக்கிரமமாயெழுதுக:—

1. "நூற்பலகல்"

2. "திருந்துந்தளிர்காட்டித் தென்றல்வரத்தேமா
வருந்துஞ்சுழல்கால் வர"

3. "இன்சொலாலன்றி யிருநீர்வியனுலகம்
வன்சொலாலென்று மகிழாதே - பொன்செ
யதிர்வளையாய்பொங்கா தழற்கதிராற்றண்ணென்
கதிர்வரவாற்பொங்குங் கடல்"

4. "மெய்சென்றுதாக்கும் வியன்கோலடிதன்மேல்
கைசென்றுதாங்குங் கடிது"

முற்றிற்று.

# நானுவிதக் குறிப்புகள்.

## A.

### சில இடைச்சொற்களும், அவற்றின் பற்பல உபயோகங்களும்.

---

### அ.

1. சுட்டு=அவன், அந்நாள்.
2. ஆறனுருபு=தனகைகள்.
3. பெயரொச்சவிகுதி=வந்த, உள்ள.
4. வினையெச்சவிகுதி=படிக்க.
5. வியங்கோள்விகுதி=ஐயாவர.
6. வினைமுற்றுவிகுதி=வந்தன.
7. சாரியை=தனக்கு.

### அல்.

1 தொழிற்பெயர்விகுதி=செயல்.
2. வியங்கோள் ,, =விடல்=விடுக.
3. எதிர்மறை ,, =படியல்=படியாதே.
4. வினைமுற்று ,, =நடப்பல்.
5. சாரியை=தொடையல்.

### அன்.

1. சாரியை=அதன்.
2. ஆண்பால்விகுதி=பொன்னன்.
3 வினைமுற்றுவிகுதி=செய்தனன்.

### அம்.

1. வினைமுற்றுவிகுதி=நடந்தனம்.
2. தொழிற்பெயர்விகுதி=ஆட்டம்.
3. பண்புப்பெயர்விகுதி=நலம்.

## அர்.

1. பெயர்விகுதி=குழையர்.
2. வினைமுற்றுவிகுதி=வந்தனர்.
3. போலி=வண்டு=வண்டர்.

## ஆ.

1. எதிர்மறை வினைமுற்றுவிகுதி=அவைவரா.
2. ,, பெயரெச்சவிகுதி=உண்ணாக்குதிரை.
3. வினையெச்சவிகுதி=செய்யா=செய்து.
4. வினா = வந்தானா.
5. பெயர்= கற்றா.

## ஆன்.

1. மூன்றனுருபு="அறத்தான்வருவது"
2. வினைமுற்றுவிகுதி=வந்தான்.
3. சாரியை=ஒருபான்.
4. பெயர்=ஆன்கன்று.

## இ.

1. பெண்பால்விகுதி=தேவி.
2. கர்த்தாப்பொருள்விகுதி=கொல்லி.
3. கருவிப்பொருள்விகுதி=பாக்குவெட்டி.
4. செயப்படுபொருள்விகுதி=ஊருணி.
5. வினையெச்சவிகுதி=ஓடி
6. வினைமுற்றுவிகுதி=படிக்கின்றி.
7. சுட்டு=இவன், இவ்வீடு.

## இய.

1. வியங்கோள்விகுதி=வாழிய.
2. எதிர்காலவினையெச்சவிகுதி=உண்ணிய

## இல்.

1. ஏழனுருபு=மரத்தில்பட்சி.
2. ஐந்தனுருபு=காக்கையிற்கரிது.
3. எதிர்காலவினையெச்சவிகுதி=விடில்.
4. பெயர்=கோவில்.

## இன்

1. சாரியை=கையினுல்.
2. ஐந்தனுருபு=மலையின்வீழருவி.
3. எதிர்காலவினையெச்சவிகுதி=வரின்.

## உ.

1. இறவினையெச்சவிகுதி=செய்து
2. சாரியை=தின்னு
3. தொழிற்பெயர்விகுதி=வரவு
4. பண்புப்பெயர்விகுதி=மழவு.
5. சுட்டு=உவன்.

## உம்.

1. எதிர்மறைவிகுதி=படியும்.
2. எதிர்-வினைமுற்றுவிகுதி=படிக்கும்.
3. எதிர்-பெயரெச்சவிகுதி=படிக்கும்பையன்.

## ஏ.

1. வினை=ஏவினுன்.
2. சாரியை=இரண்டேகால்.

## ஐ.

1. இரண்டனுருபு=வீட்டை.
2. மு. ஒ. வினைமுற்றுவிகுதி=தந்தனை.
3. தொழிற்பெயர்விகுதி=கொலை
4. பண்புப்பெயர்விகுதி=தொல்லை.

### கு.

1. நான்கனுருபு=உனக்கு.
2. சாரியை=ஆகும்.
3. பண்புப்பெயர்விகுதி=நன்கு.
4. தொழிற்பெயர்விகுதி=போக்கு.

### சி.

1. பண்புப்பெயர்விகுதி=மாட்சி.
2. தொழிற்பெயர்விகுதி=மீட்சி.

### தி.

1. ஒருமைஏவல்விகுதி=வருதி.
2. தொழிற்பெயர்விகுதி=மறதி.

### பு.

1. பண்புப்பெயர்விகுதி=நண்பு.
2. தொழிற்பெயர்விகுதி=நட்பு.

### வி.

1. தொழிற்பெயர்விகுதி=தோல்வி.
2. பிறவினைவிகுதி=கொல்வி.

### ன்.

1. ஆண்பால்விகுதி=மகன்.
2. சாரியை=கோன்.

# B.

## மாணாக்கர் சந்தேகப்படத்தக்கவைகள்.

1. குற்றுகரம் & முற்றுகரம்.
   *See Sutram 22 Notes.*
2. அல்வழிப்புணர்ச்சி & இயல்புப்புணர்ச்சி.
   *See Sutrams 51 & 57.*
3. பண்புத்தொகை & இருபெயரொட்டுப்பண்புத்தொகை.
   *See Sut. 53.*
4. அடுக்குத்தொடர் & இரட்டைமொழி.
   *See Sutrams 169 & 170.*
5. பண்புச்சொல் & உரிச்சொல்.
   *See Sut. 165.*
6. பெயரெச்சம் & பெயருரி.
   *See Sutrams 140 & 165.*
7. வினையெச்சம் & வினையுரி.
   *See Sutrams 133 & 165.*
8. ஏவல்வினை & முன்னிலைவினை.
   *See Sutrams 128 & Table of 27 verbs.*
9. குறிப்புவினைமுற்று & பெயர்ப்பகுபதம்.
   *See Sutrams 114 & 36 a.*
10. பெயரிடைநிலை & வினையிடைநிலை.
    *See Sutrams 38 & 39.*
11. திசைச்சொல் & திரிசொல்.
    *See Sutrams 89 & 91.*
12. தொழிற்பெயர் & தொழிலாகுபெயர்.

13. தொழிற்பெயர் & தொழிலடிப்பெயர்.
*See Sutrams 151 & 36 a.*

14. முதனிலைத்தொழிற்பெயர் & முதனிலைதிரிந்ததொழிற்பெயர்.
*See Sut. 152 & 153.*

15. சந்தி & விகாரம்.
*See Sutrams 46 & 47.*

16. வினைத்தொகை & பெயரெச்சம்.
*See Sutrams 52 & 140.*

17. துணைவினை & குறைவினை.
*See Pope's II Gram.*

18. இசைநிறை & அசைநிலை.
*See Sutram 159.*

19. அடைமொழி & உரிச்சொல்.
*See Sutrams 171 & 165.*

20. உடம்படுமெய் & எழுத்துப்பேறு.
*See Sutrams 59 & 60 c.*

## C.

மொழிகளில் ல, ழ, ள; ர, ற; ண, னக்கள் மாறி வருவதினால் உண்டாகும் பொருட்பேதங்கள்.

அண்ணம்=மேல்வாய்
அன்னம்=ஓர்பட்சி
அரம்=ஓராயுதம்
அறம்=தர்மம்
அரி=விஷ்ணு
அரி=வெட்டு
அறி=தெரிந்துகொள்
அரிவை=பெண்
அறிவை=அறிவாய்
அவல்=தின்பண்டம்
அவள்=பெண்
அலகு=பறவைமூக்கு
அழகு=சிறப்பு
அளகு=பெட்டை
அலி=பேடி
அழி=கெடு
அளி=கொடு, வண்டு
ஆணி=முளை
ஆனி=ஓருமாதம்
ஆழம்=பள்ளம்
ஆலம்=விஷம்
ஆல்=ஆலமரம்
ஆள்=மனிதன்
இர=பிச்சையெடு
இற=சா
இரை=தீனி
இறை=தீர்வை

இழை=நூல்
இளை=மெலி
உரம்=எரு
உறம்=பலம்
உரல்=இடிக்குஞ்சாமான்
உறல்=பொருந்துதல்
உரை=சொல் Verb தேய்
உறை=கூடு
உறை=இறுகென்னேவல்
உல்லம்=ஓர்மீன்
உள்ளம்=மனம்
உழு=பண்படுத்து
உள=உண்டு
உறி=தூக்குங்கயிறு
உரி=உரிச்சொல்
ஊண்=சாப்பாடு
ஊன்=மாமிசம்
ஊரி=ஊர்ப்பெண்
ஊறி=பெருகி
எரி=தீ
எறி=வீசிறு
எல்=பிரகாசம்
எள்=ஓர்தானியம்
ஏரி=வாவி
ஏறி=மேலெழும்பி
ஏரும்=கலப்பையும்
ஏறும்=மேலெழும்பும்

ஒன்ளூர்=பகைவர்
ஒரு=ஒன்றான
ஒரு=வெறு
ஒலி=சப்தம்
ஒழி=மறைந்துகொள்
ஒளி=பிரகாசம்
கர=ஒழி
கற=பால்கற
கரி=யானை
கறி=மாமிசம்
கருப்பு=பஞ்சம்
கறுப்பு=கரிய
கரை=ஓரம் Verb உப்புக்கரை
கறை=மாசு, அழுக்கு
கலம்=ஓரளவு
களம்=தானியமடிக்குமிடம்
கலி=ஓர்யுகம்
கழி=நீக்கு
களி=கள்ளு
கலை=சாஸ்திரம்
களை=புல்
காலை=உதயம்
காளை=எருது
கீல்=ஓர்வஸ்து
கீழ்=கீழே
குளம்பு=குதிரைக்காலில்
குழம்பு=பதார்த்தம்
குரங்கு=ஓர்மிருகம்
குறங்கு=தொடை
குறை=வெட்டு
குரை=குலை (நாய்)

குறுகு=சிறுகு
கூரிய=கூர்மையான
கூறிய=சொல்லிய
கூலி=சம்பளம்
கூளி=பசாசு
கொல்லை=தோட்டம்
கொள்ளை=களவு
கொல்லு=சாகவை
கொள்ளு=வ[illegible]
கோலி [illegible] மண்ணுருண்டை
கோழி=பட்சி
கோளி=பூவாதுகாய்க்கும்
கோல=தடி
கோள்=அவதூறு
சவலை=மெலிவு
சவளை=வங்கமணல்
சாணி=பெண்
சாணி=மாட்டுச்சாணி
சிரை=நரம்பு
சிரை=சவரஞ்செய்
சிறை=காவற்கூடம், சிறகு
சுண்ணம்=சுண்ணாம்பு
சுன்னம்=வட்டம்
சுரை=[illegible]
சுறை=[illegible]
சூலை=ஓர் வியாதி
சூளை=கற்சுடுமிடம், வேசி
தரி=அணி
தறி=நெசவுகருவி
தறி=வெட்டு
தலம்=இடம்